# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 340 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 15, திங்கட்கிழமை 31.10.2016


முச்சந்தி முரளி



எப்பவுமே அவை பெரும்பான்மையோடதான் நிப்பினம் போல....

# முஸ்லிம் தலைமை மீது சம்பந்தன் கடும் சாடல்

## வடக்கு – கிழக்கு இணையாவிட்டால் கிழக்கு பறிபோகும் எனவும் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 31

நாம் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள இராஜதந்திர ரீதியில் போராடி வருகின்றோம். இதில் முஸ்லிம் தலைவர்களின் பங்களிப்பை நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அது கிடைக்கவில்லை. கடந்த ஆட்சியில், ஜெனிவாத் தீர்மானத்தை வளைகுடா நாடுகளின் ஆதரவுடன் நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியில் முஸ்லிம் தலைவர்கள் ஈடுபட்டார்கள்.

மாகாண சபைகள் ஒன்றாக இணைக்கப்படா விட்டால் கிழக்கு >> 23



## 454 ஏக்கர் காணி வலி. வடக்கில் இன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து 454 ஏக்கர் நிலப்பரப்பு பொது மக்களிடம் இன்று கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களில், காணிகள் இல்லாதவர்களுக்கு, வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. மாவிட்டபுரத்தில் இன்று மாலை 3 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

தலைமை அதிதியாகப் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால >> 23

## விடுவிக்கப்படும் பகுதிகளில் படை முகாம்கள் இருக்கும்

### யாழ். தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படும் 454 ஏக்கரில், பொதுமக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினரின் இரண்டு முகாம்கள் தொடர்ந்தும் இருக்கும்.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

'பொதுமக்களின் பயன்பாட்டுக்காக விடுவிக்கப்படவுள்ள காணிகள் அடங்கியுள்ள பிரதேசத்தில் இராணுவத்தின் இரண்டு முகாம்கள் இருக்கும். இந்தப் பிரதேசத்தில் இராணுவத்தினருடன் சேர்ந்து வாழ்வதற்கு பொதுமக்கள் >> 23

### மாணவர்கள் படுகொலை

## பொலிஸாரின் துப்பாக்கிகள் பகுப்பாய்வுக்கு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலைச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்ட துப்பாக்கிகள் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸாரில் 3 பேர் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டு, குற்றம் நடைபெற்ற இடம் >> 23

## அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கு டில்லி வலியுறுத்து

கொழும்பு, ஒக். 31

புதிய அரசமைப்பில் எல்லா இலங்கையர்களினதும் வேணவாக்களை நிறைவேற்றும் வகையில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று கொழும்பு அரசிடம், புதுடில்லி கோரிக்கை விடுத்துள்ளதாக ஐலண்ட் ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

“அதிகபட்ச அதிகாரங்களைப் பகிரும் வகையில் >> 23

## கூட்டாட்சித் தீர்வை எதிர்ப்பது முஸ்லிம்களுக்கும் எதிரானது

### அமைச்சர் றிசாத்தின் கருத்துக்கு சுமந்திரன் எம்.பி பதில்



கொழும்பு, ஒக். 31

கூட்டாட்சியை எதிர்க்கும் நிலைப் பாடானது தமிழ் மக்களுக்கு எதிரானது மாத்திரம் அல்ல, முஸ்லிம் மக்களுக்கும் எதிரானதுதான். மன்னார் மாவட்ட முஸ்லிம் பிரதிநிதி, கூட்டாட்சிக்குத் தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். அரசைத் திருப்திப்படுத்த அவர் அதனைச் செய்யலாம். >> 23

## மக்களிடம் தவறான கருத்துக்களை சில அரசியல்வாதிகள் பரப்புகின்றனர்

### யாழ். தளபதி மகேஸ் சேனநாயக்க குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 31

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா போன்றோர் சிறந்த அரசியல் தலைமைகளாக இருக்கின்ற அதேவேளையில், ஒரு சில அரசியல்வாதிகள் வாக்குகளுக்காக மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர்.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத் >> 23

## லசந்த படுகொலை

### 12 இராணுவப் புலனாய்வு அதிகாரிகளிடம் விசாரணை

கொழும்பு, ஒக். 31

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக் கிரமதுங்க படுகொலை தொடர்பாக 12 இராணுவப் புலனாய்வு அதிகாரிகளிடம் விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுப் பிரிவு, இராணுவப் புலனாய் வுப் பிரிவிடம் அனுமதி கோரி யுள்ளது.

லசந்த படுகொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், இந்தச் சம்பவம் தொடர்பாக 12 இரா ணுவப் புலனாய்வு அதிகாரிகளிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இவர்களை விசாரணை செய்து வாக்கு மூலங்களைப் >> 06

## நீதிமன்றத்தின் ஊடாக புத்தர் அகற்றப்படுவார்

### ஹக்கீம் தெரிவிப்பு

அம்பாறை, ஒக். 31

அம்பாறை, இறக்காமம் – மாணிக்கமடுப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை புதிதாக வைக்கப்பட்ட புத்தர் சிலையை நீதிமன்றத்தின் ஊடாக அகற்ற நடவடிக்கை எடுப்பதாகத் தெரி வித்துள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம், இந்த விட யத்தில் தமிழ் மக்கள் ஆத்திரப்படவோ ஆவேசப்படவோ கூடாது என்றும் கேட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாணிக்கமடுப் பகுதியில் நேற்று முன்தினம், பௌத்த பிக்குகளால் புத்தர் சிலை வைக்கப்பட்டது. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறியே புத்தர் >> 24



## படை முகாமிருந்த பகுதியில் மனித எச்சங்கள் நேற்று மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 31

மட்டக்களப்பு மாவட்டத்தின் முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் முன்னர் இராணுவம் இயங்கிய பகுதியில் மனித எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட் டது.

முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் அமைந்துள்ள இரா ணுவ முகாமின் பகுதி அண்மையில் விடுவிக்கப்பட்டது. அவ்வாறு விடுவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான மாரியம்மன் கோயிலுக்கு முன்னால் >> 06

## பிரபாகரன் படை என்ற பெயரில் துண்டுப்பிரசுரங்கள் யாழ்.நகரில்

யாழ்ப்பாணம், ஒக். 31

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் உடனடியாக இடமாற்றம் பெற்று வெளி மாவட்டங்களுக்கு செல்லுமாறு வலியுறுத்தி 'பிரபாகரன் >> 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணத்தின் அனைத்து அம்மன் ஆலயங்கள் மற்றும் சிவன் ஆலயங்களில் இந்துக்களின் விரதங்களில் ஒன்றான கேதார கௌரி விரத காப்பு கட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றன. பெண்கள், ஆண்கள் என இருபாலாரும் ஆலயங்களுக்கு வருகை தந்து வழிபாட்டில் ஈடுபட்டனர். திருமணமான பெண்கள் தமது மாங்கல்யப் பாக்கியம் நிலைத்திருக்க வேண்டியும் கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல கணவர் வாழ்க்கைத் துணையாகக் கிடைக்க வேண்டியும் இருபத்தொரு தினங்கள் கேதாரகௌரி விரதம் அனுஷ்டிப்பது வழமையாகும்.
ஆலயங்களில் சிறப்பு பூஜை நிகழ்வும் அதனைத் தொடர்ந்து கௌரிவிரதத்தின் இறுதி நாளான நேற்று காப்புக் கட்டும் நிகழ்வும் இடம் பெற்றன. சிவன், அம்பிகை சமேதராக அர்த்த நாரீஸ்வரர் வடிவமாக இடப வாகனத்தில் எழுந்தருளிப் பக்தர்களுக்கு அருட் காட்சியளித்தார். அதனைத் தொடர்ந்து கேதார கௌரிவிரதக் காப்புப் பாடல் ஓதுதலும் நடைபெற்றது. இந்த உற்சவ நிகழ்வில் நூற்றுக் கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். (ந-4,8)

## இணையத் தளத்துக்குத் தடை

கொழும்பு, ஒக். 31
வடக்கில் நீதித்துறை தொடர்பான பொய்யானதும், அவதூறானதுமான செய்திகளை வெளியிட்டு வந்த தமிழ் இணையத்தளம் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் நேற்று முன்தினம் தடை செய்யப்பட்டது.
ஊடகத்துறை மற்றும் நீதி அமைச்சுக்களின் முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் சுனில் சிறிலால் தெரிவித்தார்.
வடக்கில் நீதித்துறையின் முடிவுகள் குறித்து பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாகவும், நீதிபதிகள், சட்டத்தரணிகள் குறித்து அவதூறான செய்திகளை வெளியிடுவதாகவும், வடக்கில் பொது மக்களைத் தூண்டி விடும் வகையில் செயற்படுவதாகவும், இந்த இணையத்தளம் மீது முறைப்பாடுகள் செய்யப்பட்டன.
இணையத்தளம் ரெலிகொம் இணைய வழங்கி சேவையைப் பயன்படுத்தி வந்துள்ளது. முறைப்பாடுகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஊடக அமைச்சு ஆகியன மேற்கொள்ளும் விசாரணைகள் முடியும் வரை அந்த இணையத் தளம் தடை செய்யப்பட்டுள்ளது என்று தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் தெரிவித்தார். எனினும் இணையத் தளத்தின் பெயரை அவர் வெளியிடவில்லை.
இணையத்தளத்தில் வெளியான அவதூறுச் செய்திகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கோரி வடக்கில் உள்ள சட்டத்தரணிகள் கடந்த வாரம் வழமை ஒறுப்பு போராட்டம் மேற்கொண்டனர்.
இதேவேளை, கடந்த ஆண்டு புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் தடை செய்யப்பட்ட முதல் இணையத்தளம் இது வாகும். (வ-5)

## நல்லாட்சி நடவடிக்கையில் சந்தேகமே ஏற்படுகின்றது

– கருணாகரம் தெரிவிப்பு

இணைந்த வடக்கு கிழக்கில் நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்று சுயாட்சியுடன் எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய போதிலும் நல்லாட்சி அரசை சந்தேகக் கண் கொண்டு நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.
ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலும், இராணுவத்தினரின் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் விடு தலை செய்யப்படவில்லை. மாறாக பன்னாட்டு மட்டத்தில் இலங்கையின் நற்பெயரை காப்பாற்றும் நோக்குடன் அரசு செயற்படுகின்றது.
மன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையில் பாலம் அமைப்பதற்கு இந்தியா முயற்சி செய்கின்ற போதிலும் அரசு அதற்குத் தடையாக விளங்குகிறது – என்றார். (ந-4)




# கறுப்புக் கொடிகள் கட்டி முஸ்லிம்கள் கவனவீர்ப்பு

வடக்கிலிருந்த முஸ்ஸிம் மக்கள் வெளியேறி நேற்றுடன் 26 வருடங்கள் பூர்த்தியாகின. அதை நினைவுகூரும் வகையில் யாழ். மாவட்ட முஸ்ஸிம் மக்கள் தமது தற்காலிக வீடுகள் மற்றும் பொது இடங்களில் நேற்றுக் கறுப்புக் கொடி கட்டி பறக்க விட்டதோடு வாகனங்களிலும் கறுப்பு கொடிகளைப் பறக்கவிட்டனர்.
இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது:
1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி நாம் இங்கிருந்து வெளியேறினோம். மீள மெல்லத் திரும்பி வருகின்றபோதும், எமக்கு இன்றுவரை எவ்வித வசதிகளும் ஏற்படுத்தித் தரவில்லை. எமது மீள் குடியேற்றமும் நடை முறைப்படுத்தப்படாமல் இழுபறி நிலையிலேயே காணப்படுகின்றது. பல ஆண்டுகளாக கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் நாம் இன்றும் தற்காலிக வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றோம்.
எமது பிள்ளைகளுக்கான எதிர்காலம் இந்த மண்ணில் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. எமது வாழ்வாதாரம் பற்றி யாரும் அக்கறை கொள்ளாத நிலையே காணப்படுகின்றது.
வட பகுதியில் வாழும் முஸ்லிம்களின் நலனில் அக்கறையற்ற நிலையிலேயே இங்குள்ள அரசியல் தலைமைகளும் இருக்கின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு தான் நாம் இப் பிரதேசங்களில் வெளியேற்றப்பட்ட நாளில் எமது போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.
நாம் எமது போராட்டத்தை அகிம்சையாகவும் அரசியல் தலைமைகள் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் நாம் வாழும் பிரதேசங்களில் கறுப்புக்கொடிகளையும், பதாகைகளையும் தொங்க விட்டுள்ளோம். இங்குள்ள அரசியல் தலைமைகள் இதனைக் கருத்திற் கொண்டு இனியாவது எமக்குரிய மீள் குடியேற்றம், வாழ்வாதார உதவிகள் என்பனவற்றை பாரபட்சமின்றி முன் னெடுக்க வேண்டும் – என்றனர். (ந-4,8)

## மாணவியின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
உயர்தர வகுப்பு மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.
அவர் தொடர்ச்சியாக அலைபேசி பாவிப்பார். நேற்றுமுன்தினம் வீட்டுக்காரர் அலைபேசியைப் பறித்து வைத்துள்ளனர். இந்த நிலையிலேயே அவர் தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டார். அவர் உடனடியாக சாவகச்சேரி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. சாவகச்சேரி கிராம்புவில் பகுதியைச் சேர்ந்த 17 வயது மாணவியே இவ்வாறு தூக்கில் தொங்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,9)

## வாள்களுடன் பயணித்த இருவர் கொக்குவில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் நேற்றைய தினம் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் வாள் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.
யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வீதியில் வாள் இரண்டை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.
அதன்போது, தாம் நாடக கலைஞர்கள் எனவும், நாடகம் ஒன்றிற்காகக் கொண்டு செல்லப்பட்ட வாள்களே இவை என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவர்கள் விசாரணையில் உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,101)

## வாள்வெட்டுக்கு இலக்காகி 4 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 31
கிளிநொச்சியில் தீபாவளி திருநாளான நேற்றுமுன்தினம் வெவ்வேறு சம்பவங்களில் 4 பேர் வாள்வெட்டுக்கு இலக்காகி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல், மதுபோதை மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் சம்பந்தமான கைகலப்புக்களில் இந்த 4 பேரும் வாள்வெட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.
சனிக்கிழமை இரவு 8 மணிக்கும் 10 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சம்பவம் இடம்பெற்றது. குறித்த வாள்வெட்டு சம்பவங்கள் கிளிநொச்சி கோணாவில் ,பாரதிபுரம் ஊற்றுப்புலம் ,செல்வாநகர் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றன. இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-4,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து அனுமதிப் பத்திரக் கட்டணம் நாளை முதல் அரைவாசியாகக் குறைப்பு

## வடக்கு அமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வழங்கப்படும் தற்காலிக போக்குவரத்து அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது. புதிய அனுமதிப் பத்திரங்களை இன்றைய தினம் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் இரண்டாவது அமர்வு, கடந்த வாரம் போக்குவரத்து அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயத்தை அமைச்சர் தெரிவித்ததாக, அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் தொடர்பில் மாவட்டச்செயலர்கள் மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளையும் நாளை முதலாம் திகதி தொடக்கம், போக்குவரத்து அதிகார சபை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் தற்காலிக அனுமதிப் பத்திரத்துக்காக மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா செலுத்தி வருகின்றனர். அந்தக் கட்டணம் நவம்பர் மாதத்திலிருந்து சரிபாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்துக்கான அனுமதிப் பத்திரங்களை, இன்று திங்கட்கிழமை புதுப்பித்துக் கொள்ள முடியும். கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள், கரைச்சிப் பிரதேச செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு சமுகம் கொடுப்பதன் மூலமும், முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு பி.ப. 2 மணிக்கு சமுகம் கொடுப்பதன் ஊடாகவும் இதனைப் புதுப்பித்துக் கொள்ள முடியும். புதுப்பிக்கச் செல்கின்றபோது பொருத்தமான ஆவணங்களை கோவைப்படுத்தி எடுத்துச்செல்ல வேண்டும்.

போக்குவரத்து அதிகார சபைக்கான நிரந்தர ஆளணி மற்றும் அலுவலகம் உருவாக்கப்படும் வரை இதுவரையும் மாவட்டச் செயலகத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழங்கிய இடத்தைத் தொடர்ந்து வழங்குமாறும், மாவட்டச் செயலர்களை அமைச்சர் கோரியுள்ளதாக, அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)



# நுரைச்சோலையில் செயலிழந்த மின்பிறப்பாக்கி சீரமைக்கப்பட்டது

கொழும்பு,ஒக்.31
நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் செயலிழந்த மின் பிறப்பாக்கி ஒன்று திருத்தப்பட்டுள்ளதால் அதிலிருந்து பெறப்படும் 300 மெகா வோட் மின்சாரம் இன்று தொடக்கம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

செயலிழந்துள்ள ஏனைய மின் பிறப்பாக்கிகளின் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மின்பிறப்பாக்கிகள் செயலிழந்தமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணையின் அறிக்கை விரைவில் பெற்றுக்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நுரைச்சோலை அனல் மின்உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாடு முழுவதும் மின்சார விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (வ- 4)

# கிளிநொச்சி பொலிஸின் நடமாடும் சேவை நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஒக்.31
கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசச் செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணையில் தருமபுரம் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் நேற்றுச் சிறப்பு பொலிஸ் நடமாடும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாகவும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் வழிநடத்தலில் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையில் நேற்று மாலை புளியம்பொக்கணை கிராம அலுவலர் பிரிவு பொது மண்டபத்தில் இந்த பொலிஸ் நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

புளியம்பொக்கணை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பொலிஸ் ஆவணங்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களுக்கு இந்த நடமாடும் சேவையில் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ச நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தார். இதில் சிவில் பாதுகாப்பு குழு பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்

இவ்வாறு கிளிநொச்சியில் பளை, இராமநாதபுரம் பகுதிகளிலும் பொலிஸ் நடமாடும் சேவை நேற்று ஆரம்பமானது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-35)

# சீருடைத்துணி வவுச்சர் நவம்பரில் விநியோகம்

கொழும்பு, ஒக்.31
பாடசாலை மாணவர்களின் சீருடைத் துணிக்கான வவுச்சர் அடுத்த மாதம் விநி யோகிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

அடுத்த ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கும்போது புதிய சீருடையோடு மாணவர்கள் பாடசாலைகளுக்கு வரவேண்டும் என்பதற்காக, முன்னதாகவே இலவச சீருடைக்கான வவுச்சர்களை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற)

# திருச்செந்தூர் புராண படிப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.31
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் கந்தசஷ்டியை முன்னிட்டு திருச்செந்தூர்ப் புராணபடலப் படிப்பு இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு சிறப்பு வழிபாடுகளுடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த புராணபடலப் படிப்பு எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முழுக்கு, சிறப்பு வழிபாடுகள் என்பனவற்றுடன் நிறைவுபெறும். நண்பகல் மகேஸ்வர வழிபாடு இடம்பெறும். கந்த சஷ்டி விரதமிருப்போர் இந்தப் புராணபடல படிப்பு பயன்களைக்கேட்டு அருள்பெற முடியும் என்று ஆலய பரிபாலன சபை கேட்டுள்ளது. (வ-17)

# யாழ். பல்கலை. மாணவர்களை இன்று சுவாமிநாதன் சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஒக்.31
யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளுக்கும், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுக்கும் இடையில் இன்று பேச்சு நடைபெறவுள்ளதாக, பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக்கழக மாணவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களும் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணத்துக்கு இன்று மாலை வருகை தரவுள்ளார். அதற்கு முன்னதாக, மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளை யாழ். பல்கலைக் கழகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இன்று காலை நடைபெறும் பேச்சுக்களின் போது பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது. (வ-5-101)

# புத்தளம் கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரிகள் சகலருக்கும் அதிரடி இடமாற்றம்

## கையூட்டல் பெற்ற குற்றச்சாட்டை அடுத்து

புத்தளம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

“புத்தளம் பிரதேசத்தில் அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்திய மீனவர்களுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. புத்தளம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக் களத்தால் சுருக்கு, லைலா வலைகள் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பாவிக்கும் மீனவர்களின் படகுகள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. எனினும் அவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைத்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் படுவதில்லை. மாறாக மீனவர்களிடம் கையூட்டைப் பெற்றுக் கொண்டு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் அவற்றை விடுவிக்கின்றனர். பேச்சுக்களில் கலந்துகொண்ட மீனவர்கள் என்னிடம் முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய நான் புத்தளம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் பணிபுரியும் அனைத்து அதிகாரிகளையும் இடமாற்றம் செய்யுமாறு உத்தரவிட்டேன்” என்று அமைச்சர் தெரிவித்தார். (வ-5)

# மன்னாரில் சில பகுதிகளுக்கு இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஒக்.31
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் மன்னாரில் சில இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

நானாட்டான், எருவிட்டான், அறுகுக் குன்று, அச்சங்குளம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும்.(வ-10)

# பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு வழங்க மாட்டோம்

## வடக்கு புகையிரதக் கடவைக் காப்பாளர் சங்கம் தெரிவிப்பு

வவுனியா, ஒக்.31
நல்லாட்சி அரசால் திட்டமிட்ட வகையில் ஏமாற்றப்பட்டுள்ளோம். அதனால் நாளை இடம்பெறவுள்ள ரயில் கடவைக் காப்பாளர் பணிப்புறக் கணிப்புக்கு வட கிழக்கு புகையிரதக் கடவைக் காப்பாளர்கள் ஆதரவளிக்க மாட்டார்கள்.

இவ்வாறு வடக்கு புகையிரதக்கடவைக்காப்பாளர் சங்க தலைவர் றொகான் தெரிவித்தார்.

சம்பள உயர்வு உட்பட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாளை புகையிரதக் கடவைக் காப்பாளர்கள் பணிப் புறக்கணிப்பு நடத்தவுள்ளனர். அது குறித்துக் கருத்துத் [illegible] அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மதவாச்சிக்கு அப்பால் நாளை மேற்கொள்ளப்படும் பணிப்புறக்கணிப்புக்கு வடக்கு, கிழக்கில் உள்ள புகையிரதக் கடவைக் காப்பாளர்கள் ஆதரவு வழங்கவில்லை. நாம் நியாயமான பணிப் புறக்கணிப்பை மேற்கொள்[illegible]போது எமக்கு [illegible] ஆதரவு வழங்கவில்லை. நாம் மேற்கொண்ட பணிப் புறக்கணிப்பின்போது அரசு பலவித உடன்பாடுகளுக்கும் வந்தது. ஆனால் இறுதியில் எமக்கு சாதகமான முடிவு கிடைக்கவில்லை. நாம் திட்டமிட்ட வகையில் நல்லாட்சி அரசால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளோம்.

வடக்கு, கிழக்கிலுள்ள அரசியல் தலைமைகள் எமக்கு முழு ஆதரவை வழங்கவில்லை. இனி வரும் காலங்களில் நாம் பணிப் புறக்கணிப்பு மேற்கொள்வதில் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளதால் நாளை இடம்பெறவுள்ள புகையிரதக் கடவைக் காப்பாளர்களின் பணிப்புறக் கணிப்புக்கு வடக்கு, கிழக்கிலுள்ள புகையிரதக் கடவைக் காப்பாளர்கள் ஆதரவு வழங்கவில்லை-என்றார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பொலிஸ் நிலையங்களை அமைப்பதே எதிர்கால நோக்கம்

## வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

வவுனியா, ஒக்.31
பொலிஸ் நிலையங்கள் இல்லாத மக்கள் நிறைந்த பகுதிகளில் நடமாடும் சேவையை விஸ்தரித்து காலப்போக்கில் அங்கு மக்கள் பொலிஸ் நிலையங்களை நிறுவுவதே எனது நோக்காகும்.

இவ்வாறு வன்னி மாவட்ட பிரதிபொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

வவுனியா கதிரவேலர் பூவரசங்குளம் பகுதியில் உள்ள கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கதிரவேலர் பூவரசங்குளம், பாலமோட்டை, மருதமடு பிரதேச மக்களுக்கான பொலிஸ் நடமாடும் சேவையில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மக்கள் பிரச்சினைகளை இனங்கண்டு அதனை இலகுவாக தீர்ப்பதற்கு முதற்கட்ட நடவடிக்கையாகவே இந்த நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளேன். ஒரு மாதத்துக்கு ஒரு முறையேனும் பொலிஸ் நிலையம் அற்ற பகுதியில் உள்ள மக்களின் பிரச்சினையை இனம் காண நடமாடும் சேவை நடத்தப்படும். அதன் முதற்கட்ட நடவடிக்கையே இதுவாகும். அதில் பொதுமக்களின் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவை பதிவு செய்யப்படும். இந்த நடமாடும் சேவையின் போது சமயநிகழ்வுகளை நடத்துதல், கலைநிகழ்சிகள் நடத்துதல், வைத்தியசேவையை நடத்துதல், பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வு வழங்கல், விளையாட்டு நிகழ்வை நடத்துதல், சிரமதானப் பணியை முன்னெடுத்தல் உள்ளிட்ட பணிகளை நடைமுறைப்படுத்தவுள்ளேன். எல்லாவற்றுக்கும் மேலாக வன்னியில் குற்றச்செயல்களை மட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரை உரிய முறையில் பயன்படுத்தவுள்ளேன். அதற்காக இது போன்ற நடமாடும் சேவையை விஸ்தரித்து அங்கு காலப் போக்கில் மக்கள் பொலிஸ் நிலையங்களை நிறுவுவதே எனது நோக்காகும். இதன் மூலம் பொதுமக்களுக்கும் பொலிஸருக்குமிடையிலான நெருக்கம் அதிகரிக்கும் என்று நம்புகின்றேன். -என்றார்.



நிகழ்வில் வவுனியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் வெலிகம, ஓமந்தை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சமன்குமார, ஓமந்தை சிவில் பாதுகாப்பு குழுத்தலைவர் க.ஆனந்தராஜா, ஓமந்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் இணைப்பு செயலாளர் சு.வரதகுமார், ஓமந்தைக் கிராம அலுவலர் திருமதி செ.அனுசிய, மருதமடு கிராம அலுவலர் சி.உமாபதி, நா. நந்தகோபாலன், ஓமந்தை உயர் தொழில்நுட்பக்கல்லூரி இணைப்பாளர் இளங்குமரன் பாலமோட்டை, மருதமடு, கதிர்வேலர் பூவரசங்குளம், பகுதிமக்கள், ஓமந்தை பொலிஸார் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற21,402)

### சிறுநீரக நோய் தொடர்பில் சீனாவுடன் ஒப்பந்தம்

கொழும்பு, ஒக். 31
நாட்டில் சிறுநீரக நோய் அதிகரித்துள்ள நிலையில் நோய்க்கான காரணத்தை கண்டறிவதற்காக சீனாவுடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சிறுநீரக நோய் 12 மாவட்டங்களுக்கு தற்போது பரவலடைந்துள்ளது. இந்தநிலையிலேயே குறித்த ஒப்பந்தம் சில நாள்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண, சீன விஞ்ஞான ஆய்வுகூட நிறுவகத்தோடு இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளார் என்று சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுநீரக நோய்க்காக உரிய காரணத்தை ஆராய்தல், இலங்கையின் சுகாதார சேவையின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதும் இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராயும் பொருட்டு சீனப் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை வரவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற-4)

### வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சைகள் - 2017

வட இலங்கைச் சங்கீத சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பப் படிவங்கள் 2016.11.02 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 2016.11.30 ஆகும். விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் வங்கிப் படிவம் உட்பட 70/= ரூபா (எழுபது) மட்டும்.

இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் பரீட்சைக் கட்டணத்தை சபையினால் வழங்கப்படும் படிவத்தையும் வங்கியினால் வழங்கப்படும் படிவத்தையும் பூரணப்படுத்தி அதற்குரிய பணத்தினைச் செலுத்தி வங்கியினால் வழங்கப்படும் படிவம் ஒன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

யாழ் மாவட்ட தேர்வு நாடிகள் தமக்கு வேண்டிய விண்ணப்பப்படிவங்களைப் வட இலங்கைச் சங்கீத சபை கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம். சுன்னாகம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

(C 23024) (14,17,18) செயலாளர்.

## வட்டுப்பித்தான் மடுக் கிராமத்தில் சிறப்புப் பொலிஸ் நடமாடும் சேவை



மன்னார், ஒக்.31
மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டுப்பித்தான் மடு கிராமத்தில் விசேட பொலிஸ் நடமாடும் சேவை நேற்று வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் வழி நடத்தலின் கீழ் மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் சிரந்த பீரிஸ் தலைமையில் புதுக்கமம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட வட்டுப்பித்தான் மடு பொது மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

குறித்த பகுதியைச் சேர்ந்த மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டே நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரையிலான ஒரு மாத காலம் இந்த நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது. பிரதேச மக்கள் புதிய முறைப்பாடுகளை பதிவு செய்தல், முறைப்பாடுகளை விசாரணை செய்தல் போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். நடமாடும் சேவையூடாக சிரமதான நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், கல்வி சார் நிகழ்வுகள், கலாசார நிகழ்வுகள், சுகாதார நிகழ்வுகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் என்பன குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் விருந்தினராக மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் சிரந்த பீரிஸ், மன்னார் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி பிரசன்ன பண்டார, கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்புக் குழு பிரதி நிதிகள், மன்னார் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற-21,56)

### பம்பலப்பிட்டி புடைவையகத்தில் தீ விபத்து

கொழும்பு, ஒக்.31
பம்பலப்பிட்டி ஹெவலொக் வீதியில் அமைந்துள்ள புடைவையகம் ஒன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயை தீயணைப்பு படையினர் மற்றும் மின்சார சபையினர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படாத நிலையில் கடையிலுள்ள பொருள்கள் முற்றிலும் தீக்கிரையாகியுள்ளன என்று கூறப்படுகின்றது.

தீ பரவியமைக்கான காரணம் மற்றும் சேதமடைந்த பொருள்களின் பெறுமதி இன்னும் கணக்கிடப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

### நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.31
வல்லிபுரக் கோயில் பொது மண்டபத்தில் பொலிஸாரின் நடமாடும் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றுவானால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நடமாடும் சேவை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் உள்ள கண்ணன் இல்லத்தில் ஒரு மாத காலம் நடைபெறும். துன்னாலை, குடத்தனை, அம்பன், மணற்காடு போன்ற பிரதேசங்களில் உள்ள மக்கள் இங்கு வந்து சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

சிறிய முறைப்பாடுகள், தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திர வரி அற வீட்டுப்பத்திரம், பதிவுச் சூன் நிதம் போன்ற முறைப்பாடுகளுக்கு உடனடி தீர்வு பெற்றுக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ற-4,26)

SUMITOMO
பாதுகாப்பானவை நம்பகரமானவை
உலகில் மிகப்பெரிய உற்பத்தி நிறுவனங்களின் ஒன்றான சுமிடோமோ ரப்பர் இன்டஸ்ரீஸினால் சுமிடோமோ டயர் உற்பத்தி செய்யப்படுகின்றது.



• அதிஉயர்தரம் • அதிகூடிய தூரம் • உயர் தொழில்நுட்பம் • ஸ்திரத்தன்மை • நவீன வடிவமைப்புகள்
யாழ் நகரில் உங்கள் தேவைக்கு
பொபியூலர் மோட்டர் ஸ்டோர்ஸ்
270, ஸ்டேன்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021-222 3535, 021-222 2403 பெக்ஸ்: 021-2223535
V.R. VADIVETKARASAN ENTERPRISES
271, Sea Street, Colombo - 11.
Tel: 0112 434 800, 2 435 732 Fax: 2 435 731

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருத்துவ சேவைப் பிரச்சினைகள் குறித்து ஆளுநருடன் மருத்துவர் மன்றம் பேச்சு

யாழ்ப்பாணம், ஒக்.31

வடக்கு மாகாணத்தில் மருத்துவ சேவைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண ஆளுநருடன் வடக்கு மாகாணமருத்துவர்மன்றப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர். ஆளுநர் அலுவலகத்தில் இந்த கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

அதில் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று ஆளுநர் உறுதியளித்தார் என வடமாகாண மருத்துவர் மன்றச் செயலாளர் ந.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் வடபகுதிக்கு சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரட்ன பயணம் செய்த போது வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியத் துறையிலுள்ள சகல தரப்பு உத்தியோகத்தர்களது 2013ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தை மாற்றியமைத்து தற்போதுள்ள சுகாதார தேவைக்கு ஏற்றவாறு புதிய பிரதிநிதித்துவப் பட்டியல் தயாரிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் எம்மால் விடுக்கப்பட்டது. அதை சாதகமாகப் பரிசீலித்த அமைச்சர் புதிய பிரதிநிதித்துவப் பட்டியல் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அதைத் துரிதப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆளுநரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை சாதகமாகப் பரிசீலிப்பேன் என்று அவர் உறுதியளித்தார்.

மருத்துவர்களுக்கு வழங்கப்படும் வருடாந்த வேதன ஏற்றத்துக்குரிய மதிப்பீட்டுப் படிவத்தில் கையெழுத்திடும்அதிகாரம்தலைமைச் செயலாளரிடம் உள்ளதால் மருத்துவர்களுக்கு வழங்கப்படும் வேதன ஏற்றம் கிடைப்பதில் நீண்ட இடைவெளி உள்ளது.

இதேநேரம் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர் கையொப்பமிடுவதால் அடுத்த மாதமே வேதன ஏற்றம் வழங்கப்படுகின்றது. இதைக் கருத்திற் கொண்டு வருடாந்த வேதன ஏற்ற மதிப்பீட்டுப் படிவத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கையொப்பமிடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆளுநரிடம்வேண்டுகோள்விடுத்த போது அது சாதகமான முறையில் பரிசீலிக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

வடபகுதியில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய குறைந்தபட்சம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சித்திய்யதிய மாணவர்களுக்கு தாதியர் பயிற்சியை வழங்கி அவர்களை வைத்தியத்துறையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வடபகுதியில் யாழ். மாவட்டமே அதிகளவு மக்கள் தொகையையும் அதிகளவு வைத்தியசாலைகளையும் கொண்ட மாவட்டமாகும். ஆயினும் மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சம அளவிலேயே நிதி ஒதுக்கீடு பகிரப்படுகின்றது. யாழ். மாவட்டத்திலுள்ள தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையும் மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் வருவதால் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய தேவையுள்ளது. யாழ். மாவட்டத்துக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதைச் சாதகமாகப் பரிசீலித்துஉரியநடவடிக்கை மேற்கொள்வேன் என்று ஆளுநர்உறுதியளித்தார்.

வடமாகாணத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கும் ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவுகளுக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்லது நிர்வாக உதவியாளர்களை நியமிக்க பிரதேச செயலகங்களிலிருந்து தற்காலிகமாகவேனும் நியமிப்பதற்குரியநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம்.

வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்களுக்கும் ஏனைய தரப்பு உத்தியோகத்தர்களுக்கும் உரிய விடுதி வசதியின்மையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரினோம்.

வடமாகாணத்திலுள்ள குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் கடமை புரியும் ஓய்வுபெற்று மீள் நியமனம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்களதும், பதிவு வைத்திய உத்தியோகத்தர்களதும் மேலதிக கடமை நேரக் கொடுப்பனவை வழங்குவதற்கும் உரிய நடவ டிக்கை மேற்கொள்ள வேண்டும்என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது -என்றார். (ற-21)



# சந்திர வட்டக்கல் கிளறப்பட்டு பொற்காசு திருட்டு என சந்தேகம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா,ஒக்.31

வவுனியா காட்டுப்பகுதியில் இருந்த சந்திரவட்டகல் ஒன்று கிளறப்பட்டு அதன் கீழிருந்த மன்னர் காலத்து பொற்காசுகள் களவாடப்பட்டுள்ளன என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இவ்வாறு வவுனியா ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலமோட்டை பறையாளங்குளம் காட்டுப்பகுதியில் மன்னர்கள் வாழ்ந்த பகுதி எனக் கருதப்படும் பகுதியில் சந்திர வட்டக்கல் ஒன்று உள்ளது. அதன் கீழ் ஆழமாகத் தோண்டப்பட்டு கிடங்கில் இருந்த பொற்காசுகள் எடுக்கப்பட்டுள்ளன. புதையல் தோண்டுபவர்கள்தான் இந்தக் காரியத்தை செய்திருக்க முடியும். இந்தக் காட்டுப் பகுதியில் உள்ள காணி தனியார் ஒருவருக்கு கடந்த 80 ஆண்டுகளுக்கு மேல் சொந்தமாக இருந்துள்ளது. இந்தப் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தொல்பொருள் ஆய்வாளர்களும் வந்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கியிருந்தனர். அங்கு புதையல் எதுவும் அவர்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை என்பதாலோ என்னவோ சில காலங்களின் பின்னர் இராணுவம் விலகிச் சென்றது. இந்த நிலையிலேயே கடந்த வெள்ளிக்கிழமை இரவு புதையல் தோண்டப்பட்டு கோடிக் கணக்கான பெறுமதியான பொற்காசுகள் எடுக்கப்பட்டுள்ளன- என்று அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

புதையல் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட பாலமோட்டை பறையாளங்குளம் காட்டுப்பகுதியிலே பல ஆண்டுகளாக இருந்த சந்திரவட்டக்கல் ஒன்று கடந்த வெள்ளிக் கிழமை கிளறப்பட்டுள்ளது. அந்த சந்திர வட்டக்கல்லின் கீழே ஆழமான கிடங்கு ஒன்று காணப்படுகின்றது. கிடங்கில் உடைந்த நிலையில் மன்னர் காலத்து மண் பானை ஒன்று காணப்படுகின்றது. இந்த பானையில் பொற்காசுகள் இருந்திருக்கலாம்.

எனவே தான் இது உடைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. அத்தோடு அங்கு இறந்தவர்களை அடக்கம் செய்த கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுகின்றன – என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (21,402)

# ஆசிரியர் நியமன ஆவணங்களை உடன் சமர்ப்பிக்குமாறு அறிவிப்பு

திருகோணமலை, ஒக்.31

வெளிமாகாணத்தில் ஆசிரியர் நியமனம் பெற்ற கிழக்கு மாகாணப் பட்டதாரிகளின் நியமனப்படிவங்களின் மூலப் பிரதியை உடனடியாக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களின் போது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 215 ஆசிரியர்கள் வெளி மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் நியமனங்கள் தொடர்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்களுக்கு கிழக்கு மாகாணத்திலேயே நியமனங்களை வழங்க அரசு சம்மதித்தது. அதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அதற்கமைய கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தால் ஆவணங்கள் சேகரிக்கப்படுகின்றன. நியமனத்தின் மூலப்பிரதி, குறித்த வெளி மாகாணத்தில் தாம் கடமையைப் பொறுப்பேற்கவில்லை என்ற கடிதம் மற்றும் அடையாள அட்டை போன்றவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-40)



# வெடிக்காத நிலையில் குண்டு மீட்பு

வவுனியா, ஒக்.31

வவுனியாவில் வெடிக்காத நிலையில் இருந்த குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தை பாலமோட்டை காட்டுப் பகுதியில் வெடிக்காத நிலையில் குண்டு காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் நேற்று மாலை ஓமந்தைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் குண்டை மீட்டு வெடிபொருள் செயலிழக்கச்செய்யும் பிரிவினரிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-402)

# முல்லையில் காணி இல்லாது சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் சொந்தக் காணிகள் இல்லாத சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. அந்தக் குடும்பங்களுக்குக் காணிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் .

இவ்வாறு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தைகிழக்கு, வெலிஓயா ஆகிய ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சொந்தக் காணிகள் இல்லாத நிலையில் பல குடும்பங்கள் உள்ளன. அந்தக் குடும்பங்கள் வீட்டுத் திட்டம் மற்றும் ஏனைய உதவித்திட்டங்களைப் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளன.

அவர்கள் தமக்குக் காணிகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:

அவர்களுக்கான காணிகளை மாவட்டச் செயலாளரால் வழங்க முடியாது. வழங்கக்கூடிய காணிகள் வனவளத் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருக்கின்றன.

உரிய முறைப்படி காணி [illegible] வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்-என்றார். (ற-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய
மாணவன்
செல்வன்
**கிளிமெத் அடம்கபிரியோ**
2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
**165 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல்கலையும் கற்று தன் வாழ்வில் உயர்வடைய பிரார்த்திக்கின்றோம்.

இவருக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் நன்றிகூறி வாழ்த்துகின்றோம்.

மகிழ்ந்து வாழ்த்துவோர் :
[illegible] (பிரான்ஸ்), தங்கை (கவ்லின்), தாத்தா - ஹாயிஸ் வின்ஸ் லோஸ், அம்மம்மா - [illegible]ஸ்யோகம், பெரியமம்மி குடும்பத்தினர் (சுவிஸ்), சின்னமம்மி குடும்பத்தினர் (லண்டன்) ,மாமா குடும்பத்தினர் (பிரான்ஸ்)

A/13, 3ஆம் குறுக்குத்தெரு, பாசையூர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சுப்பிரமணியம் (கந்தசாமி)



சரசாலை தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் கடந்த (28.10.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பொன்மலரின் பாசமிகு கணவரும் கஜீபன், பவுசிகா, புவிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.11.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெய்கண்டான் வீதி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(ஜே.5757)
(16.17.19)

தகவல்:
குடும்பத்தினர்.
077 5245810

### நாகலிங்கம்பிள்ளை ஜெயரத்தினசிங்கம்



அளவெட்டி கிழக்கு, கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு, பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம்பிள்ளை ஜெயரத்தினசிங்கம் நேற்று (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்பிள்ளை-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் ஜெயஜீவன் (ஆசிரியர்-யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி), விஜிதா (முகாமைத்துவ உதவியாளர்-வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்), தயூகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகிருஷ்ணன் (ஆசிரியர் மன்/தட்சணாமருதமடு ம.வி) அவர்களின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (31.10.2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
பன்னாலை.

தகவல்: குடும்பத்தினர்.
077 9789686, 077 8201975

(ஜே.5756)
(16.17.19)

### திருமதி நேசமணி கந்தையா



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், இணுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி கந்தையா நேற்று (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -வள்ளியம்மை தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான துரையப்பா -இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் அஞ்சலாதேவி செல்வ நாயகி, காலஞ்சென்ற வனஜா மற்றும் அசோகன், இரஞ்சிதகுமாரி (ஆசிரியை, யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை) காண்டீபன், கருணன், உதயசூரியன் ஆகியோரின் அன்புத்தாயும் அற்புதவேல்நாதன், அழகராசா, சௌந்தரநாயகி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் சிவகாமி, இராஜேஸ்வரி, சிவகௌரி ஆகியோரின் அன்புமாமியும் பூமணி, காலஞ்சென்ற தவநாயகம் மற்றும் துரைராஜா, கைலாயபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சர்மினி, காயத்திரி காலஞ்சென்ற தாரணி மற்றும் தவசாந், தயானந், பானுஜா, யனுஜா காலஞ்சென்றவர்களான அருட்பிரகாஸ், சிவபிரகாஸ் மற்றும் கபிலன், சஜீவன், யனுஜன், யுவாணி, மோணுசன், மிதுன், பகலவன் ஆகியோரின் பேர்த்தியும் லைசா, ரித்திக், நிலாசா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2016) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் வீதி,
மானிப்பாய்.

(ஜே/5758)(17.20)

தகவல்:
குடும்பத்தினர்.

## லசந்த...

பதிவு செய்வதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

லசந்த கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே மேலும் 12 புலனாய்வு அதிகாரிகளை விசாரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது என்று சண்டே லீடர் ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ள செய்தியில் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ-5)

## பிரபாகரன்...

படை' என்ற பெயரில் உரிமை கோரி நேற்றுத் துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டுள்ளன.

யாழ். நகரின் பல இடங்களிலும் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வடக்கு மாகாணத்தை விட்டு வெளியேற 21 நாள்கள் கால அவகாசமும் அதில் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன், கஜன் ஆகியோர் கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை இரவு துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். பொலிஸாரே கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையிலேயே வாள்வெட்டுக் குழு ஒன்று மற்றும் ஆயுதக் குழுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழர்கள் வாழும் பூர்வீகப் பிரதேசமான வடக்கு மாகாணத்தின் மண்ணும் எமது கலாசாரமும் தனித்துவமானவை. அவை இன்று சிங்களக் காடையர்களால் சூறையாடப்பட்டு வருகின்றன.

தமிழ் இளைஞர் சமுதாயம் சாராயம் மற்றும் போதைகளுக்கு அடிமையாகி சீரழிந்து வருகிறது. இவை சிங்கள அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு திட்டமிட்ட செயல். புத்தர் சிலைகள் அமைப்பதும், சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதும் எம் இனத்தை சினங்கொள்ள வைக்கும் செயலாக பார்க்கப்படுகிறது. இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் 10 வருடங்களில் வடக்கு மாகாணம் சிங்கள பெரும் பிரதேசமாக மாற்றம் கண்டுவிடுமளவுக்கு சிங்களவாதிகளின் போக்குகள் மிகக்கடுமையாகவும் கீழ்த்தரமாகவும் இருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் உட்பட தமிழ் அரசியல்வாதிகள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரை, அவர்கள் வகிக்கும் பதவிகளிலிருந்து இடை விலகிக் கொள்ள வேண்டும் அல்லது பதவி துறக்கவேண்டும்.

அதேவேளை வடக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங் களில்கடமைபுரிகின்ற அனைத்து தமிழ் உறவுகளும் தங்களது கடமைகளை இன்னுமொரு பிரதேசத்திற்கு மாற்றிக் கொள்ளுங்கள் என்று 'பிரபாகரன் படை' என்ற பெயரில் வெளியிடப் பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-4)

Galaxy Star
வெற்றி வாரம் 105 திகதி 30.10.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
04 14 44 54 57
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 5,655,160/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 30.10.2016 வெற்றி வாரம் 2050 வர்ணம் ஊதா
கன்னி
வெற்றி இலக்கங்கள் 29 37 48 59
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4, 367 000/=
வெற்றி இலக்கங்கள் 01 43
டபிள் சான்ஸ்
2016.11.01 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
அருளம்பலம் கனகரட்ணம்



பிறப்பு
23.06.1952

இறப்பு
12.11.2015

திதி: பிரதமை

ஆண்டொன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே !
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல மண்கும்பான் வீரகத்தி விநாயகப் பெருமானின்
அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்

(J.5754)
(14,17,18)

145, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ராஜசிங்கம் ராஜரட்ணம்

(நியூ சண்முகானந்த ரெக்ஸ்டைல்ஸ் முகாமையாளர்)



பிறப்பு
15.12.1960

இறப்பு
30.10.2016

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராஜசிங்கம் ராஜரட்ணம் நேற்று (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராஜசிங்கம்-பகவதியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கந்தசாமி (கனடா) குணரட்ணம் (வவுனியா), சறோஜினி தேவி (கொழும்பு), லலிதாதேவி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும் நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் வினோத், சுசீன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேச் றோட்,
சங்கானை.

(ஜே.5759)
(16.17.19)

தகவல்: குடும்பத்தினர்.
077 0841861

## படை...

உள்ள வீடொன்றில் மலசல கூடத்துக்காக வெட்டப்பட்ட குழியில் இருந்தே இந்த மனித எச்சங்கள் வெளிவந்துள்ளன.

குறித்த காணியில் இராணுவ முகாம் இயங்கியதால், அங்கு மேலும் பல மனித எச்சங்கள் இருக்கலாம் என்று பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அங்கு சென்றுள்ள பொலிஸார் குறித்த பகுதியை பாதுகாப்புப் பிரதேசமாக அடையாளப்படுத்தி, அங்கு எவரையும் செல்லவேண் டாம் என்று தடை விதித்தனர்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியிலும், இறுதிக்கட்டப் போரின் போதும் கைது செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட பல தமிழ் இளைஞர்கள் குறித்த இராணுவ முகாமுக்கே கொண்டுசெல்லப் பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாக காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திய ஓய்வு பெற்ற நீதிபதி மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக் குழுவிலும் முறையிடப்பட்டது. இந்த நிலையில், அவர்களின் எலும்புக் கூடுகளாக அந்த எச்சங்கள் இருக்கலாம் என்று பிரதேச வாசிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர். குறித்த பகுதியில் மேலும் பல மனித எச்சங்கள் காணப்படலாம் என்று தெரிவிக்கும் பிரதேச மக்கள், அது குறித்து விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

(வ-4)

பணிப்பெண் தேவை
உரும்பிராயில் உள்ள வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வயதான பெண் தேவை.
077 605 9613, 077 846 3672

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னைய ஆட்சியைப் போன்று மோட்டார் சைக்கிள் வழங்குக

வவுனியா, ஒக்.31
அரச சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மகிந்த அரசால் அறிமுகம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டத்தைத் தற்போது களப் பணியில் கடமை புரிவோருக்கும் வழங்க வேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மனித வலு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்தனர்.
வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட மனிதவலு தொழில் துறை உத்தியோகத்தர்களுக்கான மீளாய்வுக் கூட்டத்திலேயே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.
கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.
களப் பணிகளை மேற்கொள்வதில் போக்குவரத்துச் சிக்கல்களை எதிர்நோக்குகின்றோம். குறுகிய நேரத்தில் பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக எமக்கு மோட்டார் சைக்கிள் வழங்க வேண்டும் என்று அவர்கள் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீரவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.
மாவட்ட அலுவலகத்தில் மனித வலு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பணியாற்றும் எமக்கு மேலதிக சிறப்புப் பயிற்சியான தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கப்படும் இடத்தில் எமது பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு வசதியாகவும் எம்மிடத்தில் வரும் தொழில் தேடுநருக்கு சிறந்த சேவையையும் வழங்க முடியும். நாம் பணிக்கு வந்ததிலிருந்து எவ்வித சிறப்புப் பயிற்சிகளும் வழங்கப்படவில்லை. தகைமை உடையோரை இனங்கண்டு அவர்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க எமக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கினால்தான் நாம் அந்தப் பணியை மேற்கொள்ள வசதியாக இருக்கும் - என்றும் அவர்கள் சுட் டிக்காட்டினர்.
இது தொடர்பாக கருத்துரைத்த மனிதவலு தொழில்துறை இராஜாங்க அமைச்சர், மோட்டார் சைக்கிளை வழங்குவதில் நடைமுறையிலுள்ள சிக்கல்களைக் குறிப்பிட்டார். உத்தியோகத்தர்கள் தமது சொந்தப்பணத்தில் மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்வதற்கு ஆலோசனை வழங்கினார். பயிற்சிகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படும் என்றும் தெரிவித்தார். (ற-21)

# தீபாவளி தினத்தில் வவுனியாவில் 30 பேர் காயம்

### பல வன்முறைச் சம்பவங்களால்

வவுனியா, ஒக்.31
தீபாவளி தினமான நேற்றுமுன்தினம் நடந்த வன்முறைச் சம்பவங்களால் 2 பெண்கள் உட்பட 30 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா பம்பைமடுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரு குழுக்களிடையான வாள்வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அந்தச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் ஏழு பேர் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். குறித்த வாள்வெட்டுச் சம்பவத்தில் மொத்தமாக 9 பேர் காயமடைந்துள்ளனர்.
வவுனியா -பூந்தோட்டம் பகுதியில் இளைஞர்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
பூந்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தை அடுத்து மோதலில் ஈடுபட்ட மேலும் மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
இவர்களை விட மது போதையில் வாகனத்தைச் செலுத்தி விபத்துக்குள்ளானவர்கள், குடும்பத் தகராறில் ஈடுபட்ட பெண்கள் என 30 பேர் நேற்றுமுன்தினம் மாலை வரை வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா-பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் மதீனா நகர் பகுதியில் வசித்து வரும் இளைஞர் ஒருவரைக் காரணமின்றி மது போதையில் தாக்கினர் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், வவுனியா மதீனா நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை முதல் நேற்று காலை வரை சிறிய பரபரப்பு ஏற்படிருந்தது.




பிரச்சினை பெரிதாகாதவாறு வவுனியா பொலிஸார் மதீனாநகர்ப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.
மதீனாநகர்ப் பகுதியில் உள்ள பள்ளிவாசலுக்கு முன்னால் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டது. (ற-21)

## வாய்க்கால் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.31
பொம்மைவெளியில் வெள்ளம் வழிந்தோட வசதியாக அராலி வீதியில் உள்ள வெள்ள வாய்க்காலை சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
யாழ்.மாநகராட்சி மன்றம் நீண்ட நாள்களின் பின்னர் இந்த வெள்ள வாய்க்காலைத் துப்புரவாக்கி சீரமைக்கும் பணிகளை முன்னெடுத்துள்ளது.
இந்தப் பகுதியில் வெள்ளம் வாய்க்காலுக்கு வழிந்தோட வசதியாக, வெள்ளம் தள்ளி, என்று கூறப்படும் இந்த வாய்க்கால் புனரமைக்கப்பட்டு வருகின்றது என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.
இந்த வெள்ளம் தள்ளி வாய்க்கால்கள் பல நாள்களாக திருத்தம் செய்யப் படாமல் இருந்தன. தற்போது மாநகர தொழிலாளர்கள் இந்த வாய்க்காலைச் சீரமைத்துள்ளனர். (ற-17)

## 20 திட்டங்களை முன்னெடுக்கிறது வேள்ட் விசன் லங்கா நிறுவனம்

யாழ்ப்பாணம், ஒக். 31
வேள்ட் விசன் லங்கா நிறுவனம் அடுத்த 20 மாதங்களில் சங்கானை, சாவகச்சேரி பிரதேசங்களில் 20 திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது அதற்கான செயற்பாடுகளை அண்மையில் கூடி ஆராய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
வேள்ட்விசன் லங்கா நிறுவன நிபுணத்துவ ஆலோசகரும் பேராசிரியருமான ஜெரி தலைமையில் அவற்றை இனம்காணும் நடவடிக்கை இடம்பெற்றது.
இந்த நிகழ்வு யாழ்.நகர விடுதி ஒன்றில் அண்மையில் இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் ஆஸ்ரேலியா வேள்ட்விசன் நிறுவன திட்ட முகாமையாளர் அன்ட்ரூ ஜலன்ஸ்கி பி.எம். நிறுவன அதிகாரி ரெரின், நிபுணத்துவ ஆலோசகர் பேராசிரியர் ஜெரி ஆகியோருடன் வேள்ட் விசன் லங்கா நிறுவன திட்டப்பணிப்பாளர் சுதன் மற்றும் அதிகாரிகள் மற்றும் சங்கானை சாவகச்சேரி பிரதேச அலுவலர்கள் கலந்து கொண்டனர்.(4 – 50)

# மகாவலி கங்கையின் நீர் வடக்குக்கு வர வேண்டும்

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
தெற்கு மாகாணத்தில் இருந்து வடக்கு மாகாணத்துக்கு மகாவலி கங்கையிலிருந்து நீர் கொண்டு வரப்பட வேண்டும். தெற்கில் இருந்து மின்சாரமும் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரவேண்டும். அவை நிலையான அபிவிருத்திக்குப் பங்காற்றும்.
இவ்வாறு வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார். ஆனையிறவில் அமைக்கப்பட்ட "அன்பின் தரிப்பிடம்" புகையிரத நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு ஆளுநர் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது:
நாட்டின் ஜனாதிபதியாக விளங்குகின்ற மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர், அனைவரினதும் மனித உரிமைகளை மேம்படுத்துவதுடன் அபிவிருத்திகளையும் முன்னெடுக்கின்றனர். கடந்த காலங்களில் நாம் அனைவரும் அனுபவித்த துன்பங்கள், மனக் கவலைகள் அனைத்திற்கும் எமது நெஞ்சில் அனுதாபங்கள் இருக்கின்றன. இந்தப் புகையிரத நிலையம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. யாழ்தேவி ரயில் சேவைதான் வடக்கு மக்களையும் தென் பகுதி மக்களையும் இணைக்கும் சங்கிலியாக உள்ளது. வடக்கு மக்கள் தென்பகுதியில் உள்ள கதிர்காமத்திற்கும் தென்பகுதி மக்கள் வடக்கில் உள்ள நாகதீப விகாரைக்கும் வந்து வழிபடுவதற்கும் யாழ்தேவி புகையிரதம் வழி வகுக்கின்றது.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு செல்வதற்கு எட்டு மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றது. சிங்கப்பூரிலிருந்து கொழும்புக்கு வருவதற்கு மூன்று மணித்தியாலங்கள் மட்டுமே தேவைப்படுகின்றன. இந்த விஞ்ஞான உலகத்தில் தேவையான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அந்தப் பயண நேரம் குறைக்கப்பட வேண்டும்.
தற்போதைய அரசின் நோக்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகும்.
தமிழ் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் ஒரு புகையிரதத்தில் ஒரே அறையிலே பயணம் செய்கின்றனர். அவர்களுக்கிடை யில் ஒரு புரிந்துணர்வு ஏற்படுகின்றது.
மக்களுக்கு நவீன வசதிகள் பொருளாதார ரீதியான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து மக்களும் எவ்வித இன மத சமய வேறுபாடுகளுமின்றி ஒற்றுமையாக சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழவேண்டும் – என்றார். (ற-8.34)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசுகளில் காணப்பட்ட பிரச்சினைகளே இந்த அரசிலும்

## தேசிய அரசு என்பதால் பெருப்பிக்கப்படுகின்றன என்கிறார் இராஜாங்க அமைச்சர் டிலான்

கொழும்பு, ஒக். 31
கடந்த காலங்களில் அரசில் காணப்பட்ட பிரச்சினைகளே இந்த அரசிலும் காணப்படுகின்றன. ஆனால் தற்போது இரண்டு கட்சிகள் அரசை நடத்துவதால் இவ்வாறான பிரச்சினைகள் மிகப் பெரிய பிரச்சினைகள் போன்று காணப்படுகின்றன. அதற்காக அரசு கவிழ்ந்துவிடும் என்று யாரும் எதிர்பார்க்கக்கூடாது.
இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தேசிய அரசில் பங்கெடுத்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சம உரிமை உள்ளது. அந்தக் கட்சியையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மதிக்க வேண்டியது அவசியம். தேசிய அரசின் நீடிப்புக்கு அது உதவியாக இருக்கும். தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே நாங்கள் அரசில் இடம்பெற்றுள்ளோம்.
தேசிய அரசுக்குள் பிரச்சினைகள் இருக்கின்றன என்று கூறப்பட்டாலும் அரசு சிதறிப்போகாது. ஒரு சிலர் எதிர்பார்ப்பதைப் போன்று தேசிய அரசு கவிழ்ந்துவிடாது.
நீண்டகாலத்துக்குப் பின்னர் தேசியப் பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வுஊடாகத் தீர்வுகாண்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்த சந்தர்ப்பத்தை நாங்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசில் வெறுமனே பங்கெடுக்கவில்லை. இந்த அரசில் எங்களுக்கும் சம உரிமை இருக்கின்றது. அதனை ஐக்கிய தேசிய கட்சியும் பிரதமரும் மதிக்க வேண்டும்.
தொடர்ச்சியாக சுதந்திரக் கட்சியை மதிக்காமல் பயணிக்க முடியாது. ஜனாதிபதி தற்போது சிவப்பு அட்டையைக் காட்ட நேரிடும் என்று கூறியுள்ளார். இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். - என்றார். (ற-4)

## சிவனொளிபாத மலை விடுதி குறித்து சுற்றாடல்துறை ஆராய்வு

கொழும்பு, ஒக். 31
சிவனொளிபாத மலைப் பகுதியில் கட்டப்பட்டு வரும் சுற்றுலா விடுதியால் அந்தப் பிரதேசத்துக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும் என்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்து சுற்றாடல் துறை அமைச்சு அது தொடர்பில் ஆராய வுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் மிக விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தெரிவித்தார்.
இந்த சுற்றுலா விடுதி நீர் வீழ்ச்சி உருவாகும் இடத்துக்கு மேல் பகுதியில் அமையவுள்ளது.
அங்கு விடுதி அமைவதால் தாவரங்கள், மிருகங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சுற்றாடல் பிரிவு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.
இது தனியார் ஒருவருக்குச் சொந்தமான இடம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பகுதி பாதுகாப்பான மண் உள்ள வனப் பகுதி என 2008 ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி அரச வர்த்தமானியில் பதிவாகியுள்ளது.
இந்தச் சுற்றுலா விடுதியை அமைப்பதில் பல்வேறு சூழல் அச்சுறுத்தல்கள் ஏற்படும் என சுற்றுச் சூழல் ஆய்வாளர் ஜகத் குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார். (ற-4)

## ஒவ்வொருவரிடம் இருந்தும் 20 ஆயிரம் ரூபா கொள்ளை!

கொழும்பு, ஒக். 31
மத்திய வங்கியில் இடம்பெற்றதாக கூறப்படும் முறி மோசடியை இலங்கை மக்களிடையே பங்கீடு வைத்தால் ஒருவரிடம் இருந்து 20 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.
இவ்வாறு ஊழல் எதிர்ப்பு முன்னணி தெரிவித்தது.
இலங்கையிலுள்ள ஒவ்வொரு நபரிடமும் 20 ஆயிரம் ரூபாவை ஒரு தனி நிறுவனம் கொள்ளையிட்டுள்ளது. இந்தப் பணத்துக்குப் பல வருடங்களுக்கு வட்டி வீதம் பார்த்தால் இதன் பெறுமதி இன்னும் அதிகமாகும் என்று அந்த முன்னணியின் ஆலோசகர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.
கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறி லங்கன் விமான சேவை நிறுவனத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை நாட்டிலுள்ள நபருக்குப் பங்குவைத்தால் 49 ஆயிரம் ரூபா கடனாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-4)



பயிற்சி மற்றும் நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டு இந்தியா கொச்சி துறைமுகத்துக்குச் சென்ற இலங்கைக் கடற்படைக் கப்பல்களான சயுர மற்றும் சுரநிமல ஆகியவை நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்துக்குத் திரும்பின. கப்பல்களின் தலைவர்களான பிரசன்ன அமரதாச மற்றும் பூஜித விதான ஆகியோர் இந்தியத் தெற்கு கடற்படை கட்டளையிடும் அதிகாரி ரியர் அட்மிரல் ரவீந்திர ஜெயந்தி நட்கார்னியையும் சந்தித்து பேச்சு நடத்தினர் என்றும், அங்கு பயிற்சிகளும் நடத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## விபத்தில் பொலிஸார் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 31
நீர்கொழும்பு - பமுனுகம வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸ் அதிகாரிகள் சென்ற மோட்டார் சைக்கிள், காரொன்றில் மோதியதில் விபத்து ஏற்பட்டதுஎன்று ஆரம்பவிசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்தில் பொலிஸார் இருவரும் கடும் காயங்களுக்கு உள்ளாகி நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும், சிகிச்சை பயனளிக்காது அவர்கள் உயிரிழந்தனர் என்றும் கூறப்பட்டது.
சம்பவம் தொடர்பில் காரின் சாரதி கைதுசெய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## மீரியபெத்தை மண்சரிவால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி

நுவரெலியா, ஒக்.31
2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி இயற்கை அனர்த்தத்தால் உயிர்நீத்த கொஸ்லந்தை மீரியபெத்தை மக்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றுக் முற்பகல் 11 மணியளவில் ஹற்றனில் நடைபெற்றது.
இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பெருந்தோட்ட சமூக மேம்பாட்டு திருப்பணியும், நீதிக்கும் சமாதானத்திற்குமான சர்வமத அமைப்பும் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.
ஹற்றன் டிக்கோயா நகர சபை முன்றிலிலிருந்து நகரத்தின் மணிக்கூட்டுக் கோபுரம் வரை பிரதான வீதியில் பேரணி ஒன்றும் நடைபெற்றது.
பேரணியில் கலந்து கொண்ட மக்கள் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் இவ்வாறு உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மெழுகுவர்த்திகளை ஏற்றியிருந்தனர்.
மலையகத்தில் இனங்காணக்கூடிய மண்சரிவுகள் இருக்கும் இடங்களில் இருந்து மக்களை பாதுகாக்கக்கூடிய நடவடிக்கை மற்றும் தொழிலாளர் களுக்கான வாழ்வாதார அடிப்படை போன்ற 9 அம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமர் சம்பந்தப்பட்ட ஏனையோர்களின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கும் வகையில் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ற-43)



## அரசுக்குள் திருடர்கள் இருந்தால் பொருளாதாரம் பாதிப்படையும்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.31
அரசுக்குள் திருடர்கள் இருப்பார்களானால் வங்கிக் கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளும்.
இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.
கம்பஹாவில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
வங்கியுடன் எனக்கு தனியான தொடர்புகள் உள்ளன. நான் ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும்போது 30 லட்சம் ரூபா மட்டுமே எனது வங்கிக் கணக்கில் இருந்தது. எனக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து வரப்பிரசாதங்களையும் மகிந்த ராஜபக்ச இல்லாது செய்தார்.
வாழ்க்கையைக்கொண்டு நடத்த வேண் டும். திருட முடியாது. திருட்டை மேற்கொண்டதும் கிடையாது. ஒரே ஒரு சொத்து மட்டும் இருந்து. அதனை விற்று எனது மகளின் திருமணம் போன்ற காரியங்களைச் செய்தேன்.
அரசு மாறும்போது அந்த அரசுக்குள்ளும் திருடர்கள் காணப்படுவார்களாக இருந்தால் வங்கிக் கட்டமைப்பு முழுமையாகப் பாதிப்படையும்.- என்றார். (ற)

## சு. கட்சி மத்திய குழு கூட்டம் இன்று

கொழும்பு, ஒக். 31
சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவுக்கான விசேட கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
கட்சியின் இளைஞர் பிரிவின் தலைவர் ஷாந்த பண்டார இதனைத் தெரிவித்தார்.
கூட்டத்தில் கட்டாயம் கலந்து கொள்ளுமாறும் ஜனாதிபதி, குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். கட்சியின் மீள் கட்டமைப்பு தொடர்பில் காத்திரமான முக்கிய பல தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்படவுள்ளன என்றும் கட்சியை பலமாக வைத்திருப்பது குறித்து ஆராயப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தாண்டிக்குளத்தில் குருதிக் கொடை

வவுனியா, ஒக்.31
வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஏற்பட்ட குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக தாண்டிக்குளத்தில் குருதிக் கொடை முகாம் நடத்தப்பட்டது.
தீபாவளித் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் ஒழுங்கமைப்பில் கழகத்தின் தலைவர் பேரின்பநாதன் அனோஜன் தலைமையில் குருதிக் கொடை முகாம் நடத்தப்பட்டது. ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் முழுமையான முயற்சியில் திருநாவற்குளம் இளைஞர் கழக இளைஞர்களின் பங்களிப்புடன் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.
நிகழ்வில் வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதா க.சந்திரகுலசிங்கம், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன், கழகத்தின் ஆலோசகர் மு.கண்ணதாசன், திருநாவற்குளம் இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)

## வாக்கெடுப்பில் பங்கேற்காத எம்.பிக்களிடம் விளக்கம்

கொழும்பு, ஒக்.31
வற் வரி அதிகரிப்பு சட்ட வரைவு வாக்கெடுப்பில் பங்கேற்காத ஆளும் கட்சியின் உறுப்பினர்களிடம் விளக்கம் கோரப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த சட்ட வரைவு வாக்கெடுப்பு நடத்தப்பட்ட தினத்தில் நாடாளுமன்றில் பிரசன்னமாகியிருக்காத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கம்கோர உள்ளார் என்று கூறப்படுகின்றது.
வாக்கெடுப்பில் பங்கேற்காதவர்கள் பற்றிய விவரங்கள் கடந்த 28ஆம் திகதி பிரதமருக்கு அனுப்பட்டன. சட்ட வரைவு வாக்கெடுப்பின்போது34ஆளும் கட்சி உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.
அவர்களில் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள், கருத்தரங்குகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தனர். சிலர் நோய் காரணமாக அமர்வுகளில் பங்கேற்றிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 10 உறுப்பினர்கள் எந்தவிதமான நியாயமான காரணங்கள் இன்றி இவ்வாறு வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகின்றது. (ற)

# இராணுவத்திடமுள்ள காணிகளையும் விடுவிக்க வேண்டும் அரசு

### ஆனையிறவு ரயில் நிலைய திறப்புவிழாவில் வடக்கு பதில் முதல்வர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.31
ஆனையிறவில் பரம்பரை பரம் பரையாக தமிழ் மக்கள் வாழ்ந்த மண் இன்னும் இராணுவத்தினர் வசம் உள்ளது. அன்பின் பரிசாக ஆனையிறவில் ரயில் நிலையத்தை அமைத்துத் தரும் வேளையில் இவ்வாறான விடயங்களிலும் அரசு கவனம் எடுக்க வேண்டும்.
இவ்வாறு சுட்டிக்காட்டினார் வடக்கு மாகாண பதில் முதலமைச்சர் த.குருகுலராஜா.
வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நிதிப்பங்களிப்புடன் ஆனையிறவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'அன்பின் தரிப்பிடம்' ரயில் நிலையம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றினார் வடக்கு மாகாண பதில் முதலமைச்சர்.
அவர் தெரிவித்ததாவது:
மத்திய கல்வி அமைச்சரின் வழிகாட்டலுக்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நிதிப்பங்களிப்புடன் ஆனையிறவில் அமையப்பெற்ற 'அன்பின் தரிப்பிடம்' ரயில் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தது.
ஆனையிறவு என்பது அனைத்து மக்களுடைய நெஞ்சிலே எப்போதும் நினைவாக உள்ள இடமாகும். உப்புக் காற்றும் ஆனையிறவு தடைமுகாமும் எங்களுடைய மனங்களிலே நீங்காத நினைவாக உள்ளன. இது அண்மித்த வரலாறாகும். உண்மையில் இந்த ஆனையிறவு மண் தமிழர்களின் பல வரலாறுகளை சொல்லக்கூடியது.
இங்கே சந்தை ஒன்று இருந்தது. அந்த சந்தை பொருளாதார கேந்திர நிலையமாகத் திகழ்ந்தது. வன்னியில் இருப்பவர்கள், யாழ்பாணத்து மக்கள், தென் பகுதி தமிழர்கள் இங்கு பொருள்களைக் கொண்டு வந்தே பண்ட மாற்றுக்களை மேற்கொண்டார்கள். ரயில் பாதை அமைப்பதற்கு முன்னர் ஆனையிறவின் ஊடாகச் சென்ற வீதி பழைய கண்டி வீதி என்று சொல்லப்பட்டது. அதனூடாகவே எமது மக்கள் பயணங்களை மேற்

> “மத்திய கல்வி அமைச்சரின் வழிகாட்டலுக்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நிதிப்பங்களிப்புடன் ஆனையிறவில் அமையப்பெற்ற “அன்பின் தரிப்பிடம்” ரயில் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தது.”

கொண் டார்கள். வடக்குத் தெற்கு இணைப் புக்குரிய கேந்திர நிலையமாகவும் ஆனையிறவு திகழ்ந்தது.
இங்கே ஒரு பாடசாலை இருந்தது. மக்கள் செறிவாக குடியேறி இருந்தார்கள். மக்களுடைய நிலங்கள் இருந்தன. அவை இன்னும் அவர்களிடம் கையளிக்கப்படவில்லை. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணை தற்போதும் இராணுவத்தினர் விடுவிக்கவில்லை. அன்பின் பரிசாக இந்த புகையிரத நிலையத்தைத்தரும் இந்த வேளையில் இவ்வாறான விடயங்களில் அரசு கவனம் எடுக்க வேண்டும்.
எனக்கு முன்னர் பேசியவர்கள் கூறியது போல் இலங்கையில் மிகவும் அழகான ஒரு புகையிரத நிலையமாக இது காணப்படுகின்றது. இது நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாகவும் உள்ளது. அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ள புதிய யாப்புத் திருத்தத்திலே புதிய சிந்தனைகளை உள்வாங்கி எங்களுடைய அபிலாசைகளையும் அதிலே சேர்த்து நாங்களும் இந்த நாட்டில் நல்லிணக்கம் கொண்டவர்களாக இணைந்து வாழக் கூடிய வழிகளை மேற்கொள்ள வேண்டும்–என்றார்.
(ற-21,34)



## பண மோசடி குற்றச்சாட்டில் மூவர் கைது

கொழும்பு, ஒக்.31
பண மோசடி செய்த சம்பவம் தொடர்பாக அநுராதபுரம், வஹால்கடை பிரதேசத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
புதையல் ஒன்றை எடுத்ததாகக் கூறி தொல்லியல் பொருள்களை விற்று மோசடியாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர், என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
பித்தளை விளக்கு, பித்தளை லாம்பு, இரண்டு உலோகப் பெட்டிகள், கல்லினால் செய்த இரண்டு குப்பிகள் ஆகியவற்றை பொலிஸார் சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்கள் கெப்பிற்றிக்கொலாவ மற்றும் ஹொரவப் பொத்தானை பிரதேசங்களைச் சேர்ந்த வர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதிவான் மன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## விருந்தில் மோதல்; அறுவர் காயம்

கொழும்பு, ஒக்.31
நுவரெலியா – கந்தப்பளை கோட்லோஜ் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற குழு மோதலில் பலத்த காயங்களுக்குள்ளான ஆறு பேர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.
தீபாவளி தினத்தன்று ஒருவரின் வீட்டில்விருந்து பசாரம் இடம்பெற்றது என்றும், அதே தோட்டத்தைச் சேர்ந்த வேறு ஒரு குழுவினர் விருந்து பசாரம் நடைபெற்ற வீட்டுக்குச் சென்று அங்கிருந்தவர்களைத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
காயமடைந்தவர்களில் இரண்டு பெண்களும் அடங்குகின்றனர். இது தொடர்பாகபொலிஸார்விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ற)

## முகாம் கால்நடைகளைப் பிடிக்க ஆள்கள் இல்லாததால் சிரமம்

### கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
முல்லைத்தீவு வட்டுவாகல் கடற்படை முகாமில் உள்ள கால்நடைகளைப் பிடித்து உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கு மாடுகளைப் பிடிக்கக் கூடியவர்கள் இல்லாதுள்ளனர். அதனால் பிரதேச செயலகம் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் தெரிவித்தார்.
கடற்படைத் தளத்தில் உள்ள கால்நடைகளைப் பிடிப்பதற்கும் கடற்படையினர் அனுமதித்த பின்பும் அதில் தாமதம் ஏற்படுகின்றது. அது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியில் உள்ள கடற்படை முகாமில் சுமார் 40க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அவற்றைப் பிடித்து உரிமையாளர்களிடம் வழங்க கடற்படையினரும் அனுமதியளித்துள்ளனர். அங்குள்ள கால்நடைகள் கடந்த 7 வருடமாக கட்டில் இல்லாத மாடுகள். அவற்றைப் பிடிப்பது என்பதும் ஒரு சாதாரண விடயம் அல்ல. அதில் நன்கு அனுபவமானவர்களை ஈடுபடுத்தவுள்ளோம்.
மாடு ஒன்றுக்கு பிடி கூலியாக மட்டும் ஆயிரம் ரூபா பேசப்பட்டுள்ளது. சில நாள்களில் குறித்த கால்நடைகளைப் பிடித்து உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கு முயற்சிக்கின்றோம். மாடு பிடிப்பதில் அனுபவம் கொண்டவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கும் உரிய கொடுப்பனவுடன் மேற்படி பணி வழங்கப்படும்–என்றார்.
(ற-101)

## வாழ்வின் எழுச்சித் திட்டத்தில் வாழ்வாதார உதவித் திட்டம்

### வவுனியாவில் 15 பேருக்கு வழங்கப்பட்டது

வவுனியா, ஒக்.31
வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களில் 15 குடும்பங்களுக்கு வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.
மீன் வியாபாரம், மரக்கறி வியாபாரம், சைக்கிள் திருத்தகம், கைத்தொலைபேசி திருத்தக உள்ளீடுகள், மாடு மற்றும் ஆடு வளர்ப்பதற்கான கொட்டகைகளுக்கான உள்ளீடுகள் அதில் வழங்கப்பட்டன.
பயனாளிகளின் வாழ்வாதார பெருக்கம் தொடர்பாக வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் [illegible] அவர்களின் தொழில் மேம்பாட்டுக்கான மேலதிக ஆலோசனைகளும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயனாளிகளுடன் வவுனியாமாவட்ட வாழ்வின்எழுச்சித் திணைக்கள பணிப்பாளர் திருமதி ச.பத்மரஞ்சன் வாழ்வாதார பெருக்கத்துக்கான ஆலோசனைகளை வழங்கியதுடன், உதவித் திட்டத்தின் பயன்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.
நிகழ்வில் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட பணிப்பாளர் திருமதி ச.பத்மரஞ்சன், செட்டிகுளம் பிரதேச செயலாளர் பி.சி.ஆர். பாபாபயோன், வாழ்வின் எழுச்சி திணைக்கள செட்டிகுளம் அலுவலகத்தின் தலைமைப்பீட முகாமையாளர் என்.சுசீந்திரராஜா, வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் கலந்துகொண்டனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகள் தப்பியதால் பொலிஸாருக்கு சிக்கல்

கொழும்பு, ஒக்.31
நீர்கொழும்பு தலுபொத சிறைச்சாலையில் கைதிகள் தப்பிச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
பணி இடைநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துசார உபுல் தெனியாய தெரிவித்துள்ளார்.
குறித்த கைதிகள் நேற்றுமுன்தினம் அதிகாலை நீர்கொழும்பு தலுபொத சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றனர்.
சிறைச்சாலை அதிகாரிகளின் அறியாமை காரணமாகவே கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.
இதன் காரணமாகவே சிறைச்சாலையில் உள்ள மூன்று அதிகாரிகளும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.
தப்பிச் சென்ற கைதிகள் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# இலங்கைக்கு வரவுள்ளது ஐரோப்பிய ஒன்றியக் குழு

## பல்வேறு தரப்பினரையும் சந்திக்க திட்டம்

கொழும்பு, ஒக். 31
ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தேசிய நல்லிணக்கம் மற்றும் பெண்களின் உரிமை பற்றிய விடயங்கள் தொடர்பிலான குழு இலங்கை வரவுள்ளது.
இந்தக் குழு இன்று இலங்கையை வந்தடையும் என்றும் எதிர்வரும் 3ஆம் திகதி வரை தங்கியிருந்து பல்வேறு சந்திப்புக்களை நடத்தவுள்ளது என்றும் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் அலுவலகம் தெரிவித்தது.
ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் தென்னாசிய நாடுகளுக்கான தொடர்பாளர் ஜீன் லெம்பர்ட் தலைமையில் இந்தக் குழு வரவுள்ளது.
இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீள வழங்குவது தொடர்பான சாத்தியக்கூறுகளை இந்தக் குழு அவதானிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவினர் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கும் பயணம் செய்யவுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பெல்ஜியத்துக்கு பயணம் செய்து ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளையும், அந்த ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.
ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்பாக கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டிருந்தார்.
இந்த நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழு இலங்கை வருகின்றது. (ற-4)



# ஹொங்கொங் செல்கின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஒக்.31
ஹொங்கொங்கில் இந்த வாரம் நடைபெறவுள்ள 15 ஆவது ஜேர்மன், ஆசியா பசுபிக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஹொங்கொங் பயணமாகவுள்ளார்.
எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை மாநாடு நடைபெறவுள்ளது. பிரதமர் நாளை மறுதினம் இலங்கையில் இருந்து புறப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# குற்றவாளிகளுக்கு தண்டனை என்பதே சு.கவின் நிலைப்பாடு

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.31
இலங்கை மத்திய வங்கியின் முறி கொடுக்கல் வாங்கலில் இடம்பெற்றது என்று கூறப்படும் மோசடியுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளது.
இவ்வாறு அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது-
சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் கொண்டு வந்து தண்டிக்க வேண்டும். அவர்களிடம் காணப்படும் நிதியை அரசு மீளப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே கட்சியின் நிலைப்பாடு.- என்று அவர் தெரிவித்தார். (ற-4)

# மட்டு மாவியில் முதலைகள் ஆதிக்கம்



மட்டக்களப்பு, ஒக்.31
கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு வாவியில் முதலைகள் அதிகரித்துள்ளன என்று மீனவர்கள் கவலை வெளியிட்டனர்.
முதலைகளின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையையும் கடல்றொழிற் திணைக்களம் எடுக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
இந்த மாதத்துக்குள் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும், பல மீனவர்களின் வலைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்த மீனவர்கள் தற்போது மழை காலம் என்பதால் கடற்றொழிலுக்குச் செல்லும் இயந்திரப் படகுகளில் தொழில் புரியும் மீனவர்கள் மற்றும் வாவி மீனவர்களின் வாழ்க்கை ஒரு கேள்விக் குறியாக உள்ளது என்றும் தெரிவித்தனர்.
இதுகுறித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற)

# நாட்டில் முறையான ஆட்சிக்கு புதிய பலம் உருவாக வேண்டும்

## ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.31
தேசிய அரசில் உள்ள இரு கட்சிகளும் நாட்டில்சிறந்த ஆட்சியை முன்னெடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. இரு கட்சிகளினதும் ஆட்சி காலாவதியாகி விட்டது. நாட்டில் முறையான ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கு புதிதொரு பலம் தேவையாக உள்ளது.
இவ்வாறு ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மோசடிக்காரர்களும் பாதுகாவலர்களும் எனும் தொனிப்பொருளில் நாடு தழுவிய ரீதியில் மக்கள் விடுதலை முன்னணி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.
எதிர்வரும் முதலாம் திகதி கொழும்பிலும், 2ஆம் திகதி காலியிலும், 3 ஆம் திகதி அம்பாந்தோட்டையிலும், 4ஆம் திகதி குருநாகலிலும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன என்று அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். பத்தரமுல்லையிலுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
இந்த அரசால் நாட்டில் நல்லாட்சியை முன்னெடுக்க முடியாது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு மீறிவிட்டது. ஊழல், மோசடிகளை இல்லாமல் செய்வதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசு ஊழல், மோசடிக்காரர்களை பாதுகாக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கின்றது.
தேசிய அரசு மக்களின் அபிலாசைகளை வென்று கொடுக்கும் என இனி ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது. நாட்டில் தற்போது தராதரம் பார்த்து சட்டம் நடை முறைப் படுத்தப்படுகிறது. சாதாரணமானவர்கள் சிறு தவறு செய்தாலும் அவர்களுக்கு உரிய முறையில்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



வசதி படைத்தவர்களும் அதிகாரத்திலுள்ளவர்களும் பெரியளவிலான குற்றங்களைச் செய்கின்ற போதிலும் அவர்கள் உரிய சட்ட நடைமுறைக்கு உட்படுத்தப்படுவதில்லை. அவ்வாறானவர்களை ஆட்சியிலுள்ளவர்கள் பாதுகாக்கின்றனர். இது ஜனநாயகத்துக்குப் புறம்பான விடயமாகும்- என்றார். (ற)

# பாதுகாப்பு பொறுப்பை கோரும் அமைச்சரின் மருமகன்

கொழும்பு, ஒக்.31
மத்திய வங்கியின் உள்ளக பாதுகாப்புப் பொறுப்பை வழங்குமாறு பிரபல அமைச்சர் ஒருவரின் மருமகனின் நிறுவனம் விண்ணப்பம் கோரியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த அரசின் காலத்தில் இந்த அமைச்சரின் மருமகன் தொடர்பில் பெரிதும் பேசப்பட்டது என்றும், அவருக்கு எதிராகப் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் கூறப்படுகின்றது.
பாதுகாப்புப் பொறுப்புக்காக விண்ணப்பித்த பின்னர் குறித்த அமைச்சரின் முத்திரையுடன் கூடிய பரிந்துரைக் கடிதமும் மத்திய வங்கியின் ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
குறித்த அமைச்சரின் மருமகனின் நிறுவனத்துக்கு மத்திய வங்கியின் உள்ளகப் பாதுகாப்பு விவகாரங்களை வழங்குமாறு அந்தக் கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. நிலைமை குறித்து சகல தரப்பும் கூடி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.31
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் கொலை தொடர்பான விடயத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்பில் பல்கலைக் கழக சகல தரப்புப் பிரதிநிதிகளும் ஒன்று கூடி ஆராய்ந்தனர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் இருவர் கடந்த 20ஆம் திகதி கொக்குவில் பகுதியில் துப்பாக்கிச் சூடு காரணமாக உயிரிழந்தனர். அதையடுத்து பல்கலைக் கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைகள், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தொடர்பாகவே கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டது.

பல்கலைக் கழக துணை வேந்தர், நிர்வாகத்தினர் ஆசிரிய பிரதிநிதிகள் , மாணவ பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

மாணவர்களின் உயிரிழப்புக்குப் பின்னரான நிலைமை தொடர்பில் பேசப்பட்டது. எவை தொடர்பிலும் முடிவு எட்டப்படவில்லை.

விரைவில் மீண்டும் கூடிப் பேசுவதாகவே முடிவு செய்யப்பட்டுள்ளது- என்று யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் தெரிவித்தார். (ம-101)

# பனை மூல வளத்தை பேண நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.31
வடக்கு, கிழக்கு மற்றும் புத்தளத்தில் பனை அதிகம் உள்ள இடங்கள் இனங்காணப்பட்டு பனை மூல வளத்தை உரிய முறையில் பேணிப் பாதுகாப்பதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறு பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது.

இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டதாவது:
பனையிலிருந்து பெறப்படும் பத நீர், பனங்களி, ஒடியல், பனங்கிழங்கு என்பவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுப் பொருள்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்தல், மக்களின் உணவுப் பாவனையில் அவற்றைச் சேர்த்துக் கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் நிர்வாக அலுவலகத்தைக் கொண்டு செயற்படும் அரசு சார்பு சபையாகவும் பனை அபிவிருத்திச் சபை விளங்குகின்றது.

பனை அபிவிருத்திச்சபையால் கடந்தகாலச் செயற்பாடுகள் மற்றும் நிதிக்கையாளுகை பனை அபிவிருத்திச் சபையின் உத்தேச இலக்கை எட்டுவதில் ஏற்படுத்தியுள்ள இடர்பாடுகளை நிவர்த்திசெய்யும் வகையில் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த காலங்களில் ஆண்டுதோறும் பனம்விதை நடுகை செய்யும் செயற்றிட்டம் பனை அபிவிருத்திச் சபையால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த வருடம் பனம்விதை நடுகைச் செயற் றிட்டம் மாவட்டச் செயலகம் மூலம் பிரதேசசெயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-11)

# திருமலை மாவட்டத்தில் யானைகள் அட்டகாசம்

## நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறார் துரைரத்தினசிங்கம் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக்.31
கடந்த 5 ஆண்டுகளில் திருகோணமலை மாவட்டத்தில் யானைகளின் தாக்குதல்களால் 15 பேர் உயிரிழந்துள்ளனர். அரச அதிகாரிகள் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரத்தினசிங்கம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக்காலமாக யானைகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அவற்றைத் தடுக்க சில இடங்களில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளபோதும், அவற்றை உடைத்துக் கொண்டு யானைகள் குடிமனைகளுக்குள் புகுகின்றன.

> “மூதூர் பள்ளிக் குடியிருப்பில் அதிகாலையில் விளாம் பழம் பொறுக்கச் சென்ற 5 பிள்ளைகளின் தாய் ஒருவரும், திரியாய் கிராமத்தில் இரு பிள்ளைகளின் தந்தையும் அண்மையில் யானைகளின் தாக்குதலால் இறந்துள்ளனர்.”

தென்னமரவாடி, திரியா, பள்ளிக் குடியிருப்பு, தங்கபுரம், ஜின்னாபுரம் பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. இவற்றில் பல இடங்கள் அண்மையிலேயே மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களாகும்.

மூதூர் பள்ளிக் குடியிருப்பில் அதிகாலையில் விளாம்பழம் பொறுக்கச் சென்ற 5 பிள்ளைகளின் தாய் ஒருவரும், திரியாய் கிராமத்தில் இரு பிள்ளைகளின் தந்தையும் அண்மையில் யானைகளின் தாக்குதலால் இறந்துள்ளனர்.

இந்த விடயத்தில் அதிகாரிகள் உடன் கரிசனை செலுத்த வேண்டும் என்றும் கோருகின்றபோதும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ம-101)

# தனிக்கிராம அலுவலர் பிரிவாக இளங்கோபுரத்தை மாற்றுங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.31
புதுக்குடியிருப்பு, இளங்கோபுரம் கிராமத்தைத் தனிக் கிராம அலுவலர் பிரிவாக மாற்றுமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தேராவில் கிராம அலுவலர் பிரிவில் இளங்கோபுரம், தேராவில் என இரு கிராமங்கள் உள்ளன. இளங்கோபுரம் கிராமத்தில் 240 குடும்பங்களும், தேராவில் கிராமத்தில்170 குடும்பங்களும் வாழ்கின்றன.

இளங்கோபுரம் சன சமூக நிலையத் தலைவர் முத்தையா ரவிச்சந்திரன் தெரிவித்ததாவது:
கிராம அபிவிருத்தியில் தொடர்ந்து இளங்கோபுர மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். அதிகாரிகளுக்கு அது தெரியப்படுத்தப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. எங்களுடைய கிராம அலுவலர் பிரிவு பெரிய பகுதியாக உள்ளமையாலே இந்த நிலமை காணப்படுகின்றது. எமது கிராமத்தைத் தனியொரு கிராம அலுவர் பிரிவாக மாற்றுகின்றபோது உரிய பயனை எங்களால் பெறமுடியும். கடந்த மாதம் 19ம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் மேலும் 9 கிராம சேவையாளர்கள் பிரிவுகள் உருவாக்குவதற்கு இணைத்தலைவர்களால் அனுமதிவழங்கப்பட்டது. அதில் இளங்கோபுரத்தையும் உள்வாங்க அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் - என்றார்.

“இதுதொடர்பாக எனக்கு அறியத்தரப்படவில்லை. உடனடியாக நாங்கள் கிராம சேவையாளர் பிரிவை பிரிக்க முடியாது. அமைச்சின் ஊடாக எல்லை நிர்ணயக் குழு ஒன்றை அமைத்து ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த முடிவுகள் இன்னமும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. கிராம மக்கள் கோரிக்கைகளை முன்வைக்கும் பட்சத்தில் அது தொடர்பாக ஆராய்ந்த பின்னர் முடிவெடுக்கலாம் ஆனால் இது தொடர்பாக எனக்கு இது வரை தெரிவிக்கப்படவில்லை”- என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-7)

# முதியோருக்கு உடுபுடைவைகள்

யாழ்ப்பாணம், ஒக்.31
தீபத் திருநாளை முன்னிட்டு கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன. சமூக சேவைகள் திணைக்களத்தால் அவை வழங்கப்பட்டன என்று இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

தீபாவளித் தினமான நேற்று விசேடமாக உணவுகள், சிற்றுண்டிகள், பழங்கள் என்பவனவும் முதியோருக்கு வழங்கப்பட்ட என்றும் அவர் தெரிவித்தார். (ம-17)

# மின்சார வேலியை விரைந்து அமைத்துத் தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 31
இரவு வேளைகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. மக்கள் அச்சத்துடனேயே வாழ வேண்டியுள்ளது. அவற்றால் பெரும் பொருளாதார இழப்புக்களும் ஏற்படுகின் றன. மின்சாரவேலியைவிரைந்து அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண் டும்.

இவ்வாறு தட்டயமலை, பெரிய சாளம்பன், சின்னச் சாளம்பன், கணேசபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கிராமங்கள் ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவை. அங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே உள்ளது. தற்போது காலபோகச்செய்கைகளை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்ததாவது:
கிராமங்களுக்குள் இரவு வேளைகளில் யானைகள் நடமாடுகின்றன. தற்போது தான் காலபோகப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யானைகள் கிராமத்துக்குள் வரும்போது பயிர்களுக்கும் சேதத்தை ஏற்படுத்த கூடும். எமது கிராமத்துக்கு வருகின்ற யானைகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஒட்டுசுட்டானில் இருந்து முத்துஐயன் கட்டுகுளம் வரைக்கும் அமைக்கப்படவிருந்த மின் சார வேலிகளுக்காக காடு கள் வெளியாக்கப்பட்டுள்ளபோதும் இதுவரைக்கும் மேலதிகமாக எந்த வேலைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

> “மின்சார வேலி அமைக்கப்படுவதால் இந்த முறை பயிர்களைப் பாது காத்து எடுக்க முடியும் என நினைத்தோம். அதுவும் கேள்விக்குறியாக இருக்கின்றது. அமைக்கப்படும் மின்சார வேலியை விரைந்து அமைத்துத்தர வேண்டும்.”

கடந்தகாலங்களிலும் காலபோக பயிர்ச்செய்கைகள் மேற்கொண்ட போதும் யானைகளால் எங்களுடைய பயிர்கள் அழிக்கப்பட்டன. மின்சார வேலி அமைக்கப்படுவதால் இந்த முறை பயிர்களைப் பாது காத்து எடுக்க முடியும் என நினைத்தோம். அதுவும் கேள்விக்குறியாக இருக்கின்றது. அமைக்கப்படும் மின்சார வேலியை விரைந்து அமைத்துத் தர வேண்டும் - என்றனர்.

குறித்த பகுதிகளில் காட்டு யானைகளால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்கும் முகமாக மின்சார வேலிகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. படிப்படியாக வேலைகள் நடைபெறுகின்றன. இந்த வருட இறுதி அல்லது அடுத்த வருடத் தொடக்கத்தில் முழுமையாக முடிவடைந்துவிடும் - என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய. அனிருத்தன் தெரிவித்தார். (ம-7)

# கந்தர்மடம் பகுதியில் தொடரும் பகல் திருட்டால் மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், ஒக்.31
திருநெல்வேலி, கந்தர்மடம் பகுதிகளை அண்டிய பகுதிகளில் தொடரும் பகல்நேரத் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது:
இந்தப் பகுதிகளில் தொடர்ந்து பகல் நேரத் திருட்டுக்கள் நடக்கின்றன.

சில தினங்களுக்கு முன்னரும் மூன்று தினங்களில் மூன்று வீடுகள் பகல் வேளையில் உடைத்துத் கொள்ளையிடப்பட்டன. இதனால் நாம் எமது அன்றாட அலுவல்களுக்குச் செல்வதற்கு அஞ்சி வீட்டில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

திருநெல்வெலி பிள்ளையார் ஆலய வீதி, கந்தர்மடம் பலாலி வீதி, நாவலர் வீதி ஆகிய பகுதிகள் வரையில் பகல் திருட்டுக்கள் நடந் துள்ளன. இது குறித்துச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ம-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்களின் நம்பிக்கை வீண் போய்விடுமா?

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணையம் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுடன் இயங்குவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது நிகழ்வொன்றில் பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டியிருந்ததையடுத்து எழுந்த பெரும் வாதப்பிரதிவாதங்களுக்கிடையில் இலஞ்ச ஊழல் ஆணையத்தின் பணிப்பாளர் தில்ருக்ஷி விக்கிரமசிங்க பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அத்துடன் அந்த விவகாரம் முடியவில்லை. முன்னாள் கடற்படைத் தளபதிகள் மூவர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுக் குற்றவாளிகளுக்குரிய விசாரணைக் கூண்டில் நிறுத்தப்பட்ட விதம் குறித்து ஜனாதிபதி கவலை தெரிவித்திருந்தமையும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

குறித்த மூன்று தளபதிகளுடன் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் கூண்டில் நிறுத்தப்பட்டமையையும் சேர்த்தே ஜனாதிபதி கருத்துக் கூறியிருந்தார் என்ற வகையில் வெளிவந்த செய்தி, முன்னாள் ஆட்சியாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியைத் தோற்றுவித்திருந்ததுடன், ஜனாதிபதி அந்தவிதமாக தாம் ராஜபக்சவையும் சேர்த்துக் கூறவில்லையென்பதை நிலை நாட்ட பெரும் எத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அவன் கார்ட் நிறுவன ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே இவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. முன்னாள் தளபதிகள், நாட்டைப் பாதுகாக்க போர்புரிந்த வீரர்கள். அவர்களை இவ்வாறு குற்றவாளிக்குரிய விசாரணைக் கூண்டில் நிறுத்தி அவமதித்திருக்கக் கூடாது என்பது ஜனாதிபதியின் கருத்து.

குற்றம் புரிந்தவர்கள் எவராய் இருந்தாலும் அவர்கள் இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்குமுரிய வகையிலேயே விசாரிக்கப்பட வேண்டும். நெற்றிக்கண்ணைத் (சிவபெருமானே) காட்டினாலும் குற்றம் குற்றமே என்பது தமிழ் மரபு மொழி. முன்னாள் தளபதிகள், முன்னர் உயர் பதவியில் இருந்தவர்கள். பின்னர் அவன் கார்ட் நிறுவனத்தில் புதிய பதவிகளை ஏற்றுப் பணி புரிந்த காலத்தில் நிகழ்ந்துள்ள ஊழல்கள் தொடர்பாகவே விசாரிக்கப்படுகிறார்கள் என்பதை ஜனாதிபதி அறியாதவர் அல்லர். இதேபோல் முன்னர் நாட்டைப் பாதுகாக்கப் பணி புரிந்த பலர் இப்பொழுது திருட்டுக் குற்றங்களுக்கும், கொலை, கொள்ளைகள் புரிந்தமைக்கும் சிறையில் இருக்கிறார்கள். பலர் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டும் வருகிறார்கள். ஜனாதிபதியின் கண்ணாடிகளைப் போட்டுக் கொண்டு பார்த்தால் இவர்களும் நாட்டைக் காக்கப் போராடிய வீரர்களே. அவர்களையும் நீதிமன்றங்களில் குற்றவாளிக்குரிய விசாரணைக் கூண்டுகளில் நிறுத்தாமல் கௌரவம் அளிக்க வேண்டுமா என்றகேள்வி எழுகின்றது. முன்னாள் தளபதிகள் தெய்வீகமானவர்களுமல்ல. குற்றம் புரிய முடியாதவர்களுமல்ல.

போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணையைத் தடுத்து அதன் மூலம் முன்னாள் இராணுவத்தினரைக் காப்பாற்ற ஒற்றைக்காலில் நிற்கும் ஜனாதிபதியானவர், உள்ளூர் விசாரணைகளுக்கும் தடையாக இருக்கப் போகிறார் என்பதற்கு இந்தச் சம்பவம் கட்டியம் கூறுவதாக இருக்கப் போகிறதோ என்ற சந்தேகம் எழுகின்றது. ஈராக்கில் போர்க்குற்றம் புரிந்த பிரித்தானிய இராணுவத்தினரைக் காப்பாற்ற பிரித்தானிய பிரதமர் திரேசா மே அம்மையார் முன்னிற்பதை இவர் சுட்டிக் காட்டியிருப்பதில் இருந்து இது புலனாகின்றது.

பிரித்தானிய அமெரிக்கப் படைகள் ஐ.நா. தீர்மான அடிப்படையிலேயே அதன் அங்கீகாரத்துடனேயே ஈராக்கில் ஆக்கிரமிப்புப் படைகளாகப் போய் இறங்கின. வடக்கு, கிழக்கில் பொதுமக்கள் மீது அட்டூழியத்தில் இறங்கிய இலங்கை இராணுவத்துக்கு எந்த ஐ.நாவும் தீர்மானம் நிறைவேற்றி அங்கீகாரம் அளித்திருக்கவில்லை என்பது உலகறிந்த உண்மை. ஏறத்தாழ 80 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா.நிபுணர்கள் அறிவித்திருந்தனர்.

இவைகளை மறந்தோ, மறைத்தோ போர்க்குற்ற விசாரணைகளை ஜனாதிபதி தடுக்க முனைவாரானால் அவரை நீதிமான், நேர்மையான மனிதர் என்று தமிழ் மக்கள் நம்பி அவருக்கு வாக்களித்தமை வீண் போய் விட்டது என்றே பொருளாகும்.



சுதந்திரக் கட்சிக்குள்ளும் அதன் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள்ளும் இருந்த மகிந்த விசுவாசிகள் இதை விரும்பவில்லை. இதனால், மகிந்தவைமீண்டும் அழைத்து வந்து சுதந்திரக் கட்சியில் இணைத்து ஆட்சியைக்கைப்பற்றுவது; இல்லாவிட்டால்தனி அணியாக நின்று ஆட்சியைப் பிடிப்பது என்று முடிவெடுத்தனர்.

எம்.ஐ.முபாறக்

மகிந்த அரசு கவிழ்ந்து மைத்திரி-ரணில் தலைமையிலான புதிய அரசு உருவானபோது, நாட்டில் ஒருவகையான உற்சாகம், வளமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கை, சந்தோசம் என்பவை ஏற்பட்டன. நாட்டின் சகல மக்களின் பிரச்சினைகளுக்கும் இந்த அரசிடம் தீர்வு இருக்கும் என்று மக்கள் நம்பினர்.

போர் முடிந்தபோதும், இந்த நாட்டு மக்கள் மகிந்த ஆட்சியின் மீது இதுபோன்ற நம்பிக்கையை வைத்தனர். அந்த நம்பிக்கை காலப்போக்கில் நிறைவேற்றப் படாமல் போனதாலேயே அவரை மக்கள் ஆட்சியில் இருந்து விரட்டினர்.

மகிந்தவிடம் முன்வைத்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாததால் அந்த விடயங்களை இன்னொரு அரசிடம் எதிர்பார்த்து புதிய அரசை உருவாக்கினர். அரசு உருவான வேகத்தில் பல நம்பிக்கையூட்டல்கள் இடம்பெற்றன. அரசியல் நாகரிகம், வீண் விரயம் தவிர்ப்பு, பிரச்சினையை ஜனநாயகரீதியாக அணுகுதல் மகிந்த அரசின் ஊழல், மோசடி அம்பலம் போன்றவற்றின் ஊடாக இந்த அரசு நாளுக்கு நாள் களைகட்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாக, வரலாற்றில் முதல் தடவையாக இரு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைத்துக்கொண்டமை மிகப்பெரிய ஜனநாயக முன்னெடுப்பாக மக்களால் பார்க்கப்பட்டது. இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகம் வளர்வதற்கு இந்த இணைவு வழிவகுக்கும் என்று நம்பப்பட்டது.

இந்த நம்பிக்கைகள், உற்சாகம் எல்லாம் இப்போது குறையத் தொடங்கியுள்ளன. சகல அரசுகளும் ஒன்றுதான் என்று மக்கள் நினைக்கும் நிலை தோன்றியுள்ளது. மத்திய வங்கி நிதி மோசடி மற்றும் ஜனாதிபதி-பிரதமர் முறுகல்நிலை போன்றவை மக்களை மேலும் சோர்வடையச் செய்துள்ளன.

### ஜனாதிபதி-பிரதமர் முறுகல்நிலை பகிரங்கமாகி விட்டது

அதில் ஜனாதிபதி-பிரதமர் முறுகல்நிலைதான் இப்போது பரபரப்பாகப் பேசப்படுகின்றது. இதற்கான காரணத்தை மக்கள் தேடுகின்றனர். தேசிய அரசு கலைந்துவிடுமோ என்று எண்ணுகின்றனர். மறுபுறம், இந்த முறுகலை மெருகேற்றி, எப்படியாவது தேசிய அரசைக் கலைத்துவிடும் முயற்சியில் மகிந்த அணி ஈடுபட்டு வருகின்றது.

அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய உள்ளிட்ட கடற்படை அதிகாரிகள் மூவர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டமையையும், லஞ்ச,ஊழல் மற்றும் நிதிக் குற்றப் பிரிவு ஆகியவற்றின் செயற்பாடுகளையும் ஜனாதிபதி பகிரங்கமாக விமர்சித்தமையே பிரதமர்-ஜனாதிபதி முறுகல் நிலை வெளிவரக் காரணம்.

ஜனாதிபதியின், இந்தக் கூற்றின் மூலம் அவர் மறைமுகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையே விமர்ச்சித்தார் என்பதை நாம் அறிவோம். இதனால் இரண்டு கட்சிகளும் தேசிய அரசில் இருக்கின்றபோதிலும், அவை வெவ்வேறு திசைகளில் பயணிக்கின்றன என்பதை இது வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

இதற்கான காரணம் என்ன? ஏன் பிரதமரை ஜனாதிபதி மறைமுகமாக விமர்சிக்க வேண்டும் என்ற கேள்விகள் எழுகின்றன. சுதந்திரக் கட்சியின் பிளவின் பின்னணியில் பிரதமர் உள்ளார் என்று கூறப்படுகின்ற விடயமே, இதற்கான உண்மையான காரணம்.

சுதந்திரக் கட்சியின் பிளவுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் விமல் வீரவன்சவை, பிரதமர் கைக்குள் போட்டுக் கொண்டு-சுதந்திரக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி-ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் நிலைமையை ஏற்படுத்துவதற்கு முற்படுகிறார் என்று கூறப்படுகின்றது. இது உண்மையா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஜனாதிபதிப் பதவியைத் தொடர்ந்து, சுதந்திரக் கட்சியின்தலைவர் பதவியையும் மைத்திரிபால சிறிசேன கைப்பற்றினார்.

சுதந்திரக் கட்சிக்குள்ளும் அதன் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள்ளும் இருந்த மகிந்த விசுவாசிகள் இதை விரும்பவில்லை. இதனால், மகிந்தவை மீண்டும் அழைத்து வந்து சுதந்திரக் கட்சியில் இணைத்து ஆட்சியைக் கைப்பற்றுவது இல்லாவிட்டால் தனி அணியாக நின்று ஆட்சியைப் பிடிப்பது என்று முடிவெடுத்தனர்.

அந்தத் திட்டப்படி, மகிந்த தரப்பினர் மகிந்தவை அரசியலுக்கு அழைத்து வந்து தனியாக நின்று மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சிக்கு கடும் நெருக்குதலைக் கொடுக்கத் தொடங்கினர். கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுதல் அல்லது கட்சியைப் பலவீனப்படுத்துதல் என்ற திட்டத்தோடு அவர்கள் களமிறங்கினர்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கும் மகிந்த அணி திட்டங்களை வகுத்துச் செயற்படுகின்றது. இதனால் சுதந்திரக் கட்சி பலவீன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தாளும் தந்திரத்தில் வல்லவரான ரணிலால் சுதந்திரக் கட்சி நலிவு படுத்தப்படுமா?

மடைந்தால் அது ரணில் தரப் புக்கே வாய்ப்பாக அமையும்.

**பிரித்தாளும் தந்திரத்தாலேயே மகிந்தவும் ஆட்சியைத் தக்க வைத்திருக்கிறார்**

ஆகவேதான், தமது தரப்புக்குத் தானாக வந்து சேரும் வாய்ப்பைத் தக்கவைப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க முயல்கிறார் என்று சொல்லப்படுகின்றது. அரசியலில் வெற்றி பெறுவதற்காக பிரித்தாளும் தந்திரம் பயன்படுத்தப்படுவது புதிதல்ல. இந்தப் பிரித்தாளும் தந்திரத்தின் ஊடாகவே மகிந்த அவரது ஆட்சியைத் தக்க வைத்திருந்தார்.



மகிந்தவின் இந்த யுக்தியால் ஐக்கிய தேசியக் கட்சியே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. பின்பு ஒருவாறு ஆட்சியைக் கைப்பற்றிய போதிலும், தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய பெரும்பான்மை ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிட்டவில்லை. சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்ட ரசை நடத்திச் செல்கின்ற போதிலும், அது தொடர்ந்தும் அவ்வாறு இருக்கமுடியாது. இனிவரும் தேர்தல்களில் எல்லாம் தனித்து ஆட்சியை அமைக்கும் நிலையை ஐக்கிய தேசிய கட்சி அடையவேண்டும். அதற்கு இப் போது கிடைத்திருக்கும் இந்த வாய்ப்புத்தான் ஒரே வழி. இதை ரணில் தவறவிடுவாரா?

இன்று சுதந்திரக் கட்சியின் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் மகிந்தவுடன் உள்ளனர். இனிவரும் அனைத்துத் தேர்தல்களிலும் தனித்துப் போட்டியிட்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்பதில், ரணில் விக்கிரமசிங்க குறியாக இருக்கின்றார்.

சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவின் ஊடாக ஐக்கிய தேசிய கட்சியை வளர்த்துவிட வேண்டும் என்று பிரதமர் விரும்புகின்றார். அதற்காக அவர் மகிந்த அணிக்கு உதவுகிறார்–சுதந்திரக் கட்சியை மேலும் பிளவு படுத்த அவர் திரைமறைவில் இருந்து செயற்படுகின்றார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களை மறுப்பதற்கு இல்லை.

அரசியலில் முடிச்சுப் போடுவதில் ரணில் வல்லவர் என்பது நாடறிந்த உண்மை. அவரது காய் நகர்த்தல்களை, இராஜதந்திரத்தை இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாது. பன்னாட்டு வலையமைப்புக்களின் ஊடாக மிகவும் நிதானமாக தூரநோக்குடன் காய் நகர்த்தும் வல்லமையுள்ள ரணில், சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைவார் என்பது தெளிவானதே.

புலிகள் தோல்வி அடைவதற்கு ரணில் நடைமுறைப்படுத்திய பிரித்தாளும் தந்திரம்தான் காரணம் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அவ்வளவு பெரிய பலமான அமைப்பையே பலவீனப்படுத்திய ரணிலுக்கு, இந்த சுதந்திரக் கட்சியை பலவீனப்படுத்துவது ஒன்றும் பெரிய விடயமல்ல. இந்த விடயத்தை விளங்கிக்கொண்ட மைத்திரிக்கு பிரதமர்மீது அதிருப்தி ஏற்படத் தொடங்கியது. அந்த அதிருப்தியின் வெளிப்பாடுதான் ஜனாதிபதியின் அந்த சர்ச்சைக்குரிய கூற்று என்பதுதான் உண்மை.

**இனி வரும் தேர்தல்களில் எல்லாம் தனித்து ஆட்சியை அமைக்கும் நிலையை ஐக்கிய தேசியக்கட்சி அடையவேண்டும். அதற்கு இப்போது கிடைத்திருக்கும் இந்த வாய்ப்புத்தான் ஒரே வழி. இதைரணில்தவற விடுவாரா?**

## வடபகுதியில் கடைவிரிக்கும் தென்பகுதி பிச்சைக்காரர்கள்

வடக்கில் போர் முடிவுக்கு வந்து, மக்கள் இயல்பு வாழ்வில் காலூன்றினார்களோ இல்லையோது தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள், இங்கு கால்பதித்து வர்த்தகத்தை விரிவுபடுத்தி விட்டன.

அதேபோன்று தென்பகுதி நடைபாதை வியாபாரிகள் கூட, வடக்கு சந்தையில் பாய்விரித்து விட்டனர். எல்லாம் தொழில் முன்னேற்றம்.

வடக்கில் வடபகுதி அல்லாதோர் தமது தொழிலை விஸ்தரித்தது போன்று, தென்னிலங்கை பிச்சைக்காரர்களும் தமது கரங்களை வடக்கு நோக்கி நீட்டி, வியாபித்து விட்டார்கள்.

வடபகுதி பஸ்களில் பார்த்தால் தெரியும். சிங்களமொழிப் புத்தகங்களைக் கூட விற்பனை செய்கிறார்கள்.

தமிழ்மொழியில் இனிமை பொங்கப் பாடுவதும், அண்ணா, தம்பி என்று அன்பொழுகப் பேசுவதும், நோட்டீசுகளை அச்சடித்து கொடுத்து கையேந்தி உருகுவதும் கண் கொள்ளாக் கட்சிகள்.

நேற்று (27.10.2016) இடம்பற்ற சம்பவம் ஒன்று. தியத்தலாவையிலிருந்து வந்த தனியார் பஸ் கொடிகாமம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தது. இடையில் ஒரு பெண்மணி ஏறினார். 45 வயதிருக்கும்.

கையில் ஒரு அச்சடிக்கப்பட்ட மட்டை: அவரது குறைபாடுகள், நோய்கள் என ஒரு பிச்சைக்காரருக்கு இருக்கவேண்டிய அத்தனை அம்சங்களும் அழகான தமிழில் பிழைகள் எதுவுமின்றி அதில் ரைப் பண்ணப்பட்டிருந்தன.

ஆனால் அந்தப்பெண்ணுக்கு எந்தவிதமான நோய்களும் இருப்பதாகத் தெரியவில்லை. நல்ல சுறுசுறுப்பாகவே இருந்தார். அவர் எதுவும் பேசவில்லை. எல்லோரிடமும் மளமளவென அந்த அட்டையைக் கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்த எமது கொடை வள்ளல்கள் பலர் தம்மாலான உதவியுடன் அட்டையைத் திருப்பிக்கொடுத்தார்கள்.

வாசலில் அவசரமாக இறங்குவதற்காக வந்தார். சாரதி மெதுவாக அவரிடம் கதை கொடுத்தார்: நான் அவர்களின் பேச்சில் காதைக் கொடுத்தேன்!

எப்படி தொழில் போகிறது என்றார் சாரதி.

கொஞ்சம் பரவாயில்லை அன்று ஒரு 2 – 3 ஆயிரம் நட்டமாகிட்டுது... இந்தமுறை ஊருக்கு வாறது சந்தேகம் என்றார் அப்பெண். ஏன் என்று சாரதி வினவ, ஹர்த்தாலைக் காரணம் கூறிய அவர் சரி பார்ப்பம், தீபாவளி வருகிறது தானே? அதுமுடிய ஊருக்குப்போவோம் என்றார்.

இன்று நாள்முழுக்க நிலையாக நின்று வியர்வை சிந்தி உழைக்கும் ஒருவொருவருக்கும் கூலியாக 1500 ரூபாதான் வழங்கப்படுகிறது. அதைக் கொடுப்பதற்கு கூட நம்மவர்கள் அழுவதுண்டு.

ஆனால் ஊரை ஏமாற்றிப் பிழைக்கும் ஒருகூட்டம் ஊர்விட்டு ஊர்வந்து எப்படி பிழைக்கிறது என்று பாருங்களேன்!

பாத்திரமறிந்து பிச்சைபோடுங்கள்!

*மாலதி ஜெயக்குமார், கிளிநொச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

# மனித உரிமைகள் சபையிலிருந்து தூக்கி எறியப்படவுள்ளது ரஷ்யா

மொஸ்கோ, ஒக். 31

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடு என்ற சிறப்பு அந்தஸ்தை இந்த வருடத்துடன் இழக்கவுள்ளது ரஷ்யா.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் 47 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. அவற்றில் 14 நாடுகளின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைவதால் இந்த அமைப்பின் புதிய உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் ரகசிய வாக்குப்பதிவு நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற்றுள்ள 193 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர்.



பிரேசில், சீனா, குரோசியா, கியூபா, எகிப்து, ஹங்கேரி. ஈராக், ஜப்பான், ருவான்டா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, துனிசியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்று மனித உரிமைகள் அமைப்பின் அங்கத்துவ நாடுகளாக ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் செயற்படவுள்ளன.

பதவிக்காலம் முடிவடையவுள்ள 14 நாடுகளில் ரஷ்யாவும் ஒன்று. இதனால் அந்த நாடு தனது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளப் போட்டியிட்டது. கிழக்கு ஐரோப்பாக் கண்டத்தின் சார்பில் இடம்பெறுவதற்கான இரண்டு இருக்கைகளுக்காக போட்டியில் ரஷ்யாவை எதிர்த்து குரோசியாவும், ஹங்கேரியும் போட்டியிட்டன. இதில் ஹங்கேரிக்கு 144 வாக்குகளும், குரோசியாவுக்கு 114 வாக்குகளும் கிடைத்தன. ரஷ்யாவுக்கு 112 வாக்குகளே கிடைத்தன. இரு வாக்குகள் வித்தியாசத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினின் உறுப்பினர் என்ற அந்தஸ்திலிருந்து இந்த வருடத்துடன் துக்கி எறியப்படவுள்ளது ரஷ்யா.

சிரியாவில் ரஷ்யா அரங்கேற்றிவரும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் காரணமாகவே ரஷ்யாவுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கண்காணிப்பக இயக்குநர் லூயிஸ் சார் பேன்னேவ் தெரிவித்தார். (ம-எ)



## 80 ஆயிரம் ம... தாய். மன்ன...

பாங்கொக், ஒக்.31

கடந்த மாதம் உயிரிழந்த தாய்லாந்து மன்னர் பூமிபாலுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஒவ்வொரு நாளும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். நேற்றுமுன்தினம் மட்டும் 80 ஆயிரம் மக்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர் என அந்த நாட்டின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. உலகிலேயே அதிக வருடங்கள் அரசாண்ட (ஏழு தசாப்தம்) மன்னர் எனும் பெருமையை பூமிபால் படைத்திருந்தார். இவர் கடந்த 13



## மும்பையில் தீ விபத்து

மும்மையில் அவுரங்காபாத் பகுதியிலுள்ள பட்டாசுக் கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 150 கடைகள் எரிந்து சாம்பலாகின. அங்கிருந்த 30 வாகனங்களும் தீக்கிரையாகின.

குறித்த பகுதியில் ஜில்லாபரிசித் மைதானம் உள்ளது. தீபாவளிப் பண்டிகையையொட்டி உரிமம் பெற்று இங்கு 150 பேர் பட்டாசுக் கடைகளை வைத்திருந்தனர். மின்கசிவு காரணமாக ஒரு பட்டாசுக் கடையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ, மிக விரைவாகப் பரவி அங்கிருந்த 150 கடைகளும் எரிந்து சாம்பலாகின. பட்டாசைக் கொள்வனவு செய்ய வந்திருந்த வாடிக்கையாளர்களின் 30 வாகனங்களும் தீக்கிரையாகின.

10 வாகனங்களில் வந்த தீயணைப்புப் படையினர் கிட்டத்தட்ட மூன்று மணிநேரமாகப் போராடி தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். (ம-எ)

# ஏமனிலும் கொலரா

சனா, ஒக். 31

ஏமனில் கொலராத் தொற்று தீவிரமாக ஏற்பட்டுள்ளது என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்தது.

ஏமனின் தலைநகர் சனா உட்பட ஐந்து நகர்களில் கொலராவின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. கடந்த மூன்று வாரங்களில் மட்டும் ஆயிரத்து 400 பேர் கொலராவால் தாக்கப்பட்டுள்ளனர். 7.6 மில்லியன் மக்களுக்குக் கொலராத் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது என உலக சுகாதார நிறுவனம் வழங்கியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஏமனில் தற்போது கொடும் பட்டினி நிலவுகிறது. 14 மில்லியன் பேர் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 லட்சத்து 70 ஆயிரம் பேர் சிறுவர்கள். இந்த நிலையில் கொலராத் தொற்று அந்த நாட்டு மக்களுக்கு அடிமேல் அடியாக வந்து விழுந்துள்ளது. (ம-எ)





கொலம்பியாவில் மெடிலின் நகரப்பகுதியில் கடந்த வாரம் பு... 6 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தனர். 50 ஆயி... சரிந்தது. தற்போது மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன...

# மீண்டும் விசாரிக்கப்படுகிறார் ஹிலாரி: அமெரிக்க...

வொஷிங்டன், ஒக். 31

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளரான ஹிலாரி கிளிங்ரன் அயலுறவுத் துறை அமைச்சராக இருந்த காலத்தில் அரச தேவைகளுக்கு தனது தனிப்பட்ட மின்னஞ்சலைப் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன என அமெரிக்க புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் அமெரிக்காவின் அயலுறவுத்



துறை அமைச்சராக ஹிலாரி பதவி வகித்தார். குறித்த காலத்தில் அவர் தனது தனிப்பட்ட மின்னஞ்சல்களை அரச தேவைகளுக்குப் பயன்படுத்தினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது. அமெரிக்க ஊடகமொன்றுக்கு கடந்த வருடம் வழங்கிய நேர்காணலொன்றில் தனது குற்றத்தை ஹிலாரி ஏற்றுக் கொண்டிருந்தார். இருப்பினும் தான் முறையற்ற விதத்தில் எந்தத் தவறும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

அமெரிக்க... வரும் 8 ஆ... குடியரசுக்... வேட்பாளர... ஜனநாயகக... ஹிலாரிகிளி... மீது மின்... தொடர்ச்சிய... ட்ரம்ப். கிட்டத்... கமான மி... அழித்துவிட்... ருந்தார். ட்ரம்பின் இ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சவுதி இரட்டைத் தாக்குதல்; 50 பேர் பரிதாபமாகச் சாவு

ஏமனில் நேற்றுமுன்தினம் சவுதி கூட்டுப்படை நடத்திய இரு வேறு தாக்குதல்களில் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து 50 பேர் கொல்லப்பட்டனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஏமன் அரசுக்கு எதிராக ஹௌதி ஆயுதக் குழு செயற்பட்ட வருகிறது. ஆயுதக் குழுவுக்கு எதிராக சவுதி தலைமையில் சில நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. ராஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் சவுதிக் கூட்டுப் படையால் நடத்தப்பட்ட தாக்குதலில் 17 பேர் கொல்லப்ட்டனர். அல்-ஜைதியா மாநிலத்தில் உள்ள ஹொடைடா நகரச் சிறையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 33 பேர் உயிரிழந்தனர். ஹௌதி ஆயுதக் குழுவை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் உயிரிழந்தவர்களில் அதிகமானவர்கள் பொது மக்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



## மக்கள் திரண்டு
## ருக்கு அஞ்சலி

ஆம் திகதி உயிரிழந்தார். பூமிபாலின் உடல் தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் வைக்கப்பட்டுள்ளது. தினமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். நேற்றுமுன்தினம் மட்டும் 80 ஆயிரம் மக்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர். மகா வயிரலொங்கோன் அடுத்த மன்னாராக அறிவிக்கப்பட்ட போதிலும் அடுத்த ஒரு வருடத்துக்குத் துக்க தினம் என்பதால் பதவியேற்பு வைபவம் பிற்போடப்பட்டுள்ளது. (ம-எ)



## சேர்பியா பிரதமரை கொல்லச் சதியாம்

சேர்பியா பிரதமர் அலெக்சாண்டர் வியூசிக்கை கொல்லச் சதி நடத்துள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சு தெரிவித்தது. வியூசிக்கின் வீடு தலைநகர் பெல்கிரேடில் உள்ளது. அவரது வீட்டின் அருகே ஓர் இரும்புப் பெட்டியில் வெடிகுண்டுகள் மற்றும் வெடி பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அதில், கையெறி குண்டுகள், கடற்படையினர் பயன்படுத்தும் துப்பாக்கிகள், குண்டுகள் உள்ளிட்டவை இருந்தன. அவை அனைத்தும் அங்கிருந்து அகற்றப்பட்டன. பிரதமரைக் கொலை செய்ய சதித்திட்டம் போடப்பட்டுள்ளது என்று உள்துறை அமைச்சர் ஸ்டேபானேவிக் தெரிவித்தார் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



புதன்கிழமை மிகப் பெரிய நிலச்சரிவு இடம்பெற்றது. இந்த அனர்த்தத்தில் யிரம் சதுர பரப்பளவு மண், குடியிருப்புக்கள் மற்றும் பிரதான வீதி மீது ன. (ம-எ)

## ஸ்பெய்னில் அரசுக்கு எதிராக வெடித்தது மக்கள் போராட்டம்

மட்ரிட், ஒக். 31
ஸ்பெய்னின் தற்போதைய பிரதமரான மரியானோ ராஜ்ஜொய் பிரதமராகத் தொடர வேண்டும் எனத் தெரிவித்து வீதிகளில் இறங்கி மக்கள் போராட்டம் நடத்தினர்.
ஸ்பெய்னில் நிலவும் மோசமான அரசியல் சூழல் காரணமாக சிறுபான்மையினரின் கட்சியைச் சார்ந்த மரியானோ கடந்த 10 மாதங்களாக பிரதமராகப் பதவி வகித்தார். அவர் பதவி விலக வேண்டிய காலம் நெருங்குகிறது. இதனையடுத்து அவர் தொடர்ந்தும் பதவியில் இருப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் 170 பேர் ஆதரவாகவும் 115 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். 350 பேர் கொண்ட நாடாளுமன்றில் சோசலிசவாதிகள் 65 பேர் வாக்கெடுப்பில் பிரசன்னமாகவில்லை. எனவே கடந்த வியாழன் இடம்பெற்ற வாக்குப்பதிவு கவனத்தில் கொள்ள முடியாது எனத் தெரிவித்த அரசு மீண்டும் ஒருதடவை வாக்குப் பதிவை நடத்தத் திட்டமிட்டது.
அரசின் இந்த முடிவை எதிர்த்த மக்கள் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவே நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர். (ம-எ)







## ஐக்கிய நாடுகள் சபையிலும் தீபாவளிக் கொண்டாட்டம்

நியூயோர்க், ஒக். 31
அமெரிக்காவில் உள்ள இந் தூதரகத்தின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக தீபாவளி கொண்டாடப்பட்டது. தீபங்கள் மற்று மின்விளக்கு அலங்காரத்தி ஐக்கிய நாடுகள் சபை வள் வண்ணமயமாகக் காட்சி அளித்தது. ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்திய தூதர் விழாவை ஏற்பாடு செய்திருந்தார். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலா பான் கி மூன் மற்றும் உலகி பலநாடுகளை சேர்ந்த தூதர்கள், அமெரிக்க அரச காரிகள் உட்பட ஆயிரத்துக் அதிகமானவர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். (ம

## த் தேர்தல் களத்தில் திரில்

ஜனாதிபதித் தேர்தல் எதிர் ஆம் திகதி நடைபெறவுள்ளது. க் கட்சியின் தலைமை ராக டொனால்ட் ட்ரம்பும், க் கட்சியின் வேட்பாளராக ளிங்டனும் உள்ளனர். ஹிலாரி னஞ்சல் குற்றச்சாட்டை யாகத் தெரிவித்து வந்தார் த்தட்ட 30 ஆயிரத்துக்கும் அதி மின்னஞ்சல்களை ஹிலாரி ட்டார் என்றும் அவர் தெரிவித்தி

இந்தக் கருத்து அதிர் வலைகளைத் தோற்றுவித்திருந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக ஹிலாரி மீண்டும் விசாரிக்கப்படவுள்ளார் என என அமெரிக்க புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.
புலனாய்வுத்துறையின் இந்த அறிவிப்பு ஹிலாரியின் வாக்குச் சேகரிப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. விசாரணை குறித்து நான் அஞ்சவில்லை. விசாரணையை விரைவாக மேற்கொள் ளவும். விசாரணை மூலம் நான் நிரபராதி என நிரூபிக்கப்படுவதை விரும்புகிறேன் என ஹிலாரி தெரிவித்தார். (ம-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாளை

**ஐப்பசி-16**

செவ்வாய்க்கிழமை -01.11.2016

திதி: துதியை பி.இ. 03.10

நட்சத்திரம்: விசாகம் பி.ப.02.51

ராகுகாலம்: 03.03-04.33 வரை

சுபநேரம்: 10.33-12.03 வரை

# லக்கினத்தில் பிறந்தவர்களுக்கான பலன்கள்




## மகர லக்னத்தில் பிறந்தவர்களுக்கு

அழகை ஆராதிப்பவர்கள். மலர்களின் மேல் விருப்பமுள்ளவர்கள். சிவந்த நிறமுடையவர். மனைவி / கணவன் மேல் பிரியமுடையவர்கள். மறைவிடத்தில் மச்சமுள்ளவர். திரிலோக சஞ்சாரியாக ஊர் சுற்றுபவர். பலதுறை கல்வியும் காரியம் சாதிக்கும் வலிமையும் பெற்றவர்கள்.

திட புத்தியும் பல வழிகளில் உழைத்து சம்பா திக்கும் திறனும் உள்ளவர். சுய நலம் மிக்க காரியவாதி. மனைவியிடம் அதிக அன்புள்ளவர். படிப்பில் மந்தமானவர். கஞ்சர், எளிதில் பிறரை நம்பாதவர். சந்ததி விருதியுண்டு. இளைத்த ஒல்லியான தேகம் உள்ளவர். தொங்கும் கன்னம், தொய்ந்த தோள்கள், வயதுக்கு அதிகமான தோற்றமும் உள்ளவர். பயன் கருதியே பிறருக்கு உதவுபவர், அரசு தரப்பு வேலைகள் உண்டு, மிகவும் சந்தேக புத்தி உள்ளவர். ஏதாவது ஆரோக்கிய குறைபாடு இருந்துகொண்டு இருக்கும். சனி ஜாதகத்தில் நன்கு அமைந்தால் தெளிவு, தியாக புத்தி இருக்கும். தீர்க்கதரிசியாகவும் இருப்பார். அரசாங்க வேலை, தொழிற்சாலை, எண்ணெய் வள வாரியம், விவசாயம் முதலிய தொழில் உண்டு. மூட்டு வலி, ருமாட்டிசம், கால் சம்பந்தமான நோய்கள் உண்டு. 3,4,5,7,8,10,32,37 வது வயதுகளில் தண்ணீர், சுரம், விசம் இவற்றால் தொல்லைகள் ஏற்படலாம்.

## கும்ப லக்னத்தில் பிறந்தவர்களுக்கு

இந்த லக்னத்தில் பிறந்தவர்கள் குறுகிய எண்ணம் கொண்டவர்கள். கல்வியில் தேர்ச்சி இல்லாதவர்கள். நன்றி மறப்பவர்கள், பழி பாவத்திற்கு அஞ்சாத குணம் உடையவர்கள். சிவந்த கண்களையுடையவர்கள். பெண் நண்பர்கள் அதிகம் உண்டு. பித்த சம்பந்தமான நோயுடையவர்கள். நேர்மை, ஒழுக்கம், நற்குணம், அறிவுத்திறன், வாக்கு வன்மை இவை உள்ளவர். சிற்றின்ப இச்சையும் அதிகம் உள்ளவர். புத்திர மித்திரர் மேல் பாசம் வைப்பவர். எல்லோரையும் பகைத்துக்கொள்வதால் வேண்டாதவர்களே அதிகம் இருப்பர். கறுப்பு நிறமுடைய உயர்ந்த உடல் வாகு, முட்டை போன்ற நீள்வட்ட முகம், ஒட்டிய கன்னம், அழகிய தோள்கள், பெருத்த வயிறு இவை எல்லாம் கலந்த தோற்றமுடையவர். நோய் அதிகம் ஏற்படாது. கலை இலக்கியம், நாட்டியப் பயிற்சி, சிற்பக் கலைகளில் தேர்ச்சி பெறுவர். மனித இனத்துக்கு சேவை செய்யும் மனபான்மையும் உண்டு, இருதரப்பு வாதங்களையும் கேட்டு நீதி வழங்குவதில் சமர்த்தர். இதனால், நீதிபதி போன்ற பதவிகளையும் வகிப்பார். எழுத்துத் தொழில், வேதாந்தம், தத்துவம், ஞானம் போன்றவற்றிலும் ஈடுபாடு உண்டு. விஞ்ஞானத் துறைகளிலும் ஈடுபாடு உண்டு. தியானம், யோகம், ஆசனம், ஜபம், பூஜை, பிராணயாமம் இவற்றில் பற்று அதிகம். மறைமுகமாக யாருக்கும் தெரியாமல் பிறருக்கு உதவி செய்வார். இல்லறம் இவர்களுக்கு பெரும்பாலும் வெற்றி அடைவதில்லை. விசித்திரமான ஜோடிப் பொருத்தமற்ற திருமணமே அமையலாம். சீதள பாதிப்பு, இதய நோய், வாத நோய், வெண் குஷ்டம் போன்ற தோல் நோய்கள், வாதம், வலிப்பு, மூட்டு வலி போன்ற நோய்கள் ஏற்படலாம்.

## விழிப்புலனற்றவர்களும் சாதனையாளரே!

விழிப்புலனற்றவர்களின் அடையாளச் சின்னம் வெள்ளைப் பிரம்பு. இதனை விழிப்பூட்டுவதற்காக ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி வெள்ளைப்பிரம்பு தினம் கொண்டாடப்படுகிறது. இந்தத் தினம் எமது நாடு விழிப்புலனற்றவர்கள் மீது கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. ஆனாலும் எம்மில் பலருக்கு அது தொடர்பான தெளிவு இன்றும் ஏற்படவில்லை. விழிபுலன் அற்ற வகையில் 500 பேர் வரையில் வடமாகாணத்தில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களும் சமூகத்தில் உள்ள சாதாரண மனிதர்களைப்போல எல்லா உரிமைகளையும் கொண்டவர்கள். குறிப்பாக அரசியலில் ஈடுபடுதல், கல்விகற்றல் விளையாடுதல் என பல உரிமைகள் இவர்களுக்கு இருக்கின்றது. இருந்தும் அவர்களை ஈடுபடுத்துவது, அல்லது அவர்களை ஈடுபடத் தூண்டுவது என்பது குறைவாகவே உள்ளது. இவர்களை பரிதாபமாக எமது சமூகம் பார்க்கின்ற நிலைகளும் உள்ளன. ஆனால் தற்போது இந்த விழிபுலனற்றவர்கள் சாதாரண மனிதர்களை விட பலசிறப்பான செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். விழிப்புணர்வற்றோருக்கான செயற்பாடுகளை பலவாறு ஏற்படுத்தியிருந்தாலும் விழிப்புணர்வற்றோருக்கு உள்ள சட்டங்கள் தொடர்பில் போதுமான விளக்கம் இன்மை மக்களிடமும் ஏன், அவர்களிடமும் கூட காணப்படுகின்றது. அதாவது, வீதியில் விழிப்புணர்வற்றவர் வெள்ளைப்பிரம்புடன் செல்லும் போது வாகனங்களை அவதானமாகச் செலுத்த வேண்டும். அவர் வீதியில் எவ்விடத்திலும் வீதியை கடப்பதற்காக தனது வெள்ளைப்பிரம்மை நீட்டினாலும் வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும். அவர்கள் பஸ்ஸை மறிக்கும் போது அது பஸ் தரிப்பு நிலையம் இல்லாவிட்டாலும் நிறுத்த வேண்டும். ஆனால் இவ்வாறான அவர்களுக்குரிய சின்னச் சின்ன விடயங்களில் கூட மக்களுக்கு தெளிவில்லாத நிலையுள்ளது. இவ்வாறான விழிப்புணர்வற்றவர்கள் மீது நடத்தப்படும் சட்ட மீறல்களுக்கு சாதாரண தண்டனையை விட இரட்டிப்புத் தண்டனையுள்ளது என்பதனையும் மக்கள் அறிந்து வைத்திருக்கவில்லை. விழிப்புணர்வற்றவர்கள் வாழ்நாள் பூராகவும் கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவேண்டிய தேவையுள்ளது. இது தொடர்பாக கற்ற சமூகத்தைச் சேர்ந்த சிலருக்கும் முழுமையா ன அறிவின்மை காணப்படுகின்றது. இவர்களுக்காக வெளிநாடுகளில் இருந்து வரும் புத்தகங்களுக்கான தபால் கட்டணம் இலவசமானது. இதனால் இவர்கள் வெளிநாடுகளில் இருந்தும் புத்தகங்களைப் பெற்றுப் படிக்க முடியும்.

வட மாகாணத்தில் மக்களினுடைய பங்களிப்பு மற்றும் அவர்களின் ஆர்வம் என்பவற்றினால் மாற்றுத் திறனாளிகளுக்கான விழிப்புணர்வு சர்வதேச தரத்தில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. விழிப்புணர்வற்றோருகான கிரிக்கெட் போட்டி சவுண்போல் கிரிக்கெட் என பெயரிட்டு நடைபெறுகிறது. விழிப்புணர்வற்றோரும் சமூகத்தில் ஆளுமையுள்ளவர்கள் என்பதுடன் அவர்கள் சாதாரண மனிதர்களைபோல் அனைத்து செயற்பாட்டிலும் ஈடுபடக்கூடியவர்கள் என்பதனை வெளிப்படுத்தும் முகமாக இது இடம்பெறுகிறது. இவ்வீரர்கள் பந்தில் இருந்து வரும் சத்தத்தை உணர்ந்து விளையாட்டில் ஈடுபடுவார்கள். அதனைப் பார்க்கும் போது சாதாரண வீரர்கள் பங்கேற்பதுபோல் அவர்கள் சத்தத்தை அடையாளப்படுத்தி விளையாடுவதை அவதானிக்க முடியும். வடக்கின் வவுனியா பொது நூலகத்தில் பார்வையற்றோருக்கான நூலகம் ஒன்று இலங்கையில் முதன்முறையாக அமைக்கப்பட்டது. இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள பார்வையற்றோருக்கான நூலகத்தில் பார்வையுள்ளோரும் பார்வையற்றோரும் ஒரே நேரத்தில் பத்திரிகையை வாசிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் யாழ். நூலகத்திலும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறானவர்கள் சாதாரண மனிதர்கள் செய்யும் வேலையை விட பல மடங்கு சிறப்பான வேலைகளை செய்துகொண்டு இருக்கின்றனர். இவ்வாறு தொழில் செய்பவர்கள் அனைவருமே தமது தொழில் நடவடிக்கைகளை சட்டபூர்வமாக பதிவு செய்தும் உள்ளனர். கடந்த 2013 இல் நடைபெற்ற வடமாகாண சபைத்தேர்தலில் கண்பார்வையற்ற ஒருவர் அரசியல் மேடைகளில் பேசியிருந்தார். உண்மையில் அவர் எக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்தார் என்பதற்கு அப்பால் பார்வையற்ற ஒருவர் அரசியல் செய்வதானது இலங்கை விழிப்புணர்வற்றோர் தொடர்பான செயற்பாட்டில் உயர்மட்டத்தில் உள்ளதையே எடுத்துகாட்டுகின்றது. இதேபோல் கல்வித்துறையிலும் பலர் சாதனை செய்துள்ளார்கள். இன்று பல்கலைக்கழகத்திற்கு பலர் சென்றிருக்கிறார்கள். புலமைப் பரிசில் பரீட்சையில் கூட சித்தியடைந்துள்ளனர். சமூகம் பார்வையற்றவர்களுக்கு உள்ள உரிமைகளை புரிந்து அதன்படி அவர்களை வாழ வழிவிடுமாகவிருந்தால் அவர்கள் பல சாதனைகளை செய்து எமக்கு முன்மாதிரியானவர்களாகச் செயற்படுவார்கள் என்பதே உண்மை. சமூகத்தில் எங்களில் ஒருவராக வலம் வரும் இவர்களும் சாதனை புரிந்துள்ளார்கள். புரிந்து வருகிறார்கள். எனவே எமது சமூகம் அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அழகைத்தேடி ஓடாதீர்கள் பெண்களே!

**உடுவிலூர் கலா**

இன்றைய பெண்களின் பெரும் பிரச்சினையாகவும் தேடலாயும் உள்ளது அழகு. இயற்கை அழகோடு பிறந்த பெண்கள், செயற்கை அழகை நிரப்பிக் கொள்வதற்காக நில்லாமல் ஓடுகின்றனர். அழகை மேம்படுத்த பெருதொகைப் பணத்தை வாரியிறைத்து அழகுச் சிகிச்சை நிலையங்களைநோக்கிப் படை எடுக்கின்றனர். ஒப்பனை நிலையங்கள் கவர்ச்சி விளம்பரங்களோடு எங்கும் முளைவிட்டுப் பெண்களைக் கவர்ந்திழுக்கின்றன. நாளுக்கு நாள் அறிமுகமாகும் கிறீம்வகைகள் பெண்களின் மனதைக் கொள்ளை கொண்டு, அழகு என்கிற தேடலை திருப்தி செய்வதாக உள்ளன. அழகை மேம்படுத்தவே நேரத்தையும் பணத்தையும் செலவு செய்கின்றனர் பெண்கள்.

அழகு என்றால் என்ன? தோலின் நிறம் தான் அழகா? செயற்கைப் பொருள்கள் தான் அழகை மேம்படுத்துகின்றனவா? முன்னர் வாழ்ந்த பெண்கள் அழகாயில்லையா? அழகாக வாழவில்லையா? இன்றைய பெண்களின் சிந்தனைக் கருவான அழகு, அவர்களது வாழ்வை அழகு செய்யுமா. என்பன பெண்களை நோக்கிக் கேட்கப்படவேண்டிய கேள்விகளாக உள்ளன. எட்டி அழகு பதினெட்டில் அழகு எந்தப் பெண்ணும் இருபதில் ரெட்டை அழகு என்னும் பாடல்வரிகள் பெண் இயற்கையாக அழகானவள் என்பதைக் கூறிநிற்கின்றன. நாய்க்குட்டியும் நடுவயதில் அழகு என்பார்கள் எம்மவர்கள். இவையெல்லாவற்றையும் மீறி ஒருபடி மேலே போய் தமிழ் நூல்களை நோக்கின் கோட்டானை அழகும் அழகல்ல, கல்வி அழகே அழகு என இடித்துரைப்பதைக் காணலாம்.

அழகு என்பது சரியான பாதையில் நேர்கொண்ட சிந்தனையோடு வாழும் போது, தானாக ஒவ்வொரு பெண்ணின் உடலிலும் உள்ளத்திலும்பெருமையோடு அரியணை ஏறுகிறது. பெண்மை அழகு. தாய்மை இன்னொரு அழகு. இரண்டும் சேர்ந்த பெண் அழகின் வர்க்கமல்லவா? இதனை அறியாத பெண்கள் அழகின் இமயத்தைத் தேடி இரசாயனக் கலவைகளில் படிக்கற்களில் ஏற முண்டியடிக்கின்றனர். தலையிலிருந்து கால் வரை அழகைத் தக்கவைப்பதற்காகப் படும் அவஸ்தை சொல்லி மாளாது. கருமையான பெண்கள் திடீரென வெண்ணிறமாகத் (முகம்மட்டும்) தோற்றமளிக்கின்றனர். முடியைப் படுத்தாதபாடு படுத்துகின்றனர். வாசிப்புத்திறனை வளர்க்கிறார்களோ இல்லையோ அழகுக் கலை விளம்பரங்களைத் தவறாது வாசித்துக் கொள்கின்றார்கள். முன்பின் வரும் பெண்கள் என்ன கிறீம் பூசுகிறார்கள்? வெண்ணிறம்எப்படி வந்தது? என்பதை அறியும் வாஞ்சையுடன் அங்கலாய்க்கின்றனர். செயற்கை அழகுக் கலாசாரம் ஒன்றினையே உருவாக்கி விட்டார்கள்.

வளர்ந்து விட்ட ஆடம்பர அவசர உலகில் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்ய வருமானம் போதுமானதாக இல்லை. குடும்பத்தின் நாளாந்த தேவைகளைப்பட்டியலிட்டால் நிதிப் பற்றாக்குறையால் தலைகள் உருள்கின்றன. இதுபோதாதென்று கிறீம்களுக்கான செலவு வேறு. அழகுக் கலையானது பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. இதன் ஆதரவாளர்கள் அனுசரணையாளர்கள் பெண்களே. அழகையே முதன்மைப்படுத்தும் பெண்கள் நிதி நிர்வாகத்தைப் பற்றிச் சிறிதளவேனும் கவலை கொள்வதில்லை. மாநிறத்தை ஏற்படுத்தும் கிறீம்கள் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயிலிருந்து மேலதிகமான ஆயிரங்கள் வரை உள்ளன. திருமணப் பெண்ணின் முக ஒப்பனை, உடையலங்காரம் என்பன ஓரிரு மணித்தியாலங்களில் பல ஆயிரங்களைப் பறிமுதல் செய்வதை அவதானிக்க முடிகிறது. உணவுக்கோ, கல்விக்கோ கொடுக்காத முக்கியத்துவத்தைப் பெண்கள் இரசாயனக் கலவை கலந்த அழகுக்குக் கொடுக்கிறார்கள் என்பதே உண்மை. அழகை கிறீம்களை வைத்தே வரையறை செய்கிறார்கள்.

பண்டைக்காலப் பெண்கள் ஒப்பனை நிலையத்துக்குச் சென்றார்களா? கிறீம் பூசி மாநிறம் பெற்றார்களா? என்பதை ஒவ்வொரு பெண்ணும் சிந்தித்துணர வேண்டும். இலக்கியங்களும், புராண இதிகாசங்களும் பெண்களின் அழகை மிகத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. பெண்ணின் கூந்தலுக்கு இயற்கை மணமுண்டா? என்கிற கேள்வியினூடாக, கூந்தல் அழகு ரசிக்கப்பட்டது. அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள் என சீதையின் விழியழகைப் பார்க்கிறோம் இட்ட அடிநோக, எடுத்த அடி கொப்பளிக்க எனப் பாத அழகையும் காண்கிறோம். இவ்வாறு பெண்ணின் அங்கம் அங்கமாக அழகு ரசிக்கப்பட்டது. அன்றும் இன்றும் கவிஞர்களும் புல வர்களும் பெண்ணழகை கற்பனைக்கு விருந்தாக்கிக் கவிதை வடித்தார்கள் வடிக்கிறார்கள். சிந்துவெளி நாகரிகத்தின் பக்கத்தைப் புரட்டுங்கள், சங்ககாலம், சங்கமருவிய கால நூல்களை ஆராயுங்கள். உண்மையழகு புலப்படும். பெண்களின் அழகை வைத்தே கடற்கன்னி, பூமகள், பூங்கொடியாள், கொடியிடையாள், நூலிடையாள், தேவதை என்னும் சொற்கள் தோற்றம் பெற்றன. இன்னும் செவ்விளநீர் மேனி பொதிந்து நடைபயிலும் தேவதையே என்றும் செவ்வாழைக்கால் துலங்கும் பூங்கொடியாள் தளிருடல் நெளியாதே என்றும் பெண்ணின் அழகை வர்ணிப்பதைக் காணலாம்.

அழகான பெண்களே! மெலனின் என்னும் உடற்சுரப்பே தோல் நிறத்துக்கு காரணம். ஒவ்வொரு பெண்ணும் அழகோடு பிறந்தவர்களே. உங்களுக்குள் பொதிந்து கிடக்கும் அழகை தேடிக் கண்டுபிடியுங்கள். நிறம் மட்டும் அழகல்ல. கல்வி அழகே அழகு. பெண் வாழ்க்கையில் அழகாய் வாழ கல்வியே மிக முக்கியமானது. எதுவாயினும் கல்வியைக் கற்கத் தவறிவிடாதீர்கள். இரசாயனக் கலவைகளுக்குச் செலவிடும் பணத்தைக் கல்விக்குச் செலவிடுங்கள். ஒரு பெண் கற்ற கல்வியோடு ஆங்கிலக் கல்வியை மேலதிகத் தகைமையாகக் கற்றுக் கொண்டால், வாழ்க்கை எழில் கொஞ்சும் நந்தவனமாக சுகந்தம் வீசும். நல்லொழுக்கத்துடன் பிறருக்கு உதவி செய்து வாழ்ந்தால், அகம் அழகு பெறும். ஓய்வுநேரங்ளைப் பயனுள்ளதாக்கிச் சுயதொழில்களை கற்றுக் கொண்டால் சொந்தக்காலில் நிற்கும் பலம் கிடைக்கும். நல்ல புத்தகங்களை வாசித்தால் அறிவு பெருக்கெடுக்கும், சமூகத்துக்குச் சேவை செய்து ஏழை எளியோரைத் தாங்கினால் இறையாசி கிடைக்கும். இவற்றை விடுத்து செயற்கை அழகைத் தேடி ஓடுவது நியாயமா?

பெண்களே அழகைத் தேடி ஓடாதீர்கள். வீண் செலவு செய்யாதீர்கள் கடந்த காலங்களில் தப்பான அழகுச்சிகிச்சையால் சாவைத் தழுவிக் கொண்ட மங்கையரை நாம் அறிவோம். இரசாயன சேர்க்கை கிறீம்கள் உடனடி அழகைக் கொடுத்தாலும் நீண்டநாள் ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும். உடல் அழகைப் பேண சத்துணவுகளை (பழங்கள், பச்சைக் காய்கறிகள்) உண்ணுங்கள் தினமும் மூன்று லீற்றர் நீர் அருந்துங்கள் இறை தியானங்களில் ஈடுபடுங்கள் நல்லதைச் செய்யுங்கள், வேண்டாத செயற்பாடுகளில் மனதை அலைக்கழிக்காதீர்கள். உள்ளம் அழகு பெற்றால் உடல் அழகு பெறும். நிலைக்கண்ணாடி முன் நின்று உங்கள் அழகை நீங்களே ரசியுங்கள். நான் அழகானவள் என உரத்துச் சொல்லுங்கள், மனமகிழ்ச்சியோடு வாழுங்கள். அழகானவர்களே, மாயையான உடலை அழகுபடுத்த முண்டியடித்தாலும் சாவின் போது அது அழிந்துவிடும் அழிவடையும் அழகுக்காக நில்லாது ஓடாதீர்கள். அழகாக வாழக்கற்றுக் கொள்ளுங்கள். பேரழகு உங்களிடம் குடிகொள்ளும். அழகின் பூபாளம் உங்கள் உள்ளங்களிலும் ஒலிக்கும் நீங்கள் தயாரா பெண்களே?

> அழகான பெண்களே! மெலனின் என்னும் உடற்சுரப்பே தோல் நிறத்துக்கு காரணம். ஒவ்வொரு பெண்ணும் அழகோடு பிறந்தவர்களே. உங்களுக்குள் பொதிந்து கிடக்கும் அழகைத் தேடிக் கண்டுபிடியுங்கள். நிறம் மட்டும் அழகல்ல. கல்வி அழகே அழகு. பெண் வாழ்க்கையில் அழகாய் வாழ கல்வியே மிக முக்கியமானது. எதுவாயினும் கல்வியைக் கற்கத் தவறிவிடாதீர்கள். இரசாயனக் கலவைகளுக்குச் செலவிடும் பணத்தைக் கல்விக்குச் செலவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRIN
Twitter : UTHAYANPRINT

# சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்



போரில் தோல்வி அடைந்த அரசன் ஒருவன்தன்உயிரைக் காப் பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான்.
அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியடாக இருந் ததனால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மிகப் பெரியபடை இருந்ததனால் வெற்றி பெற்றான். தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்றுஅங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.
தோல்வி கண்ட அரசன் மிகவும் மனவருத்தம் கொண்டான். மனச்சோர்வி னால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்தி ருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதி யினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டி ருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.
இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விட வேண்டும்?
நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணினான். மறுபடியும் தன் எதிரியுடன் போர் புரியத் தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டுக்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆள்களைச் சந்தித்தான்.
தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற் கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



# அறிவியல் படிகள்

நிலவைக் காட்டி உணவை ஊட்டும்
நிலமை இனிமேல் நிச்சயம் கிடையாது!
நிலவில் இறங்கி நேரில் நாங்கள்
உலவும் காலம் உண்மயாகத் தடையேது?

அறிவியல் படிகள் அம்புலி நோக்கி
பொறியியல் உதவியால்
பூமியில் நாம் அமைத்திடுவோம்!
பொறிகளைக் கொண்டு
பூமியாம் பந்தை செறிவுடன் நாங்கள்
சீக்கிரமாக உருட்டிடுவோம்!

கணிப்பொறி கொண்டு
கல்வியை வென்று பணிகளை நாங்கள்
பாரினில் நன்கு முடித்திடுவோம்!
அணுவினைப் பிளந்து
ஆக்கத்தில் செலுத்தி பிணிகளைப் போக்கி
பெருமைகள் தம்மைப் படைத்திடுவோம்!



# வரலாற்றில் இன்றைய தினம்



1876 – இராட்சத சூறாவளியினால் இந்தியாவில் 200,000 பேர் வரை உயிரிழந்தனர்.

1913 – அமெரிக்காவின் முதலாவது மோட்டார் வாகன நெடுஞ் சாலையான லிங்கன் நெடுஞ்சாலை திறந்து வைக் கப்பட்டது.

1918 – முதலாம் உலகப் போர் ஒஸ்ரோ–ஹங்கேரியின் பேரரசு கலைக்கப்பட்டது.

1922 – இத்தாலியின் பிரதமரானார் பெனிடோ முசோலினி.

1924 – முதலாவது சேமிப்பு வங்கியின் பன்னாட்டு மாநாட்டில், இத்தாலி மிலானில் உலக சேமிப்புத் தினம் அறிவிக் கப்பட்டது.

1961 – விளாடிமிர் லெனினின் கல்லறையிலிருந்து யோசப் ஸ்டாலினின் சடலம் அகற்றப்பட்டது.

1994 – அமெரிக்க ஈகிள் விமானசேவை விமானம் 4184, இன்டியானா றோஸ் லோவுனுக்கு அருகில் விபத்துக் குள்ளாகி 68 பேர் உயிரிழப்பு.

2000 – கறுப்பு ஜூலை 1983 போன்றதோர் இனக் கலவரத்தக்கு தான் ஒருபோதும் இடமளிக்கமாட்டாரென நாட்டு மக் களுக்கு ஜனாதிபதி உரை.

2000– மலையகப் பகுதியின் பதற்றத்தையடுத்து நாடு முழுவதும் பாதுகாப்பு அதிகரிப்பு .

2004 – காத்தான்குடியில் முஸ்லிம் பிரிவினரிடையே மதக் கலவரம். ஊரடங்கு நடைமுறையில்.

2004 – படையினர் மற்றும் பொலிஸார் புரியும் உரிமை மீறல்கள் பற்றி தகவல் தந்தால் உரிய நடவடிக்கையென யாழ்.வந்த மனித உரிமைக் குழு அதிகாரி தெரிவிப்பு.

2006 – யாழ்ப்பாணத்தில் பொருள்கள் தட்டுப்பாடா? அத்தி யாவசிய சேவைகள் நாயகம் மறுப்பு.

2006 – குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள் களை இந்தியாவிலிருந்து தருவிக்க முயற்சி. யாழ். வர்த்தகர்கள் தமிழ் நாட்டில் ஆராய்வு.



# டானி ப்ராக்மவுத்

ஆஸ்திரேலியாவில் காணப்படும் பறவைகளில் ஒன்று, டானி ப்ராக்ம வுத் (Tawny Frogmouth). பார்ப் பதற்கு ஆந்தையைப் போலவே இருக்கும். இதன் உடல் மரப்பட்டை



நிறத்தில் இருப் பதால், பிற உயி ரினங்களால் இதை அறிய இயலாது. கிளை களுக்கு நடுவே வாயைத் திறந்து கொண்டு அசை யாமல் இருக்கும். சிறியபறவைகள், பூச்சிகள், எலி, தவளை போன்றவை அருகே வந்தவுடன் சட்டெனப் பிடித்து, வாயை மூடிக்கொள்ளும். அவ்வளவு தான்... அன்றைய சாப்பாடு முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையாவது சாதிக்கனும் என்று
நினைக்கிறப்போவே...
பயங்கரமா பசிக்குது...



சாப்பிட்டு முடிச்சதும் செம்மயா தூக்கம்
வந்துடுது... என்ன டிசைனா இருக்கும்...?

மிஸ்ட் கோல் குடுத்தா திரும்ப
போன் பண்றவன் மனுசன்...



மிஸ்ட் கோல் குடுத்தவனுக்கே
மிஸ்ட் கோல் குடுக்கறவன்
ரொம்ப... பெரிய மனுசன்...

எதுக்கு பையனுக்கு
1000 ரூபாய் குடுத்திங்க...



ஏதோ பேஸ்புக் வாங்கனும் எண்டு சொன்னான்...
புக் இல்லாம பையன் எப்படிப் படிப்பான்...

"மயக்கம் போட்டு உங்க
கணவர் விழுந்துட்டாரா.
ஏன்?"
"என் மாமியாரோட நான்
சிரிச்சிப் பேசிகிட்டிருந்ததப்
பார்த்துத் தொலைச்சிட்டார்."

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 1 | 9 | 5 | 7 | 4 | 8 | 2 |
| 4 | 9 | 8 | 2 | 1 | 6 | 3 | 7 | 5 |
| 7 | 5 | 2 | 3 | 8 | 4 | 1 | 9 | 6 |
| 9 | 7 | 5 | 4 | 2 | 3 | 8 | 6 | 1 |
| 8 | 2 | 4 | 1 | 6 | 5 | 7 | 3 | 9 |
| 1 | 6 | 3 | 8 | 7 | 9 | 5 | 2 | 4 |
| 2 | 8 | 7 | 6 | 4 | 1 | 9 | 5 | 3 |
| 5 | 1 | 9 | 7 | 3 | 2 | 6 | 4 | 8 |
| 3 | 4 | 6 | 5 | 9 | 8 | 2 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.



## 100 திரையரங்குகளில் கௌதமிபுத்ர சடர்கனி ரெய்லர்

தேசிய விருது வென்ற கஞ்சே படத்தின் இயக்குநர் க்ரிஷ் இயக்கிய சரித்திர திரைப்படம் கௌதமிபுத்ர சடர்கனி திரைப்படம், இந்தப் படத்தின் நாயகன் பால்கிருஷ்ணாவின் 100ஆவது படமாக இது உருவாகி வருகின்றது. ஹொலிவூட்டின் முன்னாள் கனவுக்கன்னி ஹேமமாலினி பாலகிருஷ்ணாவுக்கு அம்மாவாக நடிக்கின்றார். இந்தப் படத்தில் பாலகிருஷ்ணாவுக்கு ஜோடியாக நடிகை ஸ்ரேயா நடிக்கின்றார். படத்தின் முன்னோட்டக் காட்சிகள் அண்மையில் வெளிவந்து ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. 2017 ஜனவரியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளிவரவிருக்கும் கௌதமிபுத்ர சடர்கனி திரைப்படம் பாலகிருஷ்ணாவின் 100ஆவது திரைப்படம் என்பதால், பெரிய அளவில் விளம்பரப்படுத்த படக்குழு திட்டமிட்டுள்ளது. 100க்கும் மேற்பட்ட திரையரங்குகளில், கௌதமிபுத்ர சடர்கனி படத்தின் முன்னோட்டக் காட்சிகளை வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Sk Siva radikan
விடை தெரிந்தும் கடினமான கேள்வியாகவே
நகர்கின்றது வாழ்க்கை....

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை நிலைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்களுக்கு சுப செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். சமூகத்தில் நற்பெயர் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். பண வரவு அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மிதுனம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் மிதமான அளவில் இருக்கும். உறவினர் வகையில் செலவு ஏற்படலாம். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**கடகம்:** நிதானமாகப் பேசுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரம் சீர்பெற மாற்றுத் திட்டம் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் ஆடம்பரச் செலவில் ஈடுபடுவர்.

**சிங்கம்:** பணிகள் நிறைவேறத் தகுந்த முன்னேற்பாடு செய்வீர்கள். கொடுத்த வாக்குறுதி நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். குடும்ப மகிழ்ச்சி நிலைக்கும்.

**கன்னி:** முக்கிய பணியைப் பிறர் பொறுப்பில் தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். வீடு, வாகன வகையில் செலவு ஏற்படலாம். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**துலாம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு நிறைவேறத் தாமதமாகலாம். நண்பரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி தரும். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடலாம். ஆன்மிக சிந்தனையுடன் ஈடுபடுவர்.

**தனுசு:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்களுக்கு சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**மகரம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி ஆதாயம் காண்பீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள். ஆன்மிக சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்:** நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மீனம்:** குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 60 | 50 | 40 | 40 | 50 |
| கத்தரி | 60 | 60 | 80–160 | 100 | 80 | 80 | 90 | 35 |
| கரட் | 80 | 80 | 240 | 100 | 140 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 80 | 60 | 60 | 80 | 80 | 60 |
| பயிற்றை | 120 | 160 | 240–320 | 240 | 260 | 240 | 100 | 60 |
| பாகல் | 120 | 200 | 240–300 | 260 | 260 | 200 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 120 | 120 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 90 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 90 | 120 | 60–120 | 100 | 100 | 120 | 90 | 70 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 | 35 | 80 | 70 | 30 |
| தக்காளி | 80 | 60 | 80–160 | 60 | 80 | 100 | 120 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 40 | 30 | 20 | 40 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 40 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 60 | 100 | 80 | 80 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 50 | 80 | 60 | 80 | 60 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 120 | 80 | 100 | 80 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 200 | 80 | 100 | 100 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 160 | 140 | 120 | 200 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 35–40 | 35–40 | 30 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100–110 | 120 | 85 | 120 |
| தேசிக்காய் | 400 | 600 | 600 | 500 | 580 | 800 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 200 | 120 | 120 | 180 | 200 | 70 |
| இராசவள்ளி | 180 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 50 | 60 | 60 | 50 | 40 | 80 | 100 |






மின்
குமிழ் அலங்காரப் பொருள் அறிமுகமாகியுள்ளது. மட்பாண்டத்தால் ஆன இவை. மின் குமிழ் ஒளிர்வின் போது கலைநயமிக்க உணர்வை வழங்கும். இவை 900 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## பூசணிக்காய் அல்வா



### தேவையான பொருள்கள்

முற்றிய பூசணிக்காய் - 1
சீனி - தேவையான அளவு
நெய் - சிறிதளவு
திராட்சை - 8
முந்திரி - 10
ஏலப்பொடி - சிறிது
ஜாதிக்காய் பொடி - சிறிது
கேசரிப்பவுடர் - ஒரு சிட்டிகை

### செய்முறை

பூசணிக்காயை தேங்காய்த் துருவியால் துருவிக் கொள்ளவும்.

துருவிய பூசணிக்காயை நான்கு டம்ளர் தண்ணீரில் வேகவைத்து எடுத்து ஒரு வெள்ளைத் துணியில் வடிகட்டி பிழிந்தெடுக்க வேண்டும். இதனுடன் சீனியைச் சேர்த்து அடுப்பில் வேகவைக்க வேண்டும்.

சீனி பாகாக உருகி. மொத்தமாக இறுகி வரும் வேளையில் சட்டியில் நெய் விட்டு முந்திரி. திராட்சை. பாதாம் என்பவற்றை வறுத்து அல்வாவில் போட்டுக் கிளறவும். இறக்குவதற்கு முன்பு. ஏலப்பொடி. ஜாதிக்காய்ப் பொடி போட்டு கடைசியாக கேசரிப் பவுடர் சேர்த்துக் கிளறி விடவும். பூசணிக்காய் அல்வா தயார்.

## உலர் திராட்சையின் பயன்கள்

- இதயத் துடிப்பு சீராக சிலருக்கு இதயம் மிக வேகமாகத் துடிக்கும். இவர்கள் எப்போதும் ஒருவிதமான பதற்றத்துடனே காணப்படுவார்கள். இவர்கள் பாலில் இந்தப் பழங்களைப் போட்டு காய்ச்சி ஆறியபின் மறுபடியும் காய்ச்சி, பாலையும் பழத்தையும் சாப்பிட்டு வந்தால் இதயத் துடிப்பு சீராகும்.
- மலச்சிக்கலால் கஷ்டப்படுபவர்கள், ஒரு கப் நீரில் 25 உலர் திராட்சையைப் போட்டு கொதிக்க விட்டு இறக்கி, மசித்து, அதில் தேன் கலந்து, தினமும் இரண்டு வேளை குடித்து வந்தால், மலச்சிக்கலில் இருந்து விரைவில் விடுபடலாம். கர்ப்ப காலத்தில் இப்பிரச்சனையை கர்ப்பிணிகள் அதிகம் சந்திப்பார்கள். எனவே கர்ப்பிணிகளும் இந்த முறையைப் பின்பற்றலாம்.
- சுகமான நித்திரைக்கு தினமும் படுக்கைக்குச் செல்வதற்கு அரைமணி நேரம் முன்பு பாலில் 4 அல்லது 5 காய்ந்த திராட்சையைப் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி பாலை அருந்தி வந்தால் சுகமான நித்திரை கிடைக்கும்.
- பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் வயிற்றுப் பிடிப்பு மற்றும் அதிகப்படியான இரத்தப்போக்கினால் கஷ்டப்படுவார்கள். அவர்கள், தினமும் ஊற வைத்த உலர் திராட்சையை நீருடன் எடுத்து வந்தால், மாதவிடாய்ப் பிரச்சினைகளில் இருந்து விரைவில் விடுபடலாம்.
- ஆண்கள் விறைப்புத்தன்மை குறைபாட்டினால் கஷ்டப்பட்டால், தினமும் உலர் திராட்சையை ஒரு கையளவு உட்கொண்டு வந்தால், இப்பிரச்சினை நீங்கும்.
- எலும்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை வராமல் இருக்க வேண்டுமானால், உலர் திராட்சையை அன்றாடம் சாப்பிடுவது நல்லது. ஏனெனில் இதில் எலும்புகளின் வலிமை மற்றும் ஆரோக்கியத்திற்குத் தேவையான கல்சியம் வளமாக இருப்பதால், இதனை தினமும் சாப்பிட்டு வந்தால், ஆஸ்டியோபோரோசிஸ் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | 700 | 700 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 600 | 400 |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | 600 | – |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 300 | 350 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | 400 | 350 |
| முரல் | 300 | 350 | 300 | 500 | 300 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 300 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 400 | – |
| ஒரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | – |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 300 | 300 | 350 |
| சூடை | 150 | 130 | 100 | 200 | 100 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 200 | 300 | 150 |
| மதனம் | 150 | 150 | – | 400 | 300 | 400 | 200 |
| [illegible] | 100 | 150 | [illegible] | [illegible] | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 200 | 200 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 300 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெ.காயா




# அமெரிக்க அதிபர் வாய்ப்பும் ஹிலாரியும்

அமெரிக்கத் தேர்தல் களத்தில் உண்மையில் ஹிலாரி கிளிண்டனின் நிலைப்பாடுதான் என்ன என்று தொடக்கத்தில் குழப்பமிருந்தது. ஆனால், விக்கிலீக்ஸ் செய்தித் தளத்தின் குறிப்பிலிருந்து கோல்டுமேன் ாக்ஸ் மற்றும் சல வங்கிகளுக்காற்றிய ஹிலாரியின் உரைகளைப் படிக்க வாய்ப்புக் கிடைத்ததிலிருந்து, அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதிக்குரிய தகுதி அவருக்கு இருக்கின்றது என்று உறுதியாக நம்பலாம்.

உண்மையில், அந்த உரைகள் மிகச் சிறப்பானவை. நல்ல பார்வை, சரியாகச் செயல்களைச் செய்து முடிப்பதற்கான நடைமுறை, அணுகுமுறை, அனைவரதும் சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னலை வலுப்படுத்துவதற்கான தேவையையும், சமூகத் திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்வதற்குத் தேவையான வளர்ச்சியை உருவாக்குவதற்கு அமெரிக்க வணிக உலகத்தைக் கட்டவிழ்த்து விடுவதையும் சமன்செய்யும் அளவுக்கு ஆரோக்கியமான உள்ளுணர்வு ஆகியவை அந்த உரைகளில் வெளிப்படுகின்றன. இதிலிருந்து ஆட்சி நடத்துவதில் ஹிலாரிக்கு இருக்கும் நம்பிக்கை வெளிப்படுகின்றது. அதே ஹிலாரியே தேர்தல் பிரச்சாரங்களில் அதிகம் வெளிப்பட்டிருக்க வேண்டும், அவருக்குப் பெரும்பான்மை வெற்றி கிடைத்தாலும் மறுப்பதற்கில்லை.

**யதார்த்தக் கனவு**

2013 மே மாதம் பிரேசிலின் பான்கோ இடாவ் நகரில் நடந்த நிகழ்ச்சியில் அவர் பேசிய வார்த்தைகள் தான் இன்று விக்கிலீக்ஸ் குறிப்பிட்டிருக்கும் அந்தக் குறிப்பு. "வர்த்தகத்தை அதிகரிக்க நம்மிடம் ஒரு ஒருங்கிணைந்த திட்டம் தேவை என்று நினைக்கிறேன். மேலும், இறக்குமதிப் பொருள்கள் மீது சுங்கவரி விதிக்கும் பாதுகாப்புவாதத்தையும், சந்தை, வர்த்தகத்தின் மீதான தடைகளையும் கட்டுப்படுத்த வேண்டும்" என்று ஹிலாரி பேசியிருந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. "திறந்த வர்த்தகம், திறந்த எல்லைகள், நீடித்த வளம் கொண்ட, எதிர்காலம் கொண்ட ஒரு பிராந்தியப் பொதுச் சந்தைதான் எனது கனவு. அந்தப் பிராந்தியத்தில் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு இருக்க வேண்டும்" என்றும் அவர் கூறியிருக்கிறார். கேட்கவே இனிமையாக இருக்கிறது. நாடுகள் ஒன்றுக்கொன்று வர்த்தகம் செய்துகொள்கின்ற, பணி, படிப்பு, சுற்றுலா, வணிகம் ஆகியவை தொடர்பாகப் பல்வேறு தரப்பினர் தங்களுக்குள் ஒத்துழைப்புடன் செயல்படுகின்ற ஒரு பிராந்தியம் தேவை என்கின்றார். குறைவான முரண்பாடுகள், அதிகமான வளத்துடன் கூடிய வளர்ச்சி குறிப்பாக, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அடிப்படையிலான வளர்ச்சி கொண்ட பிராந்தியத்தையே அவர் விரும்புகின்றார்.

நமது பிராந்தியத்தை அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தை அல்லது ஆசிய வர்த்தக நாடுகளை – வர்த்தகம், சுற்றுலா, அறிவு, உழைப்பாளர்கள் ஆகியவற்றின் போக்குகள் கட்டுப்படுத்தப்படும் நிலையில் உள்ள மத்திய கிழக்குப் பிராந்தியத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஹிலாரியின் பார்வை எத்தனை இயல்பானது என்பது புரியும். சுதந்திர வர்த்தகம் மற்றும் தொழிலாளர் இயக்கங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மை அமெரிக்கர்களுக்கு இழப்பீடு கிடைக்கும் வகையிலும், நல்ல முறையில் அவர்கள் பாதுகாக்கப்படும் வகையிலும் நாம் சில நடவடிக்கையைச் செய்ய வேண்டியிருக்குமா? அதற்குப் பெயர்தான் பிரச்சினையைச் சரிசெய்தல் என்கின்றார்.

2013 ஏப்ரல் 18இல் மார்கன் ஸ்டான்லி குழு முன்னர் நிகழ்த்திய உரையில், சிம்ஸன் பௌல்ஸ் ஆணையம் பரிந்துரைத்த பற்றாக் குறை குறைப்புத் திட்டத்தைப் புகழ்ந்தார் ஹிலாரி. வரி அமைப்பில் சீர்திருத்தம் கொண்டுவருவது முதல், முதலீடுகளை அதிகரிப்பது, தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பது, குறிப்பிட்ட சில வரிகளை அதிகரிப்பது, சில செலவுகளைக் குறைப்பது போன்ற பரிந்துரைகளைக் கொண்ட திட்டம் அது.

பெரும் பேரம் எனும் திட்டத்தின் இறுதி வடிவம் பல வடிவங்களை எடுக்கலாம் என்றும் ஹிலாரி சொன்னார். எனினும், தனிப்பட்ட முறையில் பேசும்போது, "சிம்ஸன் பௌல்ஸ் ஆணையம் சரியான வரைவுத் திட்டத்தை முன்வைத்திருக்கிறது. உதாரணத்துக்கு, நாம் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்; நம்மிடம் போதுமான வருமானம் இருக்க வேண்டும்; மேலும் வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும். இது மூன்று பாகங்கள் கொண்ட சூத்திரம்" என்றார். அவர் சொன்னது சரிதான். வணிகம் – சமூகத் துறைகள், ஜனநாயகக் கட்சியினர் குடியரசுக் கட்சியினர் என்று தேய்ந்துபோன பொருளாதாரப் பாதையிலிருந்து வெளிவருவதும், எதிர்காலத் தலைமுறையினரைக் காப்பதும் அவசியம்.

**சுற்றுச்சூழலில் அக்கறை**

2013 ஒக்ரோபரில் 'கோல்டுமேன் ாக்ஸ்' நிகழ்ச்சியில் பேசிய ஹிலாரி, 2010இல் நிறைவேற்றப்பட்ட 'டாட் பிராங்க் வால் ஸ்ட்ரீட் சீர்திருத்தம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் வங்கிகள் மீது விதித்திருக்கும் கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பேசியிருக்கிறார் போலும். அத்தனை சட்டங்களையும் விட்டொழிப்பது என்பதல்ல அவரது கருத்து. சிறிய அளவிலான வணிகத்துக்கும், புதிய தொழில்களுக்கும் அவை தேவையில்லாத பாரமாக இருக்கக் கூடாது என்பதை உறுதிசெய்வதுதான் அவரது எண்ணம்.

**வெற்றிக்குப் பங்கமில்லை**

ஹிலாரி தொடர்பாகப் படிக்கும்போது, திறமையான, நடைமுறைக்கேற்ற, மத்திய, இடது அரசியல் தலைவராகவும், வர்த்தக விரிவாக்கம், தொழில் வளர்ச்சி, உலகளாவிய ஒருங்கிணைப்பு ஆகியவற்றை நோக்கி அமெரிக்காவைக் கொண்டு செல்லக் கூடிய வகையில் வணிகச் சமூகத்துடனும், குடியரசுக் கட்சியினருடனும் இணைந்து பணியாற்றக் கூடிய தலைவராகவுமே தென்படுகிறார்.

## காத்திருக்கிறேன்

தாயின் கருவறையில்
அன்பில் மலர்ந்து
கண்ணின் மணியாய்
மணியின் நிழலாய்
கலந்து பிறந்து
கழிப்பில் மகிழ்ந்தோம்
தோழிலிட்ட தந்தை
பறி போனதால்
தந்தையாய் எமை
தாங்கி கைகொடுத்த
தெய்வமும் நீயல்லவோ
பெற்றவள் சுமை
ஐயிரண்டு திங்கள்
தந்தையின் சுமை
தானிருக்கும் காலம்
அண்ணனின் சுமை
உயிர் உள்ளவரை
கண்ணில் இமையாக
தங்கை நலன்காணும்
துணையும் நீதானே உன்
மறைவுகேட்டு
கண்ணீரில் நனைந்தபடி
தாளாத துயரில்
தனியாக வாடுகிறேன்
வாயிலிருந்தும் ஊமையாய்
என் உயிர் உள்ளவரை
உன்நினைவு என்னைவிட்டு
நீங்காது அண்ணா

மண்ணும் கடல்வானும்
மறைந்தாலும் என்பிறப்பே
உன்னை மறக்கமுடியாது
என் உயிரில் கலந்த உறவே
இடையில் முறிந்த உறவை
தொடர்வதற்காய்
இன்னொரு பிறப்புக்காய்
காத்திருக்கிறேன்.



சி.கலாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்




### ஓட்டுநர் இன்றி நகரக்கூடிய லொறி அமெரிக்க முன்னணி நிறுவனங்கள் தயாரிப்பு

ஓட்டுநர் இன்றி தானாக இயங்கும் கார்கள் தயாரிக்கப்பட்டுள்ள நிலையிலே தற்போது ஓட்டுநர் இன்றி தானாகவே இயங்கி இலக்கை அடையக்கூடிய லொறி அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த தயாரிப்பு நடவடிக்கைகளில் உபெர் மற்றும் அன்கியுசர் புஸ்க் நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது. இவற்றில் உள்ள கமராக்கள், ரேடர்கள் மற்றும் சென்சர் என்று சொல்லப்படுகின்ற உய்த்துணர்வுக்கான கருவிகள் என்பன பாதைகளை நன்றாக படித்து அறிந்துகொண்டு வழிகாட்டிச் செல்கின்றன.

அண்மையிலே மேற்குறித்த லொறி அமெரிக்காவில் தானாக பயணம் மேற்கொண்டு பொருள்களை பரிமாற்றம் செய்துள்ளது. இதன்படி ஓட்டோ எனப்படும் இவ்வகை லொறிகள் கொலரோயாவில் இருந்து கொலரோடா ஸ்பிரிங்ஸ் என்ற இடத்துக்கு 45 ஆயிரம் பியர் கான்களை பத்திரமாக ஏற்றிச்சென்று ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவை 193 கிலோ மீற்றர் தூரத்தை மணிக்கு 89 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்து 2 மணி நேரத்தில் குறித்த இலக்கை சென்றடைந்துள்ளன. இந்த நிலையிலே இவ்வகை லொறிகளின் தயாரிப்பு என்பது வர்த்தகத் துறையில் மிகப்பெரும் சாதனையாகக் கருதப்படுகின்றது.

### சாரதி இன்றிய வாடகைக் கார்.சேவை சிங்கப்பூரில் ஆரம்பம்

உலகிலேயே முதல்முறையாக சாரதி இன்றி தானாக இயங்கக்கூடிய வாடகைக்கான கார் சேவையை சிங்கப்பூர் ஆரம்பித்தது.

சிங்கப்பூரின் புதிய கண்டுபிடிப்பான இந்த வகைக் கார்களை அதிதிறன் கைபேசிகள் மூலம் இயங்க வைக்க முடியும். இதன்படி பயணிகள் தங்களுடைய அதிதிறன் கைபேசிகளில் ஈ.என். ரொனோமி என்ற மென் பொருளை இணைத்துக் கொள்வதன் மூலம் காரை சாதாரணமாக இயக்கிவிட முடியும் என தெரிவிக்கப்பட்டது.

கூகுள் மற்றும் வால்வோ உள்ளிட்ட நிறுவனங்கள் தானியங்கி வாகனச் சேவையை பல ஆண்டுகளாக சோதனை முறையில் இயக்கி வருகின்றபோதும், மேற்படி ஈ.என். ரொனோமி நிறுவனமானது முதன் முறையாக பொதுமக்கள் சேவைக்கென தானியங்கிக் கார்களைக் கொண்டு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பதாக உபர் வாடகை வாகன சேவை நிறுவனம் சிங்கப்பூரில் உள்ள பிட்ஸ் பார்க் நகரில் சில வாரங்களுக்கு தானியங்கிக் கார்களை இயக்க முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.



# காஷ் பொனான்சா வெற்றியாளர் இம்முறை திருகோணமலையில்




தேசிய கையடக்கத் தொலைப்பேசி சேவை வழங்குநரான எஸ்.எல்.ரி. மொபிடெல் நிறுவனத்தின் 2016ஆம் ஆண்டுக்கான காஸ் பொனான்சா சீட்டிழுப்புதிட்டத்தின் மூலம் மாதாந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் வெற்றியாளர்களைத் தெரிவு செய்து 15 மில்லியன் ரூபா பெறுமதியான அதிசொகுசு மிட்சுபிசி மொன்டேரோ ரக மோட்டார் வண்டி உட்பட இலட்சக் கணக்கான பரிசுகளை வழங்கி வருகின்றது. இம்முறை மாதாந்த சீட்டிழுப்பின் வெற்றியாளராக திருகோணமலை பிரதேசத்தினை சேர்ந்த ராசநாயகம் அம்புதராஜா தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை 350 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பரிசுத் தொகை மொபிடெல் வாடிக்கையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேலும் கடந்த காலங்களில் அம்பலாங்கொடை பிரதேசத்தினை சேர்ந்த, ஷானிகா ஶ்ரீமாலி, வாரிய பொலவினை சேர்ந்த, ஜே.எம்.துஷாந்த ஜயலத், படல்கும்புர பிரதேசத்தினை சேர்ந்த ஆர்.எம். ரோஷான பிரியதர்ஷன மற்றும் நிட்டம்புவ பிரதேசத்தினை சேர்ந்த திருமதி. ஆர்.எம்.பீ. பி.பி. குமாரி தனமல்வில பிரதேசத்தை சேர்ந்த திருமதி பீ. ஏ. குசுமாவதி, பதவிய சிறி திஸ்ஸபுர பிரதேசத்தினை சேர்ந்த ஆர்.டி நிமால் ஜயசிங்க, களுத்துறைப் பிரதேசத்தினை சேர்ந்த விஜித் ரோட்ரிகோ மற்றும் எப்பா வலை பிரதேசத்தினை சேர்ந்த எச்.ஜே.எஸ் சேனவிரத்ன ஆகியோர் கடந்த சீட்டிழுப்பில் மொன்டேரோ ரக கார்களை வெற்றி பெற்றிருந்தனர்.

இம்முறை காஸ் பொனான்சா களியாட்டம் மற்றும் இசை நிகழ்ச்சியுடன் பரிசளிப்பு விழாவும் மத்துகம பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மாபெரும் சீட்டிழுப்பின் வெற்றியாளரான ராசநாயகம் அம்புத ராஜா மிட்சுபிசி மொன்டெரோ ரக மோட்டார் வாகனத்தை மொபிடெல் நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி நளின் பெரேராவிடமிருந்து பெற்றுக்கொண்டார். அத்துடன் 2016ஆம் ஆண்டில் மேலும் 3 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இந்த நிகழ்வினையொட்டி அன்றைய தினம் வருகை தந்திருந்த வாடிக்கையாளர்களுக்கு இலவச மூக்குகண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் அன்றைய தினம் பல்வேறு களியாட்ட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சிறுவர்களுக்கான கேம் சோன் மொபிடெல் நிறுவனத்தின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அனுபவிப்பதற்கான மொபிடெல் சேவைமத்திய நிலையமொன்று அமைக் கப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும். மொபிடெலின் முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு மற்றும் ப்ரோட்பாண்ட் வாடிக்கையாளர்களும் இந்தச் சீட்டிழுப்பில் பங்குபெறும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு 50 ரூபா பெறுமதியான ரீலோட், ரீசார்ஜ் அல்லது கட்டணப் பட்டியல் செலுத்தும் சகல வாடிக்கையாளர் களுக்கும் சீட்டிழுப்பில் கலந்துகொண்டு வெற்றி பெறும் வாய்ப்பு அதிகமாகக் கிட்டவுள்ளது. நாளாந்தம் மேற்கொள்ளப்படும் உடனடிச் சீட்டிழுப்புகளில் வெற்றிபெறும் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு வெற்றிபெற்ற தொகைக்கு சமமான பேசும் காலம் இலவசமாக வழங்கப்படுவதுடன், பிற்கொடுப்பனவு வாடிக்கை யாளர்களுக்கு அவர்கள் வெற்றியீட்டிய தொகை அவர்களது கட்டணப் பட்டியலின் மொத்தத் தொகையிலிருந்து கழிக்கப்படும். (த)

## வணிகம்

# வீதிப் பாதுகாப்புக்கு கால்டெக்ஸ் பங்களிப்பு

சமூகப் பொருளாதாரத்துக்குத் தாக்கத்தை விளைவிக்கும் வீதி விபத்துக்கள் தவிர்க்கப்படக் கூடியவையாகும். இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட 2015ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களுக்கு அமைவாக, 2015ஆம் ஆண்டுக்குள் 39,000க்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் நிகழ்ந்துள்ளதுடன், 2,600 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாளொன்றுக்கு சராசரியாக 7 பேர் சாவடைந்துள்ளதாகப் பதிவாகியுள்ளது. அதிகமானோர், தங்கள் அன்புக்குரியவர்களை அல்லது தங்களது குடும்பத்தைக் காப்பவர்களை இழந்துள்ளனர். இந்தத் துர்ப்பாக்கியமான நிகழ்வை, வீதி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளினூடாக உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

கடந்த 12 வருட காலங்களாக, பல்வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆரம்பித்ததன் ஊடாக வீதிப் பாதுகாப்பை ஊக்குவிப்பதில், இலங்கையின் கால்டெக்ஸ் வர்த்தக நாம லூப்ரிகன்ஸை தயாரிக்கும் மற்றும் சந்தைப்படுத்தும் செவ்ரோன் லூப்ரிகன்ஸ் லங்கா பிஎல்சி நிறுவனம் முன்னிலையில் உள்ளது.

வினைத்திறன்மிக்க வீதி பாதுகாப்பு விழிப்புணர்வின் அவசியத்தை அடையாளம் கண்டதுடன், அதனை விளங்கிக்கொண்டு செயற்படுத்துவதற்காக இலங்கைப் பொலிஸ் திணைக்களம், புனித தோமஸ் கல்லூரியின் 82ஆவது குழுவினர், தெரண டீவி மற்றும் ஈபிசீ புரொட்காஸ்டிங் மீடியா நெட்வேர்க் என்பவறின் பங்களிப்புடன் கால்டெக்ஸ் 'நல்லதோர் வீதி, நல்லதோர் விதி' பரப்புரை நிகழ்ச்சியை மீள ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் வீதிப் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கு 2003ஆம் ஆண்டிலிருந்து கல்டெக்ஸ் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. கம்பனி பிரபல்யமான இடங்களில் வீதி நாடகங்களை நடத்தியதுடன், கொழும்பில் உச்ச போக்குவரத்து நேரங்களில் பயணம் செய்பவர்களுக்கு நெஞ்சைத் தொடும் வீதிப் பாதுகாப்புத் தகவல்களை வழங்குவதற்கு பதாகைகளைப் பயன்படுத்தியது. அத்துடன், நாடுமுழுவதிலுமுள்ள பொலிஸ் நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் அதிகமாக விபத்து நிகழும் இடங்கள் என்பவற்றில் முக்கியமான பாதுகாப்புத் தகவல்களைக் கொண்ட கல்டெக்ஸ் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், வருடம் முழுவதிலும் வீதிப் பாதுகாப்புக்குப் பலமான தாக்கத்தைச் செலுத்தின.

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து செவ்ரோன் லூப் [illegible] பாதுகாப்பு விழிப் [illegible] நிகழ்ச்சித்திட்டம் 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், கால்டெக்ஸ் 'நல்லதோர் வீதி, நல்லதோர் விதி' நிகழ்ச்சித் திட்டம், 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்டெராவுக்கு வெள்ளி விருது

அங்கர் வர்த்தக நாமத்தின் உரிமையாண்மையைக் கொண்ட பாலுற்பத்தி நிறுவனமான பொன்டெரா பிரான்ட்ஸ், தேசியத் தொழில்நிலைப் பாதுகாப்பு மற்றும் சுகாதார சிறப்பு 2016 விருதுகள் வழங்கலில், பல்தேசிய பிரிவில் வெள்ளி விருதை சுவீகரித்துள்ளது. இதன் மூலம் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில், நிறுவனம் காண்பிக்கும் தலைமைத்துவத்தையும் ஈடுபாட்டையும் மேலும் உறுதி செய்துள்ளது.

இந்தப் பெருமைக்குரிய விருதை பொன்டெரா பிரான்ட்ஸ் லங்கா நிறுவனத்துக்கு, இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியிருந்தார். இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு, கடந்த வாரம் இடம்பெற்றது.

தேசியத் தொழில்நிலைப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கல்வியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருதுகள் வழங்கல் மூலமாக, இலங்கையின் நிறுவனங்களின் சிறந்த செயற்பாடுகள் கௌரவிக்கப்படுகின்றன. 135க்கும் அதிகமான நிறுவனங்கள், இந்த ஆண்டின் விருதுகள் வழங்கும் நிகழ்வில் பங்கேற்றிருந்தன. இதில் 75 நிறுவனங்கள் பல்தேசியப் பிரிவில் தகைமையைப் பெற்றிருந்தன.

பொன்டெரா பிரான்ட்ஸ் சிறிலங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுனில் சேதி இங்கு கருத்துத் தெரிவிக்கையில், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்புக்காக எமக்கு இந்த விருது கிடைத்துள்ளமையானது, மிகவும் பெருமையளிக்கிறது என்றார்.

2014இல், துறையில் விருதைப் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, பல்தேசிய நிறுவனம் என்ற வகையில், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப்பிரிவில் நாம் பெற்றுள்ள வெள்ளி விருதின் மூலமாக, நாம் கடந்து வந்துள்ள பயணம் உறுதி செய்யப்பட்டுள்ளது. (த)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## முஸ்லிம்...

விரைவில் பறிபோய்விடும். இதில் நாங்கள் வெற்றி பெறுவதற்கு வடக்கு – கிழக்கு முஸ்லிம் மக்களின் ஆதரவு அவசியம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட 26ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு முஸ்லிம் சிவில் அமைப்பின் தலைவர் ஏ.ஆர்.ஏ.றமீஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பிரதி அமைச்சர் அமீர் அலி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், மத்திய மாகாண முன்னாள் உறுப்பினர் அசாத் சாலி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜவாஹிர், சமூக நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள் என்பவற்றின் பிரதிநிதிகள், கல்விமான்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்ததாவது:

வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டது பாரதூரமான விடயம். அதனை துன்பியல் சம்பவம் என்று தெரிவித்து முடித்து விட முடியாது. இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். வாழ்வாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்கள் யாரால் வெளியேற்றப்பட்டார்களோ, அவர்களால் தமிழ் மக்களும் வெளியேற்றப்பட்டார்கள். 1995ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருடனான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த பின்னர் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமிழ் மக்கள் குடாநாட்டில் இருந்து முற்றாக வெளியேற்றப்பட்டனர். நிலங்களை விடுவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுடன் உரையாடினேன். மீள்குடியேற்றம் மற்றும் மக்களின் நிலங்களை மீளக் கையளிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன். இந்த விவகாரத்துக்கு விரைவில் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஏற்றுக் கொண்டார். அதேவேளை அதில் பல தடைகள் காணப்படுவதையும் அவர் குறிப்பிட்டார்.

பன்னாட்டு ரீதியில் பலஸ்தீனத்தை எடுத்துப் பாருங்கள். அந்த மக்கள் ஐம்பது வருடங்களாக அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். பலஸ்தீன மக்களின் நிலங்களில் இன்று வீடுகள் கட்டப்படுகின்றன. அது அவர்களுக்கானது இல்லை. யூதர்களுக்கே வீடுகள் கட்டப்படுகின்றன.

இலங்கையில் கடந்த இரு தசாப்தங்களில் அரசில் பல முஸ்லிம் அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். ராஜபக்ச அரசில் பல முஸ்லிம் அமைச்சர்கள் காணப்பட்டனர். தற்போதைய அரசிலும் பல அமைச்சர்கள் உள்ளனர். ஐந்து அல்லது ஆறு பேருக்கு மேல் இருக்கின்றனர். ஏன் அவர்களால் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் போன்ற விடயங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியவில்லை?

இதனால்தான் தந்தை செல்வா நாடு ஆட்சி புரியப்படும் விதத்தில் மாற்றங்களைக் கோரினார். இன்றைக்கு பல வருடங்களுக்கு முன்னரே அவர் இதற்கான கோரிக்கையை முன்வைத்தார். கூட்டாட்சியைக் கோரியமைக்கு அதுதான் காரணம்.

தமிழ் மக்கள் அதற்காக நீண்ட காலமாக போராடி வருகின்றனர். பல வடிவங்களில் போராடியுள்ளனர். சாத்வீக வழிகளில், அரசியல் ரீதியில், அகிம்சை வழிகளில், ஆயுத ரீதியில் போராடியுள்ளனர்.

தற்போது நாங்கள் இராஜதந்திரரீதியில் போராடி வருகின்றோம். இந்தப் போராட்டங்களில் முஸ்லிம் தலைவர்களின் பங்களிப்புக்கள் குறைவாக இருந்துள்ளதை சுட்டிக்காட்ட வேண்டும். அதனை மறந்துவிட முடியாது. அதேவேளை முஸ்லிம் தலைவர்களின் இந்த செயலிற்காக முஸ்லிம் மக்களை மறந்துவிட முடியாது. நாங்கள் எங்களின் போராட்டத்தில் முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்தோம், எதிர்பார்க்கின்றோம். ஆனால் அவை கிடைக்கவில்லை.

ஜெனிவா தீர்மானம் காரணமாக இலங்கை அரசு இன்று கடும் அழுத்தங்களை சந்தித்துள்ளது. 2012 இல் முதற் தடவையாக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட வேளை, அப்போது இருந்த அரசில் அங்கம் வகித்த பல முஸ்லிம் அமைச்சர்கள் அதற்கு எதிராகச் செயற்பட்டார்கள். தீர்மானத்திற்கு எதிராக வளைகுடா நாடுகளின் ஆதரவை கோருவதற்காக அவர்கள் ராஜபக்ச அரசினால் வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.

இன்று நாங்கள் தீர்வைக் காண்பதற்காக, அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரசுடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளோம். எங்கள் கைகளில் அந்த அதிகாரம் காணப்படுவது அவசியம். இதில் நாங்கள் வெற்றியடைவதற்கு வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் ஒத்துழைப்பு அவசியம்.

இது யார் முதலமைச்சர் என்ற விடயமல்ல, மாகாண சபைகள் ஒன்றாக இணைக்கப்படா விட்டால் கிழக்கு விரைவில் பறிபோய்விடும். அது பறிபோக நாங்கள் அனுமதிக்கக் கூடாது. வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பது குறித்து வடக்கு மாகாண முதலமைச்சருடனும், மீள்குடியேற்ற அமைச்சருடனும் நான் பேச்சுக்களை மேற் கொள்வேன் - என்றார். (வ-5-4)

## கூட்டாட்சி...

முஸ்லிம் மக்கள் உங்கள் பிரதிநிதிகளின் கூட்டாட்சி எதிர்ப்பு நிலைப்பாடு தொடர்பில் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற, வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதன் நினைவுநாள் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புல்மோட்டையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அமைச்சர் ரிசாத் பதியூதீன், கூட்டாட்சி தீர்வுக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதை இனச்சுத்திகரிப்பு என்று சொல்கின்றீர்கள். தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை ஏன் இனப்படுகொலை என்று சொல்லவில்லை. இவ்வாறு தமிழ் மக்கள் என்னிடம் கேட்கின்றனர். நான் பல இடங்களில் சொல்லியுள்ளேன். தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

தமிழ் மக்கள் இன்னொரு கேள்வியையும் எழுப்புகின்றனர். முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டார்கள் என்று நீங்கள் தெரிவிக்கின்றீர்கள். ஆனால் முஸ்லிம் தலைவர்கள், தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்று தெரிவிக்கவில்லையே என்று கேட்கின்றார்கள். அதற்கு என்ன பதிலைச் சொல்வது. நீங்கள்தான் அது குறித்து சிந்திக்க வேண்டும். நான் சிலவிடயங்களை வெளிப்படையாகப் பேச விரும்புகின்றேன். இன்றைய சூழ்நிலையில் இரு சமூகங்களும் ஒருவரின் உதவியின்றி மற்றவர் எவ்வாறு முன்னேற முடியும்.

மீள்குடியேற்றம் என்ற விடயமும் அரசியல் தீர்வு என்ற விடயமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக இருக்க வேண்டும். இந்தியாவில் முகாம்களில் உள்ள இலங்கை அகதிகள் இங்குவரத் தயங்குகின்றனர். அதேநிலைதான் வட பகுதியிலிருந்து வெளியேறிய முஸ்லிம்களுக்கும். அவர்களது அச்சங்கள் நியாயமானது என்பது எங்களுக்குத் தெரியும். அகதி முகாம்களில் உள்ளவர்கள் பலர் அவ்வாறே உள்ளனர்.

மீள்குடியேறுவதற்கு முன்னர் முஸ்லிம்கள் தாங்கள் இருக்கின்ற பகுதிகளிலும் ஒரு காலை வைத்திருக்க விரும்புகின்றனர். அது நியாயமானதே. மீள்குடியேற்றத்தை அரசியல் தலையீடு இன்றி முன்னெடுப்பது அவசியம்.

கடந்த காலங்களில் அரசில் பல முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தனர். மீள்குடியேற்ற அமைச்சராக முஸ்லிம் ஒருவர் இருந்துள்ளார். அவ்வேளை அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் பல எதிர்ப்புக்கள் காணப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அரசில் அங்கம் வகிப்பதில்லை என்பதில் உறுதியாகவுள்ளது. அதனால்தான் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் எங்களால் உறுதியாகச் செயற்பட முடியவில்லை. ஆனால் முஸ்லிம் மக்களுக்கு இந்த நிலையில்லை.

வடக்கு - கிழக்கை பிரித்துப் பார்க்க முடியாது. கிழக்கில் நடப்பது வடக்கில் நடக்கலாம். ஓட்டமாவடியில் நடைபெறும் பல விடயங்கள் குறித்து மக்கள் எங்களுக்கு தெரிவித்துள்ளனர். ஒரு முஸ்லிம் அரசியல்வாதியினால் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றங்கள் தொடர்பில் வகுக்கப்பட்ட திட்டங்கள் முதலமைச்சர் அலுவலகத்தில் முடங்கியுள்ளன. வடபகுதி முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் அசமந்தப் போக்கை வடக்கு மாகாணசபை கடைப்பிடிக்கின்றது. அது மாற வேண்டும்.

அரசியல் தீர்வு என்ற விடயத்தில் நாங்கள் எடுக்கப் போகும் நிலைப்பாடு முக்கியமானது. நாங்கள் ஒன்று சேர்ந்து ஒரு நிலைப்பாட்டை எடுத்தால், நாங்கள் கேட்பது கிடைக்கலாம். அதனை செய்யாவிட்டால் எதுவும் கிடைக்காது.

உங்கள் மன்னார் மாவட்ட பிரதிநிதி கூட்டாட்சி குறித்த தனது எதிர்ப்பை வெளியிட்டார். ஏன் கூட்டாட்சி, எதற்கு கூட்டாட்சி என்பதை தெளிவாக உணராமல் சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர். அரசை திருப்திப்படுத்துவதற்காக அதனை அவர்கள் செய்யலாம். உங்கள் பிரதிநிதிகள் குறித்து நீங்கள் எடுக்க வேண்டிய தீர்மானம் உள்ளது. அவர்களுக்கு எதிராக அழுத்தங்களை கொடுக்க வேண்டும். உங்கள் பிரதிநிதிகளின் கூட்டாட்சி எதிர்ப்பு நிலைப்பாடு தமிழ் மக்களிற்கு எதிரானது மாத்திரம் அல்ல முஸ்லிம் மக்களுக்கும் எதிரானது.

கூட்டாட்சி தீர்வு குறித்து சந்தேகங்கள் இருக்கக் கூடாது. அது பற்றிப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும். இரண்டு சமூகங்களும் நன்மை அடையக்கூடிய தீர்வு குறித்து பேச வேண்டும். அல்லது மாற்று வழிகள் குறித்து ஆராய வேண்டும். ஆனால் அதனை மறுத்து பெரும்பான்மை சமூகத்தின் இனவாதிகளிற்கு தீனிபோடும் விதத்தில் கருத்து தெரிவிக்க கூடாது என்றார். (வ-5)

## மக்களிடம்...

தில் 70 மதுபான நிலையங்கள் இயங் குகின்றன. அவற்றில் ஒன்றைக் கூட இராணுவம் நடத்தவில்லை. தென்னிந்திய திரைப்படங்களைப் பார்த்து அதனால் யாழ்ப்பாண இளைஞர்கள், அதன் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

பொலிஸார் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த, அவர்களுக்கு உதவுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அவர்களுக்கு எங்களுடைய உதவி தேவை. அதனை நாங்கள் வழங்கவே தயராகவே உள்ளோம். தகவல்களை வழங்குவதற்கும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். தேசிய பாதுகாப்புப் பற்றி உணராமல் மக்களைச் சிலர் குழப்பி வருகின்றனர். எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா ஆகியோர் சிறந்த அரசியல் தலைமைகளாக இருக்கின்றனர். ஒரு சில அரசியல்வாதிகள் வாக்குகளுக்காக அரசியல் செய்பவர்கள். அவர்களே மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களை விதைத்து வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர். இது தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் தமிழர். இது இனப்பிரச்சினை இல்லை. 2009 ஆம் ஆண்டு போர் முடிந்ததிலிருந்து கடந்த 7 ஆண்டுகளில் இவ்வாறான சம்பவம் நடைபெறவில்லை.

நாம் ஓர் இனத்துக்கு மாத்திரம் உரித்தான இராணுவம் அல்ல. இந்த நாட்டின் இராணுவம். அனைத்து மக்களின் வரிப்பணத்திலேயே எங்களுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. பொதுமக்களுக்காகவே நாம் பணிபுரிகின்றோம்.

நாட்டில் என்ன நடக்கின்றது என்பது பாமர மக்களுக்குப் புரியவில்லை. நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பில் அவர்களுக்கு உரிய அறிவை வழங்குவது ஊடகங்களின் கடமை என்றார். (வ-5-எ)

## பொலிஸாரின்...

அடையாளம் காணப்பட்டு அங்கு விசாரணைகள் இடம்பெற்றன.

கடந்த 20 ஆம் திகதி நள்ளிரவில் கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் யாழ்ப்பாண பக்கமிருந்து காங்கேசன்துறை பக்கமாக உந்துருளியில் பயணித்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன், கஜன் ஆகியோர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். பின்னர் இந்தச் சம்பவம் தொடர்பாக 5 பொலிஸார் மறு நாள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் யாழ்.நீதிவான் மன்றில் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து சம்பவ இடத்தில் நின்றிருந்த பொலிஸாரின் துப்பாக்கிகளை மேலதிக விசாரணை செய்வதற்காக அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்புவதற்கு அனுமதி கோரினர். நீதிமன்று அனுமதி வழங்கியது.

அதன் பிரகாரம் கைத்துப்பாக்கி ஒன்றும் ரி- 56 ரக துப்பாக்கி ஒன்றும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டன.

அதேவேளை கொல்லப்பட்ட மாணவர்கள் தொடர்பான இறப்பு விசாரணைகள் கடந்த வாரம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் இடம்பெற்றன. இதன் போது பலரது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,103)

## 454 ஏக்கர்...

சிறிசேனா யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகை தரவுள்ளார். வீடு கையளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, காணி விடுவிப்புக்கான அறிவிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிடுவார்.

கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் மக்களுக்கு காண்பிக்கப்பட்ட காணிகளின் விடுவிப்புக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பையே ஜனாதிபதி இதன்போது வெளியிடுவார்.

விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்படும் 454 ஏக்கரில், மயிலிட்டியில் சிறு பகுதி, தையிட்டி தெற்கு, தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறை தெற்கு, காங்கேசன்துறை மத்தி, காங்கேசன்துறை மேற்கு ஆகியன உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## அதிகபட்ச...

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்துமாறு அரசிடம் புதுடில்லி கேட்டுக் கொண்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனை கொழும்பு அரசிடம் வலியுறுத்தியுள்ள புதுடில்லி, அதனை விதிமுறையாக முன்வைக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

தமக்கு எத்தகைய ஆட்சிமுறை சிறந்ததாக இருக்கும் என்று எல்லா இலங்கையர்களும் முடிவு செய்ய வேண்டும் என்றும் புதுடில்லி சுட்டிக்காட்டியுள்ளது என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (வ-5)

## விடுவிக்கப்படும்...

அனுமதிக்கப்படுவார்கள். பொது மக்களின் காணிகளை கையளிப்பதே எமது முழுமையான விருப்பம். அவர்களது காணிகளைக் கையகப்படுத்துவது எமது நோக்கம் அல்ல. அத்துடன் நாம் நில விற்பனையாளர்களும் இல்லை. பொது மக்களின் பாதுகாப்புக் கருதியும், தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும், இராணுவ முகாம்கள் தொடர்ந்தும் செயற்படும்' என்று மகேஸ் சேனநாயக்க, 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார். (வ-5-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு

கொழும்பு, ஒக்.31

உலக நகர தினத்தை முன்னிட்டு சூழலை சுத்தப்படுத்தும் விழிப்புணர்வு செயற்பாடு நேற்று புறக் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றது.

குறித்த நிகழ்வு மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் பரிபூரண நகரம் பரந்த அபிவிருத்தி எனும் தொனிப் பொருளில் நடத்தப்பட்டது.

சூழலில் உள்ள கண்ணாடி, காகிதம், பிளாஸ்டிக், உக்கும், உக்காத பொருள்கள் என கழிவுகள் வெவ்வேறாக அகற்றுவது தொடர்பாக மக்களுக்கு அதில் அறிவூட்டப்பட்டது. அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் துண்டுப் பிரசுரங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா, பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். உலகளாவிய ரீதியில் நகர தினம் ஒக்ரோபர் 31 கொண்டாடப்படுகின்றது. (ற)

# பொலிஸ் நிலையங்களை அதிகரிக்க நடவடிக்கை

## பொலிஸ் மா அதிபர் தகவல்

கொழும்பு, ஒக். 31

மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக நாடு பூராகவுமுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவ்வாறு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மஹியங்கனை ரிதிமாலியெத்த பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலைய திறப்பு விழா நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் பல இடங்களிலும் குற்றச் செயல்கள் இடம்பெறும்போது அவற்றைக் கட்டுப்படுத்துவதும், பொதுமக்கள் முறைப்பாடு செய்வதை இலகுபடுத்தவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-4)

## நீதிமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலை அங்கே வைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் ஆராய்வதற்காக ஹக்கீம் இறக் காமத்திற்கு நேற்று நேரடியாகச் சென்றிருந்தார். இறக்காமம் சிறி மாணிக்கமடு கோயில் நிர்வாகத்தினர், மக்களுடன் கலந்துரை யாடினார்.

'இது தொடர்பாக பொலிஸ்மா அதிபருடன் பேசப்பட்டது. சிலை அனுமதியின்றி வைக்கப்பட்ட தால் நீதிமன்றத்தினூடாக அதனை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தமிழர்கள் ஆத்திரப்பட்டு ஆவேசப்படக் கூடாது. நல்லாட்சி அரசில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது நல்லிணக்கத்துக்குப் பாதகம் விளைவிக்கக் கூடியவை. வலிந்து வம்புக்கு இழுக்கின்ற சம்பவமாக இது பார்க்கப்படு கின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் தோற்றுவிப்பதில் குந்தகம் விளைவிக்கின்றது. நீதிமன்ற தடையையும் மீறி எந்த மதத் தைச் சேர்ந்தவர்களும் தங்களது மதத்தை பிரதிபலிக்கும் சின்னத் தையோ அடையாளத் தையோ அனுமதியின்றி பலவந்தமாக வைப்பதென்பது வணக்க வழிபாட்டுக்கோ ஆராதனைக்கோ அல்ல' என்று அமைச்சர் ஹக் கீம் தெரிவித்தார்.

இதேவேளை, புத்தர் சிலை வைப்பதற்கு முன்னதாகவே அந்தப் பகுதியில் புத்தர் சிலை வைக்கக் கூடாது என்ற நீதிமன்ற தடை உத்தரவை பிக்குவிடம் கையளித்ததாக, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிமல் சந்திர சிறி தெரி வித்தார். (வ-5)

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
தம்பு
சோமசுந்தரம்

எமது குடும்பத்தின் குலவிளக்காய்
நிழல்தரு பெரு விருட்சமாய்
அன்பாலும் பண்பாலும் எம் அனைவரையும்
வழி நடத்திச் சிறப்புற வாழவைத்து இன்று
வானுறையும் தெய்வமாகி விட்ட
உங்கள் இரண்டாம் ஆண்டு நினைவு நாளில்
நினைவு கூர்ந்து பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

பொருளியற் கல்லூரியின் ஆறாத்துயரில் நீங்காத
12ஆம் நாள் நினைவில்

எமது நிறுவனத்தில் கல்வி கற்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான

அமரர்
நடராஜா கஜன்



கல்விக் கரையில் கலங்கரை
விளக்கமாய் ஒளிரமுன்
அநியாயமான முறையில்
உயிர் பறிபோன எங்கள்
மாணவர்களை இன்றைய
நாளில் நினைவு கூர்ந்து
இவர்களின் பிரிவால்
பரிதவித்து நிற்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த துயரத்தினைத்
தெரிவித்துக் கொள்வதோடு
இவர்களின் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
பவுண்ராஜ் சுலக்சன்



இயக்குநர். ஆசிரியர்கள்
பொருளியற் கல்லூரி.
யாழ்ப்பாணம்- இணுவில்.

கண்ணீருடன் கரைந்த ஓராண்டு



அமரர் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்
(முன்னாள் நடத்துநர் - இ.போ.ச யாழ்.சாலை)

மண் மகிழ
14.10.1941

கண் நெகிழ
12.11.2015

வஞ்சனையிலாவுள்ளம் யாவர்க்கும் உதவிடும் குணம்
வேஷமில்லா நேசந் தந்த ஞானமே உமதுயிரை
பாசக்கயிறு வீசிப் பறித்துச் சென்றதேனோ?
ஊருக்கொரு பெருவிருட்சம் உம் நிழலில் நாமாற
கடமை முடித்தானே காலைப்பொழுதில்
எம்மைக் கலங்க வைத்த மாயமென்ன?
விழி கசிந்திங்கு வேதனையில் தவிக்கின்றோமே!
எங்கள் அப்பா எம்மைவிட்டு ஏன் பிரிந்தீர்?
காலன் அழைத்தானோ, யாவும் கனவாகிப் போனதுவே....

குடும்பத்தினர்.
புத்தூர் வீதி,மீசாலை வடக்கு,கொடிகாமம்.

முதலாம் ஆண்டு நினைவுப்பகிர்வு



அமரர் வல்லிபுரம் வைரமுத்து

பிறப்பு : 27.09.1941 இறப்பு : 12.11.2015
திதி : 31.10.2016 பூர்வபட்ச பிரதமை

ஓடி முடிந்தது ஓராண்டு
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் எங்ஙனம்
மறப்போம் உம்மை.

என்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்திடும்....

குடும்பத்தினர்
கிளானை
கொல்லங்கலட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகு மூலம் ஆஸி. செல்வோருக்கு வாழ்நாள் தடை விதிக்கத் திட்டம்

## அந்த நாட்டு நாடாளுமன்றில் அடுத்தவாரம் சட்டவரைவு முன்வைப்பு

ஆபத்தான படகுப் பயணம் மேற்கொண்டு ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோர முற்படுபவர்களுக்கு வாழ்நாள் தடை விதிக்க ஆஸ்திரேலிய அரசு திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கான சட்டவரைவு அடுத்த வாரம் ஆஸ்திரேலிய நாடாளுமன்றில் முன்வைக்கப்படுவதாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

படகுமூலம் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்படும் ஒருவர், சுற்றுலாப் பயணியாகவோ, வியாபார வீசா மூலமோ அல்லது ஆஸ்திரேலிய பிரஜையொருவரை திருமணம் செய்தோ ஆஸ்திரேலியாவுக்கு வருவதை முழுமையாகத் தடுக்கும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்த அந்த நாட்டு அரசு தீர்மானித் துள்ளது.

ஆபத்தான படகுப் பயணத்தை மேற்கொண்டு ஆஸ்திரேலியாவுக்கு செல்லும் அரசியல் தஞ்சம் கோருவோரை அந்த நாட்டு அரசு நாட்டுக்குள் எடுக்காது நவ்ரூ மற்றும் பப்புவா நியூகினியின் மனுஸ் தீவுகளிலுள்ள அகதிகள் தடுப்பு முகாம்களிலேயே தடுத்து வைத்திருக்கின்றது.

அந்த அகதிகள் தடுப்பு முகாம்களில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக அகதிகள் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பெண்கள் மற்றும் சிறுமிகள் பாலியல் வன் கொடுமைக்கு உட்படுத்தப்படும் சம்பவங்களால் ஆஸ்திரேலிய அரசு உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் கடும் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த நிலையியில் படகு அகதிகளின் வருகையை முற்றாகத் தடுக்கும் நோக்கில் பிரதமர் மெல்கம் டேர்புல் தலைமையிலான ஆஸ்திரேலிய அரசு படகு மூலம் நுழையும் அகதிகளுக்கு வாழ்நாள் முழுவதும் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முடியாதவாறு தடை விதிக்கும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் ஆள்கடத்தல்காரர்களுக்கு கடுமையான செய்தி வெளியிடப்படும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேர்புல் தெரிவிக்கின்றார்.

அகதிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுத்துவரும் அமைப்புக்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் ஆஸ்திரேலிய அரசின் இந்த சட்டத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். எனினும் குறித்த சட்டவரைவு அடுத்த வாரம் ஆஸ்திரேலிய நாடாளுமன்றில் முன்வைக்கப்படுகிறது.

இந்தப் புதிய சட்டமூலம் 2013 ஆம் ஆண்டு ஜுலை 19 ஆம் திகதி முதல் நவ்ரூமற்றும்மனுஸ்தீவுகளிலுள்ள அகதிகள் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டவர் கள் மற்றும் நாடு கடத்தப்பட்ட வர்களுக்கும் பொருந்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகு அகதிகளால் ஆஸ்திரேலிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் நோக்கிலேயே இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்தநாட்டுப் பிரதமர் டேர்புல் தெரிவிக்கின்றார்.

ஆஸ்திரேலிய அரசின் புதிய சட்டத்தால் மனுஸ் மற்றும் நவ்ரூ தீவுகளிலுள்ள அகதிகள் தடுப்பு முகாம்களிலும், சிகிச்சைகளுக்காக ஆஸ்திரேலிய வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுமாக சுமார் 3 ஆயிரம் படகு அகதிகள் பாதிக்கப்படவுள்ளனர்.

இந்த கடுமையான சட்டத்துக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லைஎனஆஸ்திரேலிய பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சி அறிவித்துள்ளது.

மனுஸ் மற்றும் நவ்ரூ தீவுகளிலுள்ள ஆஸ்திரேலியாவின் அகதிகள் தடுப்புமுகாம்கள் திறந்த வெளிச் சிறைக்கூடங்கள் என சர்வதேச மன்னிப்புச்சபை இந்த மாத ஆரம்பத்தில் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டு கடுமையாக சாடியிருந்தது. (ந-4)

## கத்திக்குத்துக்கு இலக்கானவர் சிகிச்சையில்

மகனின் கத்திக் குத்துக்கு இலக்காகிய தந்தையொருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பொகவந்தலாவை லொய்நோன் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

**தீபாவளி தினமான அன்று மது அருந்திய நிலையில் வீட்டுக்கு சென்ற தந்தையார் மனைவியைத் தாக்கினார்** என்றும், அவரைக் காப்பாற்ற மகன் முற்பட்டபோது தந்தைக்குக் காயம் ஏற்பட்டது என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தில் காயமடைந்த நபர் பொகவந்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-4)

## மரண அறிவித்தல்

### விக்னேஸ்வரன் துருபதன்



தோற்றம்:-15.10.1977
மறைவு :-30.10.2016

அல்வாய் வடக்கு, நக்கீரன் வீதியைப் பிறப்பிடமாகவும் 'மிதிலை' மணற்பகுதி ஆவரங்கால் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட விக்னேஸ்வரன் துருபதன் நேற்று (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் விக்னேஸ்வரன் - யமுனாதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோகராசா மற்றும் யோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், மிதிலாவின் பாசமிகு கணவரும், யுவன், யுதிஸ் அதிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், யாழினி, தர்மினி, நிலானி நாயகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மைதிலி, அகலியா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ரதீபன், அபிஷா, கருண், சுரேபி (லண்டன), விஸ்ணு, ஆரபி (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையாரும், உதயச்சந்திரன், சிவா (லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2016) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஆவரங்காலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மிதிலை', மணற்பகுதி,
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/23051) (11,17,21)
076 892 1334

## பொன்சேகா கட்சியினருக்கு ஐ.தே.கவில் அமைப்பாளர் பதவி

கொழும்பு, ஒக்.31

அமைச்சர் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட அமைப்பாளர்களுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கான நியமனக் கடிதங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹசீம் வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் சரத் பொன்சேகாவும் கலந்து கொண்டார். (ற)

## மரண அறிவித்தல்



### வரதராஜா புவனேஸ்வரி (ஜயபவா)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வரதராஜா புவனேஸ்வரி நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ண பிள்ளை, ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா வரதராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் விஜய குமார், சந்திரா, சித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்னேஸ்வரன் தருமசோதி (துயர்) ஆகியோரின் மாமியாரும், டக்ஷன், சரிராஜினி, ரகுராஜ், காலஞ்சென்ற ரவிராஜ் மற்றும் புவிராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 31.10.2016 மதியம் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை
சுழிபுரம்
0214904270

தகவல்:
குடும்பத்தினர்



### விண்ணக வாழ்வின் ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

பிறெய்சி கரோலின் யூட் செல்வக்குமார்

தாயின் மடியில்
12.04.2006

பிதாவின் மடியில்
31.10.2011

ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் ஆறாத்துயரம்
அகலவில்லை எம்முடன் நீ இல்லை
என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை
உன் சிரிப்பு மறையாதமுகமும், உன் மழலைப்
பேச்சும் மீண்டும் வராதோ எம் முன்னே
நாம் வாழும் வரை எம்முன்னே நீயும் வாழ்வாய்
மகளே!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
அப்பா, அம்மா,
பெரியண்ணா, அக்கா,
குட்டியண்ணா.

54/2, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(ஜே.5741)(13.18.21)



தோற்றம்
02 . 02 . 1950

மறைவு
30 . 10 . 2016

### திருமதி மேரிபிலோமினா (சம்மனசம்மா) அலோசியஸ்

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிபிலோமினா அலோசியஸ் நேற்று (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி - சூசானம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாசில் - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அலோசியஸ் அவர்களின் அன்பு மனைவியும், புவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற றமினா மற்றும் சாந்தி, றமிலா (பிரான்ஸ்), சுகந்தன் (மலேசியா), வவி, விசி (சுவிஸ்), றஜிதா ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெனற் (பிரான்ஸ்), சூரி, சிறி (பிரான்ஸ்), ராணி, பமிலா, சுவிக்கா (சுவிஸ்), ரதீஸ் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான அலிஸ்ரன், பொன்ராசா மற்றும் முத்துராசா, செல்வராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற அழகம்மா மற்றும் சின்ராசா (கனடா), ராசன், பீற்றர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.10.2016) திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
(ஜே.5752) (13.18.17.21)

தகவல்:
கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரார் ஈகிள்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 31

உப்புக்குளம் அல்பதா விளையாட்டுக் கழகம் மன்னார் மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

அல்பதா வி.கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பெரியமடு மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பெரியமடு மத்திய விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சியாச் 39 ஓட்டங்களையும் பார்கான் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணியின் சார்பில் பிரியகாந் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

69 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்து. அதிகபட்சமாக பிரியகாந்தன் 52 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)



## பிரசாத்துடனான ஒப்பந்தம் காயத்தால் ஏற்படவில்லை

### சனத் விளக்கம்

ஒப்பந்தப் பட்டியலில் இருந்து பிரசாத் நீக்கப்பட்டமைக்கு அவருக்கு ஏற்பட்ட காயமே காரணம் எனத் தெரிவித்தார் இலங்கை அணியின் தலைமைத் தேர்வாளர் சனத் ஜெயசூரிய.

இலங்கை கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் இடையில் அண்மையில் ஊதிய ஒப்பந்தம் கைச்சாத்தானது. இலங்கையின் வேகப்பந்து வீச்சாளரான பிரசாத், ஒப்பந்தத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இதனால் குறித்த ஒப்பந்தம் சில அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்தது. இந்த விவகாரத்தில் தற்போது சனத் மௌனம் கலைத்துள்ளார்.

தமிங்க பிரசாத் காயம் காரணமாக தோள்பட்டையில் அறுவைச் சிகிச்சை செய்துள்ளார். அவரால் அடுத்த வருடம் முழுவதும் விளையாட முடியுமா என்று தெரியவில்லை. குறைந்தது ஏழு மாதங்கள் ஓய்விலிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஓய்வின் பின்னர் பயிற்சிக்குத் திரும்பி உடற்றகுதியை நிரூபித்து பின்னர் களமிறங்க நீண்டகால அவகாசம் தேவை. இதனாலேயே குறித்த ஒப்பந்தத்தில் அவர் உள்வாங்கப்படவில்லை. அவர் குணமடைந்த பிற்பாடு அவருடனான ஒப்பந்தம் நிச்சயம் இடம்பெறும் என தலைமைத் தேர்வாளர் சனத் ஜெயசூரிய மேலும் தெரிவித்தார். (ம)

## தரங்க சதம்; இலங்கை பலமான நிலை

சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் நிலவரத்தின் படி இலங்கை அணி மிகவும் வலுவான நிலையில் உள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஹராரேயில் தற்போது நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் நாள் முடிவில் குசல் பெரேராவின் சதம் கைகொடுக்க 317-4 என்ற நிலையில் இருந்தது. தரங்க 13 ஓட்டங்களுடனும், சில்வா 10 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். இணைப்பாட்டம் மேலும் சில பந்துப்பரிமாற்றங்கள் நீடித்தது. 25 ஓட்டங்களுடன் சில்வா ஆட்டமிழந்தார். அரைச் சதத்துடன் குணரத்ன வெளியேற்றப்பட்டார். மேலும் சில இலக்குகள் சரிந்த போதிலும் தரங்க ஒரு முனையில் நிலைத்து நின்று சதம் கடந்தார். தரங்க இறுதிவரை ஆட்டமிழக்கவில்லை. மறுமுனையால் இலக்குகள் சரிய முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 537 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை. தரங்க 110 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.



பந்துவீச்சில் சிம்பாப்வேயின் சார்பில் கிரீமர் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே நாள் முடிவில் 88-1 என்று சிறப்பான தொடக்கம் கண்டுள்ளது. மவோயோ 41 ஓட்டங்களுடனும், மசகட்சா 33 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

## வதந்தியாம்

Sri Lanka Cricket

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவும் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து இலங்கை கிரிக்கெட் அணி செயற்பட விரும்பவில்லை என்று வெளியான செய்தியில் உண்மையில்லை என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்தது.

இலங்கையில் உள்ள பிரபல மருத்துவ மனையொன்றின் புற்று நோய்ப் பிரிவுக்கு உதவும் வகையில் தங்களுடன் இணைந்து இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் செயற்பட வேண்டும் என ஒரு தனியார் தொண்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அந்தக் கோரிக்கையை ஏற்க இலங்கை கிரிக்கெட் அணியின் சபை மறுத்துவிட்டதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

தற்போது இலங்கை கிரிக்கெட் சபை, குறித்த விடயம் தொடர்பாக வெளியான செய்திகளில் உண்மைத் தன்மை இல்லை என்று தெரிவித்தது.

இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், எங்களைக் குறித்த தொண்டு நிறுவனம் நிதி உதவிக்காக அணுகியது உண்மைதான். ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணி இலங்கையில் வந்து விளையாட இருக்கும் நேரத்தில் இந்தக் கோரிக்கையானது வைக்கப்பட்டது. பன்னாட்டு கிரிக்கெட் சபையின் அட்டவணையின் படி ஆரம்பமாகவுள்ள இந்தத் தொடரின் போது மட்டுமே எங்களால் இந்த நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவது என்பது இயலாத காரியம் என்று தெரிவிக்கப்பட்டது. மாறாக அந்த நிறுவனத்துடன் இணைந்து செயற்பட விரும்பமில்லை எனத் தெரிவிக்கவில்லை என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



## மே.தீவுகளுக்கு எதிராக பாகிஸ்தான் தடுமாற்றம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாள் நிலவரத்தின் படி பாகிஸ்தான் தடுமாற்றமான தொடக்கம் கண்டுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஓட்டமெதனையும் பெறாது முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்தார் அசார் அலி. அதே பந்துப்பரிமாற்றத்தில் சபிக் பவிலியன் திரும்ப ஓர் ஓட்டத்தில் இரு இலக்குகளை இழந்தது பாகிஸ்தான். அஸ்லாம், யுனிஸ் கான் இணை இணைப்பாட்டமாக 106 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை மீட்டது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். யுனிஸ் கானை 51 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் சேஸ். அஸ்லாமை வெளியேற்றினார் பிஸ்சூ. மிஸ்பா, அஹமட் இருவரும் தமது பங்குக்கும் அரைச் சதங்களைக் கடந்தனர். நீடிக்க முடியவில்லை. மிஸ்வாவை 53 ஓட்டங்களுடன் பிஸ்கூவும், 51 ஓட்டங்களுடன் அஹமட்டை கபிரியேலும் பவிலியனுக்கு அனுப்பினர். வேறு சில இலக்குகளும் சரிய நாள் முடிவில் பாகிஸ்தான் 255-8 என்ற நிலையில் உள்ளது. (ம)

## யாழ். மாவட்டம் பதக்க வேட்டை

யாழ்ப்பாணம், ஒக். 31

சிறிலங்கா ரெலிகொம் நடத்திய கணினி மென்பொருள் விளையாட்டில் யாழ். மாவட்ட அணி பதக்க வேட்டை நடத்தியுள்ளது.

வடமாகாண ரீதியில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. கணினி கால்பந்தாட்ட விளையாட்டில் தங்கப் பதக்கத்தை வை.துவாரகன், வெள்ளிப் பதக்கத்தை பி.யுகேஸ்வரன், வெண்கலப் பதக்கத்தை ஜெரின் ஆகியோர் பெற்றனர்.

மோட்டார் கொம்பட் போட்டியில் சிவாஸ் தங்கப் பதக்கத்தையும், கணேஸ் வெள்ளி பதக்கத்தையும், சாரங்கன் வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற் றினர்.



கார் உற்பத்தி மென்பொருள் போட்டியில் வை.துவாரகன் தங்கப் பதக்கத்தையும் ரீ.துவாரகன் வெள்ளி பதக்கத்தையும் இ.திசோக் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர்.

கோல் ஒவ் டியூட்டி மென்பொருள் போட்டியில் திசோக் தங்கப் பதக்கத்தையும், ச.சஞ்சீவன் வெள்ளிப் பதக்கத்தையும், லவன்சன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டார் சிந்து

பிரெஞ்ச் பூப்பந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுடன் வெளியேற்றப்பட்டார் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான பி.வி.சிந்து.

பரிஸ் நகரில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. சிந்துவை எதிர்த்து சீன வீராங்கனை ஹி பிங் மோதினார். ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 22:20, 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஹி பிங் 2:0 என்ற நேர் செற் கணக்கில் சிந்துவை வெளியேற்றினார். இந்த ஆட்டம் வெறும் 41நிமிடங்களே நடைபெற்றது. (ம)





# மைலோ கிண்ணத்துக்கான தொடர்; மாவட்டச் சுற்றுக்கு கலைமதி தகுதி

கரணவாய், ஒக். 31

மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் வடமராட்சி லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டத்தில் கொலின்ஸைத் தோற்கடித்து மாவட்டச் சுற்றுக்குத் தகுதி பெற்றது நவிண்டில் கலைமதி.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டம் நடைபெற்றது. 12ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் சார்பாக அனுசாந் முதல் கோலைப் பதிவு செய்தார். விஜிதரன் பதில் கோலைப் பதிவுசெய்ய 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதற் பாதி.

கோல்களின் எண்ணிக்கையில் மாற்றம் இல்லாமல் நகர்ந்தது இரண்டாம் பாதி. ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்களே இருந்த நிலையில் விஜிதரனும், சிந்துயனும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது கலைமதி. (ம-108-23)




## மிர்சா – கிங்கிஸ் அதிர்ச்சித் தோல்வி

சிங்கப்பூரில் நடந்த ரென்னிஸ் தொடரில் அரையிறுதியுடன் வெளியேற்றப்பட்டது மிர்சா கிங்கிஸ் இணை.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முன்னணியில் இருந்த இரட்டையர் இணைகளுக்கு மட்டுமாக வருட இறுதியில் சிங்கப்பூரில் நடத்தப்படும் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் மிர்சா, கிங்கிஸ் இணையை எதிர்த்து ரஷ்யாவின் மகரோவா, உக்ரைனின் எலினா இணை மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதல் செற்றை 6:3 என்ற அடிப்படையில் மகரோவா, எலினா இணை கைப்பற்றியது. இரண்டாவது செற்றை 6:2 என்ற அடிப் படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது மிர்சா, கிங்கிஸ் இணை. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் இறுதி செற்றைக் கைப்பற்றிய மகரோவா, எலினா இணை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)



## மறுபரிசீலனைகள் உள்ளன ஹொட் ஸ்பொட் இல்லை

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் மறுபரிசீலனை முறைகள் கடைப்பிடிக்கப்படும் என்று தெரிவித்த இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை, ஹொட் ஸ்பொட் முறை அவற்றில் உள்வாங்கப்பட மாட்டாது என்றும் அறிவித்தது.



இந்திய அணி, இங்கிலாந்து அணிக்கெதிராக கடந்த 2011 ஆம் ஆண்டு விளையாடியபோது நடுவரின் முடிவுகளை மறுபரிசீலனை செய்யும் முறை கடைபிடிக்கப்பட்டது. ஆனால் இந்த முறைகளில் இந்தியாவுக்குப் போதுமான அளவு திருப்தி ஏற்படவில்லை. இதனால் இந்தியா விளையாடும் இருதரப்புத் தொடர்களில் குறித்த முறைகள் இல்லாமலிருந்தன.

நீண்ட பரிசீலனையின் பின்னரும் பல்வேறுபட்ட அழுத்தங்களின் பின்னரும் அடுத்ததாக நடைபெறவுள்ள இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் நடுவர் முறைகள் மீண்டும் பரிசீலனை செய்யும் முறைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

ஆனாலும் ஹொட் ஸ்பொட் முறை பயன்படுத்தப்படமாட்டாது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம், எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)

## யுவி இரட்டைச்சதம்

இந்தியாவின் கழக அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் ராஞ்சிக் கிண்ணத் தொடரில் பஞ்சாப் அணியின் தலைவரான யுவராஜ் இரட்டைச்சதம் விளாசி அசத்தினார்.

பஞ்சாப் - பரோடா அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் ஆட்டத்திலேயே அவர் இரட்டைச் சதம் கடந்தார். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பரோடா 529 ஓட்டங்களைக் குவித்து சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப், 670 ஓட்டங்களைக் குவித்தது. யுவராஜ் 260 ஓட்டங்களைக் குவித்தார். (ம)



## இந்தியாவை வீழ்த்துவதற்காக இங்கிலாந்துக்கு உதவும் பாக்.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நீண்ட தொடரில், இந்தியாவை வீழ்த்துவதற்கு பாகிஸ்தானின் உதவியை நாடியுள்ளது இங்கிலாந்து.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும், மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரும் நடைபெறவுள்ளன. முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி தொடர் ஆரம்பமாகிறது.

இந்திய ஆடுகளங்கள் சுழலுக்கு ஒத்துழைக்கும். சுழல் பந்துவீச்சில் இங்கிலாந்து தடுமாறும் குணம் கொண்டது. எனவே இந்திய ஆடுகளங்கள் பற்றிய துல்லியத் தன்மையை அறிய பாகிஸ்தானின் முன்னாள் சுழல் வீரரான சக்லைன் முஸ்டாக் இங்கிலாந்தின் சுழல்பந்து வீச்சுப்பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு படைத்தது பங்களாதேஷ் கிரிக்கெட்டின் தாயகம் பரிதாபம்

இங்கிலாந்துக்கு எதிரான இரண் டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 108 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரை 1:1 என்று சமன் செய்தது பங்களாதேஷ். இந்த வெற்றி டெஸ்ட் வரலாற்றில் இங்கிலாந்துக்கு எதிராக பங்களாதேஷுக்குக் கிடைத்த முதல் வெற்றியாகும்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்து 220 ஓட்டங் களில் சுருண்டது. பதிலுக்குக் கள மிறங்கிய இங்கிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 244 ஓட்டங்களைக் குவித்தது. இரண்டாவது இன்னிங்ஸை ஆரம் பித்த பங்களாதேஷ் நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் முடிவில் 152-3 என்றிருந்தது. கையிஸ் 59 ஓட்டங் களுடனும் சகிப் அல்ஹசன் ஓட்டமெத னையும்பெறாத நிலை யிலும் களமிறங் கினர். 78 ஓட்டங் களுடன் கையிஸை வீழ்த்தினார் சகிப் அல் ஹசன். 9 ஓட்டங்களால் அரைச்சதத் தைத் தவற விட்டார் ரசிட். பின் வரிசை பெரிதாக இல்லை. சகல இலக்குகளையும் இழந்து 295 ஓட்டங்களைக் குவித்தது பங்களாதேஷ்.

பந்துவீச்சில் இங்கிலாந்தின் சார்பாக ரசிட் 4 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க இங்கிலாந் துக்கு இலக்காக 273 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்ப வீரர்க ளான குக், டக் லெட் இணை சிறந்த இணைப் பாட்டத்தை வழங்கியது. இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டது. நூறாவது ஓட்டத்திலேயே இலக்குச் சரிவும் ஏற்பட்டது. 56 ஓட்டங்களுடன் லக்லெட் ஆட்டமிழந் தார். வீழ்த்தி யவர் மிராஸ். ரூட் ஒரே ஓட்டத் துடன் பவிலியன் திரும்பினார். குக்கின் ஆட்ட மும் மிராஸால் முடிவு கண்டது. இங்கிலாந்தின் மத்திய வரிசை வீரர்கள் ஒற்றை இலக்கத்துடனேயே இன்னிங்ஸை முடித்துச் சென்றனர். சகிப் அல் ஹசன், மிராஸ் இருவரதும் சுழல் பந்துவீச்சுக்கு அவர்களால் முகம் கொடுக்க முடிய வில்லை. ஸ்ரோக்ஸ் பெற்ற 25 ஓட்டங் களே ஆரம்ப வீரர்களை விட பிறி தொரு வீரர் பெற்ற அதிகூடிய ஓட்டங் களும் இரட்டை இலக்க ஓட்டமுமாகும். 164 ஓட்டங்களில் இங் கிலாந்து சுருண் டது. 108 ஓட்டங்களால் வெற்றிபெற்று வர லாறு படைத்தது பங்களாதேஷ். (ம)





# விபுலானந்தன் கிண்ணத் தொடர் திருக்குடும்ப கன்னியர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை பொன். விபுலானந்தன் ஞாப கார்த்த கிண்ணத்துக்காக 19 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிகளுக்கு இடையில் நடத் திய கூடைப்பந்தாட்டத் தொடரில் திருக் குடும்ப கன்னியர் மட அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந் தாட்டத் திடலில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. திருக் குடும்ப கன்னியர்மட அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி மோதியது. நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் கால் பாதியை 11:01 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய திருக்குடும்ப கன்னியர் மட அணி இரண்டாவது கால் பாதியிலும் 09:05 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. முதல் பாதியின் நிறைவில் அந்த அணி 20:6 என்ற அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது.

மூன்றாவது கால்பாதியை 05:03 என்ற அடிப்படையில் கைப்பற்றியது வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை. நான் காவது கால் பாதி 14:01 என்ற அடிப்படையில் திருக்குடும்ப கன்னியர் மட அணியின் வசமானது. முடிவில் அந்த அணி 37:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக ரெலோ அமைப்பின் கொள்கைப் பரப்புச் செயலாள ரும், சிவன் அறக்கட்டளையின் ஸ்தாபகரு மான க.வேலாயுதம் கலந்துகொண்டார். (ம-23)

# மைலோ கிண்ண முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 31

மைலோ கிண்ணத் தொடரில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள அணி களுக்கு இடையிலான ஆட்டங்களில் சென். சேவியர், விண்மீன், கழுகுகள், திக்கம் இளை ஞர், நெடியகாடு இளைஞர் அணிகள் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறின.

கழுகுகள் வி.கழக மைதானத்தில் தொடர் நடை பெற்று வருகிறது. நேற்று இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் விண்மீன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் தொண்டமானாறு ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் கழுகுகள் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றுமொரு ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் நெடியகாடு இளைஞர் விளை யாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)




**உடுவில் மகளிர் கல்லூரி தரம் 6 இற்கான விசேட அனுமதி**

புலமை பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளுக்கு மேல் எடுத்த பிள்ளைகளுக்கு விசேட புலமைப்பரிசில் வழங்கப்படும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10.11.2016

அதிபர்

**பணிநிலை வேண்டுகை**

1. வரவேற்பாளர்
2. வெல்டர்ஸ்
3. பனர் மெசின் இயக்குநர்
4. பைன்டிங்

(முன் அனுபவம் அவசியம்)







31.10.2016 திங்கட்கிழமை நேரில் சமுகம் தரவும்

ES Printers

359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# காங்கேசன்துறை ஐக்கிய அணி மஞ்சிக் கிண்ணத்தை வென்றது



யாழ்ப்பாணம், ஒக். 31

இலங்கை கரப்பந்தாட்ட சம்மே ளனம் யாழ். மாவட்ட கரப்பந் தாட்டச் சங்கத்துடன் இணைந்து நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் காங்கேசன் துறை ஐக்கிய அணி சம்பியனா னது.

ஆவரங்கால் மத்திய விளையாட் டுக் கழக மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் நடை பெற்றது. காங்கேசன்துறை ஐக்கிய அணியை எதிர்த்து கோப்பாய் ஹரிஸ் அணி மோதி யது. முதலாவது செற்றை 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் கைப்பற்றியது ஐக்கியம். அடுத்த இரு செற்களையும் முறையே 27:25, 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஹரிஸ், 2:1 என்ற செற் கணக்கில் முன்னிலை வகித்தது. இறுதி இரு செற்க ளையும் கைப்பற்றினாலேயே ஐக்கியத்தால் சம்பியனாகலாம் என்ற நெருக்கடி நிலையில், அந்த இரு செற்களையும் முறையே 25:17, 15:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஐக்கியம், 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)

# மகாஜனா - மானிப்பாய் இந்து இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 31

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத் திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம், குறித்த கல்லூரி மைதானத்தில் இன்று நடை பெறவுள்ளது. தெல்லிப் பழை ம காஜனக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. மூன் றாமிடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல் லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.